Juda

www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

செப்.05-11,1999

ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 325



## ஆயுதப் படையின் 50 ஆண்டுகள்

## விரிவடைந்துள்ள டாங்கி எதிர்ப்பு படையணி



## —வீரன் தான் பிரீன்—

## தொடரும் பயணம்

### புதிய எழுச்சித் தொடர் ஆரம்பம்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com

# முரசம்

## உதவாது விட்டால் உதை

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

புலிகளின் மனதைப் புரியாமல்
இருப்பதே
சமாதான முயற்சிகளுக்கு
முட்டுக்கட்டை என்று
கூறியுள்ளார் அமைச்சர் கதிர்காமர்!

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு
அவர் கொடுத்துள்ள விளக்கம் அது!

வெளியுலகை திருப்தி செய்தல்
என்பதில்தான்
தற்போதைய அரசாங்கம்
கண்ணும் கருத்துமாக உள்ளது!

அதற்கு தோதான
வெளிநாட்டமைச்சராக
இருக்கிறார் கௌரவ கதிர்காமர்!

ஒரு தமிழர் மூலமே
இத்தகைய பிரசாரங்களை
மேற்கொள்ளக் கூடியதாகவிருப்பது
சந்திரிக்கா அரசாங்கத்திற்கு
கிடைத்துள்ள அனுகூலமாகும்!

கதிர்காமரும், நீலனும்
இலங்கை அரசுக்கு கிடைத்த
இரட்டைக் குழாய் துப்பாக்கிகள்!

எனினும் நீலனின்
வெற்றிடத்தை
கதிரர் மட்டுமே நிரப்புவதற்கு
இயலுமா என்பது சந்தேகமே!

எனினும் கதிரர்
உள் ஒன்று வைத்து
புறமொன்று பேசுபவரல்ல!

தனது கொள்கையை
நேராக பகிரங்கமாக
பிரசாரம் செய்து வருகிறார்.

அவரது பிரசாரத்தில்
விவேகம் இருக்கலாம்
விபரம் இருக்கிறதா
என்பதே வினா!

புலிகளின் மனதை
புரிந்துகொள்ள முடியாமல்
இருப்பது உண்மையாகவிருக்கலாம்!

தம்மை தாங்கி நின்று
ஆதரிக்கின்ற
தமிழ்க் கட்சிகளது
மனங்களையுமா
அரசால் புரிய முடியவில்லை?

அரை குறையான
தீர்வுப் பொதியை
முன்வைக்கும் போது
அரசாங்கம் கூறியது என்ன?

புலிகளுடன் பேசவும்
மாட்டோம்!
"பொதியை அனுப்பவும்
மாட்டோம்!
தமிழ் மக்களுக்காகவே
தீர்வை முன்வைப்போம்!"
என்றுதான் உரைத்தனர்!

பின்னர் இப்போது
புலிகள்தான்
முட்டுக்கட்டை என்பது
முரண்பாடாக உள்ளதே!

அரச சார்பான
தமிழ்க் கட்சிகள்கூட
அரசாங்கத்தின் பொதியை
ஏற்கவே இல்லையே!

அப்படியானால்
தம்மை நாடி வந்த கட்சிகளது
மனதைக்கூட அரசாங்கத்தால்
புரிந்து கொள்ள முடியவில்லை
என்றுதானே அர்த்தம்!

பாராளுமன்ற அரசியல்
பாதைக்கு வந்துள்ள
'ரெலோ'மீது வவுனியாவில்
வன்மையான தாக்குதல் நடந்துள்ளது!

விசேஷ அதிரடிப்படையினரே
துப்பாக்கியால் சுட்டும்
கண் மூடித்தனமாகத் தாக்கியுமுள்ளனர்!

ரெலோ தாக்கப்படுவது
இது முதல் முறையல்ல
இரண்டாவது முறை!

எனவே இது தற்செயலல்ல!
வவுனியாவில் ரெலோ
படையினருடன் இணைந்து
செயற்பட மறுத்தாலும்
ஏனைய பகுதிகளில்
இணைந்தே செயல்பட்டுவந்தது!

அவ்வாறிருந்தும்
படு மோசமாக
ரெலோ உறுப்பினர்கள்
தாக்கப்பட்டுள்ளனர்!

புலி வேட்டைக்கு
உதவாது விட்டால்
தமிழ்க் கட்சிகள்மீதும்
புலி முத்திரை குத்தப்படும்!

ஏனெனில்
தமிழ்க் கட்சிகளை
ஆட்சியாளரும், படையினரும்
உயிர் வாழ அனுமதித்திருப்பதே
புலிகளுக்கு எதிராக
பயன்படுத்துவதற்காக மட்டுமே!

அந்த பயன்பாடு கிட்டாதெனில்
துச்சமாக தூக்கியெறிவர்
என்பதற்கு மிகச் சிறந்த
உதாரணம்தான்
ரெலோமீதான தாக்குதல்!

ஆயுதப் போராட்டத்தை
கைவிட்டு வந்த
அமைப்பொன்றுக்கு
வழங்கப்பட்டுள்ள
மரியாதை இதுதான்!

புலிகள் ஆயுதங்களை
கைவிட வேண்டும் என்றும்
கதிரர் முன்னர் கூறியிருந்தார்!

ஆயுதப் போரை கைவிட்ட
ரெலோ மீதான தாக்குதலுக்கு
கதிரர் என்ன செய்யப்போகிறார்?!

உதட்டளவான உபதேசங்கள்
உலகை திருப்திப்படுத்தும்
பிரசாரங்கள் என்பவை
இங்கு பற்றி எரியும்
பிரச்சனைக்கு பரிகாரமாகாது!

நடந்து வரும் நிகழ்வுகள்
நம்பிக்கை தருவதாக
அமையவில்லை.

*மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்*

# ஆன்மீகம்

## சிவாயநம – நமசிவாய

'சிவாயநம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயமொரு நாளுமில்லை' என்பது சைவ சமயிகளின் திருமந்திரங்களில் ஒன்று. 'சிவாயநம' என்பதை இடையில் உடைத்து-பின் புறமுள்ள 'நம' என்பதை முன்னால் வைத்து, முன்புறமுள்ள 'சிவாய' என்ற மூன்றெழுத்தையும் பின் புறம் சேர்த்தால் 'நமசிவாய' என்ற பஞ்சாட்சரம் உருப் பெற்று விடும். பஞ்சாட்சரத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லும்போது 'நமசிவாய-சிவாயநம' என்று மாறி மாறி வரும்.

இப்பஞ்சாட்சரத்தை மனதில் பதித்து-புலன்களைச் சிதற விடாமல் ஜபித்து வருபவர்களது துன்பங்களனைத்தும் தீய்ந்து போகும். அபாயம் என்பது அணுகாது.

பிரச்சனைகளும் சிக்கல்களும் துன்பங்களும் ஒருவருக்கு ஏற்பட அடிப்படைக் காரணம்-பேராசைதான். எவனொருவன் பேராசையை ஒழிக்கிறானோ அவனுக்கு எத்துன்பமும் துயரமும் வரப்போவதில்லை. 'சிவாய நம' என்று சிந்தித்திருப்பவர் எவருக்கும் பேராசை என்ற பேய் வந்து ஒட்டாது. ஆகவே எமை வாட்டும் துன்ப துயரங்கள் மறைய சிவாயநம என்ற சிந்தனையில் மூழ்குங்கள்.

ஞானேந்திரன்.



## எண்ணத்தின் சிறப்பு

இறைவன் ஒருவனுக்கு கல்வியைக் கொடுக்கிறான்: அவற்றின் மூலம் அவன் நன்மைகளைச் செய்கிறான். வேறொருவனுக்கு செல்வத்தைக் கொடுக்கிறான் அதனை அறியாமல் வீண் காரியங்களில் செலவு செய்கிறான். இவனைப் பார்க்கும் வேறொருவன் 'எனக்கும் செல்வமிருந்தால் அவன் போலவே நானும் செயல் புரிவேன்' என்று நினைக்கிறான். இவ்விரண்டு பேரும் ஒரே தண்டனைக்குட்பட்டவர்களே! மனிதனின் எண்ணமே ஒருவனை நல்லவனாகவும், கெட்டவனாகவும் ஆக்கி விடுகிறது. (திரு நபி (ஸல்)

மணல் மேட்டின் பக்கமாக ஒரு பெரியார் நடந்து கொண்டிருந்தார். அம்மேட்டைப் பார்த்த அவர் 'இந்த மணல் மேடு உணவு குவியலாக இருக்குமானால் அவைகளை ஏழைகளுக்கு வாரி வழங்கியிருப்பேனே' என்று தம் மனத்தில் எண்ணம் கொண்டார். அவருடைய தூய்மையான எண்ணத்தை அறிந்த இறைவன் நபிக்கு கீழ் கண்டவாறு வஹி அனுப்பினான்.

மணல் மேட்டின் அளவு உணவு குவியலை தர்மமாக வழங்கினால் எவ்வளவு நன்மையுண்டோ அந்த நன்மையை அப்பெரியாருக்கு எழுதி விட்டதாகக் கூறினான்.

(நூல்-தன்பீஹில் காபிலீன்)

வை.எம்.தாஹிர்கரீம், கல்முனை-06.

# கவிதைப் போட்டி இல. 322



**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### பரிசுக்குரிய கவிதை

### முகம் காட்டு

**எரிமலையின் வாசலிலே
நிற்கின்ற போது
தீ சுட்டதென்று
மனம் புண்படலாமா?
வீரப் பெண்மணியாய்
உலகம் பார்க்கும்
வண்ணம்
நேர் முகம் காட்டு!**

ம.திருவரசுராசா-வவுனியா.

### காந்தியின் புதல்வி

காதையும்
நீ-பொத்தினால்,
காந்தியின்
புதல்வி!

என்.தனுசுஜன்- சண்டிலிப்பாய்,
யாழ்ப்பாணம்.

### முகம் காட்டு

உன்னிடத்தில்
என்னைக்
கொடுத்தேன்
நிலவே நீ
முகம் காட்டு!

ஜீ.கே.யோகச்சந்திரன்-
அக்கரைப்பற்று.

### பா(ர்)வை

அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்
கைதானாள்
கரும்புலியென.

க.இளமதி-இறம்பைக்குளம்,
வவுனியா.

### முகமூடி

முடி சூட வேண்டி
முகமூடி அணிந்தாய் அன்று
முடிவெடுக்க முடியாமல்
முகம் மூடி நின்றாயோ இன்று?

சி.மு.சுந்தரேசன்- அரசினர்
வைத்தியசாலை, மஸ்கெலியா.

### இல்லை

அம்மணி
கண்ணை மூடிவிட்டால்..
உலகம்..
இருண்டு வி(டாது)டுமா?

ந.மதி-மோதர

### நோக்கு

ஞாலத்தை நோக்குதற்கு
ஞானக்கண் இருக்கையிலே
ஊனக் கண் எதற்கு என்று
உள்ளம் நினைத்ததுவோ!

எம்.நிரஞ்சுலாதேவி- மொனராகலை.

### விடியல்!

விலக்கு
திரையை;
விடியல்
காலடியில்!

அ.கௌரிதாசன்-
கிண்ணியா.

### மூன்றாம் பிறை

அகத்துயர் மறைத்திட
முகத்திரையோ?..
அகதி வாழ்க்கையில்
அமைதி என்பது
மூன்றாம் பிறையே!

ரவீந்திரநாத் அரவிந்தன்-
"உதயா" அக்கரைப்பற்று-08.

### கண்ணாமூச்சி

பொதி வருகுதாம்
பொதி...
தீர்வு வருகுதாம்
தீர்வு...
தேர்தல் வருகுதாம்
தேர்தல்...!


வை.சித்திகிருஷ்ணா-
பாண்டிருப்பு-01

### தணிக்கை

பெண்ணே!
உன் முகமென்ன
இராணுவச் செய்தியா?
தணிக்கை செய்வதற்கு!

சபீர் ஹஸன்-பல்லேகம, தெல்தோட்டை.

# கவிதைப் போட்டி இல.325



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 11.09.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.325
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

## வாக்குகள்மீது நாட்டம்



அன்புள்ள முரசுக்கு;

யாழ் குடாநாட்டில் மட்டுமல்ல நாடெங்குமே தமிழ் மக்கள் பல இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள். அவ்வாறு இருந்தும் யாழ் குடாநாட்டு பிரச்சனைகள் என்றதும் அறிக்கைவிட தமிழ்க் கட்சிகள் இடையே போட்டி நடக்கிறது. இந்தப் போட்டிக்கு காரணமாக இருப்பது, அங்குள்ள வாக்காளர் எண்ணிக்கையும், பாராளுமன்ற ஆசன எண்ணிக்கையும்தான்.

மட்டக்களப்பு வாகனங்களுக்கு கொழும்பு வருவதற்கு தடை போடப்பட்டது. அப்போதும் தமிழ்க் கட்சிகள் எதிர்க்கவில்லை.

மக்கள் மீது பழிவாங்கும் தாக்குதல்கள் தொடர்கின்றன. அண்மையில் கறுப்பு உடை படையினரின் தாறுமாறான கைதுகள் பற்றியும் இக் கட்சிகள் காட்டமாக எதிர்த்து நிற்கவில்லை. இதேபோல வன்னி மக்கள் துயர்கள் குறித்தும் பாராமுகமாகவே உள்ளன. வாக்கு தேடும் வசதிக்கு ஏற்பவே இந்தக் கட்சிகள் வாய் திறக்கின்றன.

அ.மணிவாசகம்- கல்லாறு.

மோனிக்கா அட்டகாசம். கிளின்ரனை மயக்கிய காரிகையின் இளமைக்காலம் சோகம் கலந்தது. பெற்றோரின் பிணக்குகள் பிள்ளைகளை சீரழிக்கும் என்பதற்கு மோனிக்கா நல்ல உதாரணம்.

எம்.புவனேந்திரன்-
கனடா.

முரசே! இயக்குநர் சக்தியின் அனுபவத் தொடர் நன்றாக உள்ளது. நடிகையாவதற்கு முன்னர் எத்தனை இடர்களைத் தாண்டவேண்டியுள்ளது. நடிகைகளின் வாழ்க்கை எத்தனை சோகமானது என்பதை சக்தியின் தொடரும், அதற்கு முன்னர் அன்புத் தோழி ஸ்ரீவித்யா எழுதிய தொடரும் நமக்கு உணர்த்தியுள்ளன.

செல்வி து.மிருளாளினி,
சிலாபம்.

'மோனிக்கா என் மோனிக்கா' ஆரம்பமே விறு விறுப்பாக உள்ளது. சுமந்துவரும் முரசுக்கும், புவனாவுக்கும் பாராட்டுக்கள்.

செல்வி சாந்தி சுப்பிரமணியம்,
பதுளை.

பௌத்த ஆலயங்கள் நிறுவப்பட்டு வன்னி நிலம் உருமாற்றப்படும். போரில் வென்றதும் குடியேற்றம் நடக்கும். தொன்மையான பௌத்த பிரதேசங்கள் என்றும் உரிமை கூறப்படும். அதுதான் திட்டம் என்பது கூடவா தெரியவில்லை?

இ.ராசலிங்கம்-
கொழும்பு-08.

இளவரசி டயானாவின் 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' முடிவடைந்த சூட்டோடு, மோனிக்காவை விறு நடையோடு தரும் புவனாவுக்கு நன்றி. நாம் எதிர்பார்த்ததை விட மோனிக்கா வேகம்.

ஜெஸ்மின் நபீஸ், மருதமுனை.

## சிந்தனைக்கு

'கோகிலா என்ன செய்துவிட்டாள்' ஜெயகாந்தனின் அற்புத படைப்புக்களில் ஒன்று. அக் கதை வெளியாகும் பக்கத்தில் அடுத்து வரும் தொடரும் சிந்தனைக்கு விருந்தாக அமையவேண்டும். 'தாய்' 'தூக்கு மேடைக் குறிப்பு','கோகிலா' போன்ற அருமையான படைப்புக்களையே அப் பக்கத்தில் எதிர்பார்க்கிறோம்.

எம்.சைலஜா, வவுனியா.

**'கோகிலா என்ன செய்துவிட்டாள்' அருமையான குடும்பக் கதை. அதே பக்கத்தில் வெளியான 'தாய்' புத்தகமாக வெளியிட்டாலும் நன்று. கண்ணதாசனது அரங்கம் அந்தரங்கம் சிறப்பாயுள்ளது. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் பதவியாசை பிடித்த நரிகள் இப்படித்தான் இருப்பார்கள்.**

எஸ். முரசொலி.

முரசே! ஒவ்வொரு வாரமும் தித்திக்கும் சிந்தனை முத்துக்களை அள்ளிவரும் முரசே! உன்னில் எந்தக் குறையும் காணமுடியாது. நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் பாராட்டக் கூடியவை. உன்னை அள்ளி பருகுகின்றவர்களில் நானும் ஒருத்தி.

க. கவிதாஞ்சலி, சொன்டிப்.

## பாராளுமன்றம் எதற்கு?

முரசுக்கு,

பாராளுமன்றவாதம் தொடர்பாக இராஜதந்திரி விளக்கியிருந்தார். பாராளுமன்றத்தை பிரசார மேடையாக பயன்படுத்துவோம். துரோகிகள் செல்லாமல் தடுப்பதற்காக செல்கிறோம் என்றுதான் கூட்டணியினர் கூறினர். அதன்படி அவர்கள் நடந்திருந்தால் தலைமைத்துவமாக தொடர்ந்தும் இருப்பர். ஆனால் பாராளுமன்றத்தால் பயன் உண்டு என்று காண்பித்து தமது பதவிகளுக்கு கௌரவம் தேட ஆரம்பித்தனர். தமது ஆதரவாளர்கள் சிலருக்கு வேலை வாய்ப்பு, கோட்டா என்பவற்றை பெற்றுக் கொடுத்தனர். மிஞ்சி மிஞ்சிப் போனால் எத்தனை பேருக்கு வேலை பெற்றுத் தருவீர்கள். சிங்கள மக்களுக்கே வேலை இல்லை. தமிழ் மக்களுக்கு வேலை எங்கே தரப்போகிறார்கள்? என்று கேட்டோம்.

ஒரு நூறு பேருக்கு வேலை பெற்றுக் கொடுத்தனர். ஆனால் இனத்தின் நலனையே அடகுவைத்து பல்லாயிரம் பேர் பலியாக வழிவகுத்தனர். சலுகைகள் பெற்றுத்தர வேண்டுமானால் நாம் அரச கட்சி முகவர்களுக்கே புள்ளடி போட்டிருப்போம். தமிழ்க் கட்சி எம்பிகளால் நூறு பேருக்கு வேலை தரமுடிந்தால், அரச கட்சி முகவர்களால் ஐநூறு பேருக்கு வேலை பெற்றுக் கொடுக்க முடியும். அல்பிரட் துரையப்பா எத்தனை ஆயிரம் பேருக்கு வேலை பெற்றுக் கொடுத்தார் தெரியுமா?

ஆகவே பாராளுமன்றத்தை பயன்படுத்தி எம்பி பதவிகளை பயன்படுத்தி அரசை எதிர்த்து உலக அரங்கில் போர்க்கொடி உயர்த்துங்கள். பாராளுமன்றத்தை சலுகைகளின் விளை நிலமாக, உரிமை பெறும் களமாக ஏமாற்றாதீர்கள் என்று தற்போதைய த.கட்சியினரையும் கேட்டுக்கொள்கிறேன்.

வி.அருமைநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)- யாழ்ப்பாணம்.

## உருமாற்றம்

முரசே!

குடியேற்றத்திட்டத்தால் வன்னி உருமாறிக் கொண்டிருப்பதை இராஜதந்திரி சுட்டிக்காட்டியிருந்தார். வலிகாமச் சுவீகரிப்பு திட்டத்தை நிரந்தரமாக கைவிட வைக்கக்கூட தமிழ்க் கட்சிகளால் முடியவில்லை. வன்னி நில உருமாற்றம் பற்றியோ குரல் கொடுத்து போராடப் போகிறார்கள்?

எம்.சிவக்குமாரன், கிளிநொச்சி.

## அடிமைச் சாசனம்

பாராளுமன்றத்தை காட்டி தமிழ் மக்களை ஏமாற்றும் தமிழ்க்கட்சிளது தந்திரம் பலிக்காது. 50 ஆண்டுகளாக பாராளுமன்ற அரசியல் பெற்றுத் தந்தது யாவும் அடிமைத்தனமான சாசனங்களைத்தான். தாம் மீண்டும் மீண்டும் எம்பிகளாவதற்காக பாராளுமன்றத்தை பெரும் நிறுவனமாகக் காட்டுகிறார்கள். இதனைத்தான் முன்னாள் தலைமைகளும் செய்தன.

சி.குருபரன், மட்டக்களப்பு.

**மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):– 074-513266**

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.



படிப்பகம்

www.padippakam.com

# வவுனியாவில் மறுபடி ஆட்கடத்தல்!
## இளைஞர்கள் எண்மர் மாயம்!

வவுனியா நகரில் முன்பு ஆட்கடத்தல், மர்மக் கொலைகள் சகஜமாக நடந்து வந்தன. பின்னர் ஓய்ந்திருந்தன.

தற்போது மறுபடி ஆட்கடத்தல் சம்பவங்கள் தலைதூக்கியுள்ளன. கடந்த ஆகஸ்ட் மாதம் மட்டும் எட்டு தமிழ் இளைஞர்கள் வவுனியா நகரில் காணாமல் போயுள்ளனர்.

11.08.99 அன்று செல்வச்சந்திரன் சதீஸ்குமார் (24) என்பவர் காணாமல் போயுள்ளார். இவர் யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியைச் சேர்ந்தவர். சூரியக்கதிர் நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்து வன்னியில் வசித்து வந்தார்.

இவரது தாயாருக்கு இரண்டு கண்களும் பார்வை போனதால், சிகிச்சைக்காக வவுனியா அழைத்து வந்தார். பண்டாரிக்குளத்தில் தங்கியிருந்தார்.

11.08.99 அன்று மாலை தாயாருக்கு ஆஸ்பத்திரியில் சாப்பாடு கொடுத்துவிட்டு வீடு திரும்பும்போதே கடத்தப்பட்டதாகத் தெரிகிறது.

இவருடன் கூடச் சென்ற நடராஜா சுரேஸ்குமார் (24) என்னும் இளைஞரும் கடத்தப்பட்டுள்ளார். இவர் சிவபுரம் கிளிநொச்சியை சொந்த இடமாகக் கொண்டவர். வவுனியா பண்டாரிக்குளத்தில் தற்காலிகமாக தங்கியிருந்தார்.

22.08.99 அன்று கதிர்காமன் ரமணன் (28) என்பவரும் வவுனியாவில் காணாமல் போயுள்ளார். இவர் யாழ்ப்பாணம் கைதடியைச் சொந்த இடமாகக் கொண்டவர்.

இவரது தாயார் வவுனியா மருத்துவமனையில் தாதியாக வேலை பார்க்கிறார். இவர் மகாஇறம்பைக் குளத்தில் தங்கியிருந்தார்.

இவர்கள் தவிர வவுனியா நகரில் மேலும் ஐந்துபேர் காணாமல் போயுள்ளனர். ஆயினும் அவர்களது பெற்றோர்கள் முறையிடவோ, விபரங்களைக் கூறுவதற்கோ அஞ்சுகின்றனர்.

காணாமல் போனோரின் குடும்பத்தினர் வவுனியாவில் உள்ள சகல தமிழ்க் கட்சி அலுவலகங்களிலும் விசாரித்துள்ளனர். இராணுவ முகாம்களிலும் விசாரித்தனர். எங்கும் கைவிரிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் நாட்டில் ஈழ ஆதரவு பிரசாரம்!
## தேர்தல் பிரசாரத்தில் மறுபடி ஆதரவு அலை!

தமிழ்நாடு மாநில பாராளுமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் பிரசாரத்தில் தற்போது மறுபடியும் ஈழ ஆதரவு நிலைப்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன.

பாரதிய ஜனதா கட்சியுடன் இணைந்து பாட்டாளி மக்கள் கட்சி இம்முறை போட்டியிடுகிறது.

இக் கட்சியும், இதன் தலைவர் டாக்டர் ராமதாசும் நீண்டகாலமாக இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசி வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பை இந்தியாவில் தடைசெய்த போதும் டாக்டர் ராமதாஸ் பிரபாகரனையும், புலிகளையும் பாராட்டி வந்தார்.

இலங்கைத் தமிழர்களது பிரச்சனைக்கு தமிழீழமே ஒரே தீர்வு என்று முதன் முதலில் தீர்மானம் இயற்றிய தமிழகக் கட்சி தி.மு.க.

தற்போது தி.மு.க. இலங்கை இனப் பிரச்சனை விவகாரத்தில் முன்னைய தீவிரத்தைக் காண்பிப்பதில்லை.

கடந்த பாராளுமன்றத் தேர்தலிலும் வை.கோ.தலைமையிலான ம.தி.மு.க. பாட்டாளி மக்கள் கட்சி ஆகிய இரு கட்சிகளும் இலங்கைத் தமிழர் இன்னல் தீர தமிழீழமே ஒரே தீர்வு என்று தத்தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருந்தன.

இம்முறையும் அவை இரண்டும் அதே நிலைப்பாட்டையே முன்வைத்துள்ளன.

எனினும் சென்ற முறையைவிட இம்முறை பாட்டாளி மக்கள் கட்சியின் தேர்தல் பிரசாரங்களில் இலங்கைத் தமிழர் பிரச்சனை பற்றி உரத்துப் பேசப்பட்டு வருகிறது.

இலங்கையில் தமிழர்களும், அவர்களது தேசியத் தலைமையும் அழிக்கப்படுவதை தமிழ்நாட்டு தமிழர்கள் வேடிக்கை பார்த்து நிற்க முடியாது.

இந்திய அரசு தமிழீழத்தையும், அதன் தேசியத் தலைமையையும் அங்கீகரிக்குமாறு பாட்டாளி மக்கள் கட்சி கோரும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் பிரசாரம் செய்து வருகிறார்.

ராஜீவ் கொலைக்குப் பின்னர் தேர்தல் பிரசாரத்தில் மறுபடி ஈழ ஆதரவு நிலை உரக்கப் பேசப்படுவது இத் தேர்தலில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் ராமதாஸ் அமெரிக்கா செல்வதற்கு அமெரிக்கத் தூதரகம் மறுத்திருந்ததும் தெரிந்ததே. அந்தளவுக்கு டாக்டர் ராமதாஸ் ஈழ ஆதரவாளராக அறியப்பட்டுள்ளார். ஆயினும் கடந்த தேர்தலில் ஈழ ஆதரவு நிலைப்பாட்டை இம்முறைபோல பெரியளவுக்கு முன்வைக்கவில்லை.

### பதிலடி

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி கார்க்கில் பிரச்சனையில் பாரதிய ஜனதாவை குறை கூறி வருகிறார்.

இதற்கு பதில் அளித்துவரும் பிரதமர் வாஜ்பேய், இலங்கைக்கு படை அனுப்பியது மட்டும் சரியான செயலா? என்று பதிலடி கொடுத்து வருகிறார்.

இப் பதிலடியும் இலங்கைக்கு இந்தியப் படை வந்தது தவறு என்றும் புலிகளது நிலைப்பாட்டை ஒத்ததாகவே உள்ளது. இதனையிட்டு பாட்டாளி மக்கள் கட்சி, ம.தி.மு.க ஆகியவை உள்ளூர மகிழ்ச்சி கொண்டுள்ளன.

தற்போதைய நிலவரப்படி தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா, தி.மு.க., ம.தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சி ஆகியவற்றை உள்ளடக்கிய தேசிய ஜனநாயக கூட்டணியே முன்னணியில் நிற்பதாக முரசுக்கு நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன.

மத்தியிலும் பாரதிய ஜனதா மறுபடியும் பெரும் கட்சியாக ஆசனங்களைக் கைப்பற்ற உள்ளது.

இந்நிலையில் தமிழ்நாட்டில் மறுபடி ஈழ ஆதரவு நிலைப்பாட்டை பாரதிய ஜனதாவின் நட்புக் கட்சிகள் முன்வைத்து வருவது குறிப்பிடத்தக்க விஷயமாக அரசியல் நோக்கர்களால் கருதப்படுகிறது.

# சட்டத்திற்கு மாறான விதி
## வழக்குத் தொடுக்கிறார் குமார்

யாழ் குடாநாட்டுக்கு செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டும் என்பது சட்டப்படியான விதியல்ல. அவ்வாறிருக்க அந்த விதியின் கீழ் யாழ் செல்ல தமக்கு அனுமதி மறுக்கப்பட்டதை கண்டித்து குமார் பொன்னம்பலம் வழக்குத் தொடுக்க இருக்கிறார்.

வழக்குத் தொடர்பான ஆவணங்கள் யாவும் தயார் நிலையில் உள்ளன. சட்டரீதியான சில முன்னேற்பாடுகள் தற்போது நடந்து வருகின்றன.

யாழ் குடாநாட்டில் செம்மணி புதைகுழி விவகாரத்தில் தமது சார்பாக ஆஜராகும்படி, காணாமல் போனோரின் உறவினர்கள் சங்கத்தினர் குமார் பொன்னம்பலத்தை அழைத்துள்ளனர்.

"தற்போது நமக்காக துணிந்து குரல் கொடுக்கக்கூடிய ஒரே ஒருவர் நீங்கள்தான். உங்கள் வரவை எதிர்பார்த்து இருக்கிறோம்" என்று அவர்கள் குமாருக்கு கடிதம் எழுதி இருக்கிறார்கள்.

இதனையடுத்தே யாழ் சென்று ஆஜராக குமார் பொன்னம்பலம் முன்வந்தார். பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றால்தான் யாழ்ப்பாணம் செல்ல முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

### விளக்கம்

இதற்கிடையே பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தன்னுடன் பேசியதாகவும், விமானப்படையின் விமானம் என்பதால் அதில் பயணம் செய்வோர் பற்றி நாம் நன்கு அறிய வேண்டியுள்ளது. ஆகவேதான் இந்தவிதி அமுலில் உள்ளது' என்று கூறியதாகவும் குமார் தெரிவித்தார்.

'ஆனால் தனியார் விமான சேவை உள்ளபோதே பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கோரப்பட்டது எனக்குத் தெரியும். தவறான விதிகளை நியாயப்படுத்தவே பாதுகாப்பு அமைச்சு முயற்சிக்கிறது என்று குமார் கூறியுள்ளார்.

குமார் பொன்னம்பலம் தமிழ்காங்கிரஸ் கட்சித் தலைவர். நாடறிந்த பிரபல சட்டத்தரணி. அவ்வாறு இருந்தும் அவருக்கும் பாதுகாப்பு அமைச்சு 'கிளியரன்ஸ்' வழங்குவது என்பது வேண்டுமென்றே கெடுபிடி செய்யும் விதிமுறைகள் பேணப்படுவதையே உறுதி செய்வதாக மனித உரிமை அமைப்புக்கள் சில கூறியுள்ளன.

# கல்கிசையில் வெடி பொருட்கள்
## முக்கிய உறுப்பினர் நழுவினார்

கொழும்பில் புலிகள் இயக்க முக்கிய உறுப்பினர் ஒருவரை பற்றிய தகவல் பொலிசாருக்கு எட்டியிருந்தது.

அந்த உறுப்பினரைக் கைது செய்ய மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை என்று தெரிகிறது.

இதன்பின்னரே அவருடன் தொடர்பானவர்கள் என்ற சந்தேகத்தில் வெள்ளவத்தை தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றில் நான்குபேர் கைதாகி விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

கல்கிசையில் கண்டுபிடிக்கப்பட்ட வெடிபொருட்கள் தொடர்பாகவும், கொழும்பில் மேற்கொள்ளப்பட இருந்த சில தாக்குதல்கள் தொடர்பாகவும் தேடப்பட்ட புலி உறுப்பினரே தப்பிச் சென்றுள்ளார்.

'எரிக்' என்று அழைக்கப்படும் அவர், தன்னைப் பற்றிய விபரங்கள் பொலிசாருக்கு தெரியவந்ததை அறிந்ததும் விமானம் மூலம் இந்தியா சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

# மறுபடி புளொட் நகர்வலம்!
## ரெலோ மீது சந்தேகம்!

வவுனியாவில் புளொட், ரெலோ இயக்கங்களுக்கிடையே முறுகல் நிலை அதிகரித்துள்ளது. இதேவேளை வவுனியாவில் படையினருக்கும் புளொட் அமைப்பினருக்கும் இடையே மறுபடி நல்லுறவு ஏற்பட்டுள்ளது.

வவுனியாவில் மட்டும் ரெலோவுக்கும் புலிகளுக்கும் இடையே இரகசிய உறவு இருப்பதாக படையினர் சந்தேகிக்கின்றனர். வவுனியாவில் கைதான புலிகள் இயக்க உறுப்பினர், ரெலோவைத் தாக்குமாறு மேலிட உத்தரவு கிடையாது என்று கூறியதாகவும், அதனையடுத்தே ரெலோமீது சந்தேகம் தீவிரமானதாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து புளொட்-ரெலோ முரண்பாட்டில் புளொட்டை மீண்டும் ஆயுதம் கொடுத்து படையினர் பலப்படுத்தியுள்ளனர். திரும்பப் பெறப்பட்ட ஆயுதங்கள் யாவும் மறுபடி வழங்கப்பட்டுள்ளன.

தற்போது முன்புபோல வவுனியா நகரில் புளொட் ஆயுதங்களுடன் சுதந்திரமாக நடமாடி வருகிறது.

ஆகஸ்ட் 30ம் திகதி வவுனியா நகரில் நடைபெற்ற ஹர்த்தாலும், வவுனியா நகர் தமது கையைவிட்டுப் போகவில்லை என்று புளொட் காண்பிக்க விரும்பியதின் வெளிப்பாடாகவே இருந்தது.

இதற்கிடையே ரெலோ உறுப்பினர்கள் சிலர் நகரில் ஆயுதத்தோடு நடமாடியபோது பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜராக்கியே விடுதலை செய்யப்பட்டனர்.

கொழும்பில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த ரெலோ உறுப்பினர்கள் இருவரும் கைதாகியுள்ளனர்.

இந்த இருவரும் ரெலோ முகாம் அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டபோது காயமடைந்தவர்கள். இவர்களோடு காயமடைந்த மற்றொரு உறுப்பினர் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவ்வாறிருந்தும் பொலிஸ் காவலரண் மீதான தாக்குதலில் இவர்கள் இருவரும் காயமடைந்ததாகக் கூறி கைது செய்யப்பட்டுள்ளனர்.

# துஷ்பிரயோக அதிகாரிகள்
## புலிகள் விடுத்த அறிவுறுத்தல்

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில்-குறிப்பாக வவுனியா, மன்னார் பகுதிகளில் சில அரச அதிகாரிகள், பணியாளர்கள் தான்தோன்றித்தனமாக நடந்து வருவதாக புலிகளுக்கு புகார்கள் சென்றுள்ளன.

இதனையடுத்து வவுனியா, மன்னார் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேச தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளரால் அறிவுறுத்தல் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

"மக்கள் மீதான அழுத்தமும், நிர்வாக துஷ்பிரயோகமும்' என்ற தலைப்பில் விடுக்கப்பட்டுள்ள அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 'இராணுவ அழுத்தங்களால் இப்பகுதிகளில் உள்ள மக்கள் தினமும், வேதனைகளையும், சோதனைகளையும் அனுபவித்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் சில அரச, கூட்டுறவுச் சங்க அதிகாரிகள், பணியாளர்கள் போன்றோர் மக்கள்மீது கடுமையான அழுத்தங்களைப் பிரயோகிப்பதும், இராணுவ அதிகாரிகளது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதும் நடைபெற்று வருகிறது.

இதுமட்டுமன்றி மக்களுக்கான சேவையைச் செய்வதற்கு இலஞ்சம் பெற்று வருவதாகவும் தெரியவந்துள்ளது.

மக்களுக்குரிய சேவைகள் உரிய காலத்தில் செய்யப்படாது, அதற்குரிய நிதிமூலங்கள் திரும்பிச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது.

இவ்வாறு தம்மிஷ்டப்படி இனிவரும் காலங்களில் செயற்பட வேண்டாம் என்றும், எமது தேசத்துக்கு நம்பிக்கை விசுவாசமுடையவர்களாக செயற்படுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்" என்று அந்த அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நகருக்கு வெளியே தாக்குதல்

வவுனியா செட்டிகுளத்தில் 31.08.99 அன்று பொலிஸ் ஜீப்மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வவுனியா நகருக்குள் தாக்குதல் நடைபெற்றதால் பாதுகாப்பு தரப்பினர் நகருக்குள் விழிப்பாக இருந்தனர்.

வவுனியா நகரில் இருந்து 29 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள செட்டிகுளம் பகுதியிலேயே இத் தாக்குதல் நடந்துள்ளது.

தாக்குதலில் பலியான பொலிஸ் அதிகாரி வவுனியா அரந்தலாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாவார்.

கிளைமோர் தாக்குதல் நடைபெற்ற பகுதிக்கு அருகில் பாலம் ஒன்றைத் திருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் சிலரும் இச் சம்பவத்தில் காயமடைந்தனர்.

# 5000 மேலதிக அதிகாரிகள்?
## மாதாந்தம் பல கோடி ரூபாய் நஷ்டம்

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் (SLCTB) கீழ் வரும் நாடெங்கிலுமுள்ள டிப்போக்களில் அளவுக்கதிகமாக சுமார் 3500 க்கும் 5000 க்கும் இடைப்பட்ட அதிகாரிகள் தரத்திலான உத்தியோகத்தர்கள் உள்ளனர் என்று போக்கு வரத்துச் சபையின் உயரதிகாரியொருவர் 'முரசு'க்குத் தெரிவித்தார்.

இதன் காரணமாக மாதாந்தம் பல கோடி ரூபாய்களை சம்பளமாகச் செலுத்த வேண்டியுள்ளது.

இவ்விதம் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைக்கு ஏற்படும் நஷ்டத்தைப் போக்க போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு கடந்த ஆண்டில் திட்டமொன்றை வகுத்தது.

அதன்படி அளவுக்கதிகமாக உள்ள அதிகாரிகளை விலகிக் கொள்ளுமாறும் அவர்களுக்கு தகுந்த நஷ்ட ஈடு வழங்கப்படுமென்றும் கடந்த டிசெம்பர் மாதம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

இதற்கென ஏற்படும் நஷ்டாட்டு நிதியும் பாராளுமன்ற அங்கீகாரத்தின் மூலம் பெறப்பட்டது.

இது நடந்து இதுவரை ஏழு மாதங்கள் கடந்து விட்டபோதும் எந்தவிதமான மேல் நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இதன் பின்னர், இவ்வாறு கட்டாயமாக விலகிக் கொள்ள விரும்பாத உத்தியோகத்தர்கள் தமது விலகல் விண்ணப்பங்களை வாபஸ் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டது. அதன்படி அதிகமானோர் தமது விண்ணப்பங்களை விலக்கிக் கொண்டார்கள்.

இது ஒரு புறமிருக்க; புதிய கிழக்கு பஸ் போக்குவரத்து நிறுவனத்தில் ஏராளமான சாரதிகளுக்கும், நடத்துநர்களுக்கும் மற்றும் வாகனத் திருத்துநர்களுக்கும் வெற்றிடங்கள் உள்ளன.

ஊழியர்கள் பற்றாக்குறையால் சீரான போக்குவரத்துச் சேவையை நடாத்த முடியாமல் திண்டாட வேண்டியுள்ளது என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# அரசும் பௌத்தமும் உறவு
## ஜனாதிபதி கண்டியில் விபரிப்பு

"தொன்று தொட்டு அரசாங்கத்திற்கும் பௌத்த மதத்திற்கும் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க உறவைப் பேணி பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பௌத்த மத கலாசார மேம்பாட்டிற்காகவும் அதனைப் பேணிப் பாதுகாப்பதற்காகவும் அரும் பெரும் சேவையாற்றி வருகிறது." என்று ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க கண்டியில் பௌத்த மத வைபவமொன்றில் தேரர்கள் மத்தியில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

"எமது அரசாங்கம் பதவியேற்றதிலிருந்து இருபது கோடி ரூபாவுக்கு (200 மில்லியன்) மேல் பௌத்த மத கலாசார மேம்பாட்டிற்காகச் செலவு செய்துள்ளது..

எமது அரசாங்கம் மகா சங்கத்தினரின் ஆலோசனைகளைப் பெற்று அதன்படி அரசுக்கும் பௌத்த மதத்திற்கும் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க உறவைக் காத்து வருகிறது" என்றும் ஜனாதிபதி தொடர்ந்து கூறினார்.

# குண்டு வைத்தது யார்?
## புலனாய்வு உறுப்பினர் பலி

மட்டக்களப்பு-புதுநகர்ப் பகுதியில் மது போதையில் இருந்தவர்கள் தங்கியிருந்த வீட்டில் குண்டு வெடித்தது. இச்சம்பவத்தில் றாசிக்குழு உறுப்பினராக இருந்து பின்னர் இராணுவப் புலனாய்வுப் பிரிவில் சேர்ந்து கொண்ட க.கமல்ராஜ்-21 (காளி) என்பவரும் அவரது கூட்டாளியான ஐ.எம்.மரிஸ்டன்(19) என்பவரும் கொல்லப்பட்டனர். சம்பவம் 24.08.99 அன்றிரவு 11 மணியளவில் நடந்தது.

இது பற்றி அரச வானொலி தனது செய்தியறிக்கையில் "புதூர்ப்பகுதியில் வெடிபொருட்களைக் கொண்டு வந்த இருவர் அந்த வெடிப்பொருட்கள் வெடித்ததால் கொல்லப்பட்டார்கள். சடலங்களைப் பொலிஸார் கண்டெடுத்துள்ளார்கள். பக்கத்திலுள்ள பொலிஸ் காவலரணைத் தாக்க வந்த சமயமே இவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது." என்று கூறியது.

கொல்லப்பட்ட அரச துணைப்படை புலனாய்வு நபரையும் அவரது சகாவையும் பொலிஸாரைத் தாக்க வந்தவர்கள் என்று திசை திருப்பி விட்டது அரச வானொலி.

நடந்த சம்பவம் பற்றி அறியப்படுவதாவது: அன்றிரவு இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த கமல் ராஜ் மற்றும் சிவிலியன்களான மரிஸ்டன், காண்டீபன் ஆகியோர் பணம் சேர்த்து சாராயம் வாங்கி ஒரு வீட்டில் வைத்துக் குடித்துக் கும்மாளமிட்டுள்ளனர். கமல்ராஜும், மரிஸ்ரனும் அந்த வீட்டில் தூங்கியுள்ளனர். காண்டீபன் அந்த வீட்டில் தூங்கவில்லை. தனது வீட்டிற்குச் சென்றுள்ளார்.

சற்று நேரத்தில் அந்த வீட்டில் 'டோர்ச் லைற்' ஒன்றுக்குள் இருந்து குண்டு வெடித்ததில் இருவரும் பலியானார்கள்.

கமல்ராஜ் ஒரு 'டோர்ச் லைற்' வைத்திருந்துள்ளார். சாராயம் குடிக்கும்போதும் அவர் வைத்திருந்த டோர்ச் லைற்றைப் பல முறை இயக்கிப் பாவித்துமுள்ளனர். ஆனால் குண்டு வெடித்ததும் அங்கிருந்த ஒரு டோர்ச் லைற் மூலம்தான் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

அங்கிருந்த டோர்ச் லைற்றுக்குள் குண்டு எப்படி வந்ததென்பது மர்மமாக உள்ளது. இவர்கள் நித்திரையிலிருக்கும் போது யாராவது டோர்ச் லைற்றை மாற்றியிருக்க வேண்டும், என்றே கருதப்படுகிறது.

இது விடயமாக கூடவே இருந்து குடித்து விட்டுச் சென்ற காண்டீபன் கைது செய்யப்பட்டுள்ளார்.

# கண்டி வாலிபர் பலி!
## புலிகளின் முக்கிய உறுப்பினர்!

வவுனியா நகரில் 20.08.99 அன்று விசேஷ அதிரடிப்படையினரின் வீதிச்சோதனையில் விடுதலைப்புலி ஒருவர் பலியானதாக சென்றவாரம் 'முரசு' செய்தி வெளியிட்டிருந்தது.

பலியான விடுதலைப்புலி உறுப்பினர் மலையகத்தில் கண்டியைச் சேர்ந்தவர்.

இவரது இயக்கப்பெயர் ஆனந்தன். சா.லோகேந்திரன் என்பது சொந்தப்பெயர். புலிகள் இயக்கத்தில் மேஜர் தரத்தில் இருந்தார்.

வவுனியா நகரில் மின்மாற்றிகள் மீதான தாக்குதல்கள் உட்பட பல தாக்குதல்களில் பங்கு கொண்டவர் என்று கூறப்படுகிறது.

அதிரடிப்படையினரின் சூட்டில் காயமடைந்த இவர், உயிருடன் பிடிபடக்கூடாது என்று கைக்குண்டை வெடிக்கவைத்து உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

## சொந்த இடம் திரும்பத் தடை

புத்தளம் உட்பட நாட்டின் தென் பகுதியிலிருந்து மன்னார் வந்த நூற்றுக் கணக்கான மக்கள் தமது சொந்த இடம் திரும்ப முடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

இவர்கள் மன்னாருக்கு வந்து பல மாதங்களாகின்றன. மீண்டும் தமது சொந்த இடம் செல்வதற்கு பாஸ் பெறச் சென்றபோது, இவர்கள் பொலிஸாரினால் திருப்பியனுப்பப்பட்டு வருகின்றனர்.

தற்போது மன்னாரில் தங்கியுள்ள உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரைக் காண வந்தோரே இவ்வாறு நிர்க்கதி நிலைக்குள்ளாகியுள்ளனர்.

தேசிய அடையாள அட்டையில் மன்னார் மாவட்ட விலாசம் உள்ளதாலும், இவர்கள் தற்போது மன்னாருக்கு வெளியே வசித்து வருவதாலுமே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடம் பெயர்வு காரணமாக அகதிகளாக வசித்து வரும் இவர்கள், தற்போது வதியுமிடத்தை உறுதிப்படுத்தும் கடிதம் கொண்டு வந்தால் மாத்திரமே தென்பகுதி செல்ல அனுமதிக்கப்படுவர் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு நிர்க்கதி நிலைக்கு ஆளாகியுள்ளோரின் உறவினர் புத்தளம் போன்ற பகுதியில் கிராம அதிகாரிகளிடம் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கடிதம் கேட்கும்போது அதனை வழங்க முடியாதென கிராம அதிகாரிகள் கைவிரிக்கின்றனர்.

## நோயாளிகளிடம் பணம் அறவீடு

பொலன்னறுவை-வெலிக்கந்தை அரசாங்க வைத்திய சாலையில் சிகிச்சை பெறும் தமிழ் பேசும் நோயாளிகளிடமிருந்து மாத்திரம் ரூபா 500/-க்கு மேல் பணம் அறிவிடப்படுவதாக தமிழ், முஸ்லிம் நோயாளிகள் தெரிவிக்கிறார்கள்.

அங்கு உத்தியோகப் பற்றற்ற முறையில் அறவிடப்படும் இப்பணத் தொகைக்கு பற்றுச் சீட்டுக்கள் ஏதும் வழங்கப்படுவதில்லை. விசயமறிந்தோர் யாரும் பணம் அறவிடப்படுவது பற்றி கேள்வி எழுப்பினால் அது வைத்திய சாலையில் கடமை புரியும் தாதியர்களின் நலன்புரி நிதிக்கும், வைத்தியசாலைப் பராமரிப்புக்கும்தான் என்று பட்டும்படாமலும் பதில் கூறுகிறார்கள்.

எல்லைப் புறங்களிலுள்ள பாதிக்கப்பட்ட திருக்கோணமடு, குடாப்பொக்குன, கண்டக்காடு, பெரிய குளம், கட்டுவன்வில, கல்மடு, போன்ற மிகவும் வறிய கிராம மக்களே வெலிக்கந்தை அரச வைத்தியசாலையை நாடி வருகிறார்கள்.

இவர்களைப் பாதிக்கப்பட்ட ஏழைகள் என்றும் பாராது இன அடையாளத்தின் மூலம் பணம் கறக்க முயல்வது துவேஷத்தை எடுத்துக் காட்டுகிறதென்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு சிகிச்சைபெறும் பெரும்பான்மை இன நோயாளிகளும் தமிழ்-முஸ்லிம் நோயாளிகளுக்கு ஏற்பட்டுள்ள இந்நிலைமை கண்டு கவலை தெரிவிக்கிறார்கள்.

## கசிப்பு விற்பனை அதிகரிப்பு!

அக்கரைப்பற்றுப் பகுதியில் அதிகாரத்திலுள்ளோரின் மறைமுக அனுசரணையுடன் கசிப்பு, வடிசாராய உற்பத்தியும், நுகர்வும் அதிகரித்திருப்பதை அறிய முடிகிறது.

பெரும் சமூகச் சீரழிவுகளுக்குத் துணைபோகும் இந்நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருவதாக அப்பகுதி சமூக நல விரும்பிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.

அதிகாரத்திலுள்ள தரப்பாருக்குப் போதிய அன்பளிப்புகள் சேர்வதாலும், அவர்களும்கூட இந்த வடிசாராய போதைக்கு ஆட்கொள்ளப் பட்டுள்ளதாலும் கண்டும் காணாதது போல் நடந்து கொள்கிறார்கள்.

உள்ளூரில் கசிப்பு, வடிசாராயம் காய்ச்சுவோரின் எண்ணிக்கையும், 'குடி' மக்களின் வீதமும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லுவதாக அறியப்படுகிறது.


### இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்!

அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வேலை வாய்ப்பை பெற்றுத்தரக்கூடிய ஒரே கணனிச்சான்றிதழ்

கணனிச்சாரதி அனுமதிப்பத்திரம்

(Computer Driving Licence)

தொடர்பு-**IMCS** Computer Centre

23, 32வது ஒழுங்கை வெள்ளவத்தை. தொலைபேசி- 501434





### கலை அலங்கார வகுப்புக்கள்

* சிகை அலங்காரம்
* அழகுக்கலை
* மணப்பெண் அலங்காரம்
* மலர் பொக்கை செய்தல்
* 4 மாத கற்கைநெறி

ஆரம்பம் விரைவில்

சான்றிதழ்கள் வழங்கப்படும்

FASNAZ BEAUTY SALON

142 டபிள்யூ, ஏ.சில்வா மாவத்தை.
கொழும்பு-06.
தொலைபேசி: 589457



### மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள்.
இரகசியம் வெளியாகாது.

DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD,
NINTHAVUR-21,
SRI LANKA.
067-50349



# SPOKEN ENGLISH

## By K.M.N. NALRAVI

### யாருக்காக?

- தொழில் புரிபவர்களுக்காக.
- 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக.
- வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக
- இல்லத்தரசிகளுக்காக (Housewives)

- ஒரு வகுப்பில் 20 மாணவர்கள் மட்டும்
- ஒவ்வொரு மாணவரிடமும் தனிப்பட்ட கவனம்
- ஆங்கிலம் சற்றேனும் பேசத் தெரியாதவர்கள் கூட சரளமாக பேசப்பயிற்சி. ● அடிப்படையிலிருந்து இலக்கணம்
- இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட வகுப்பறை
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள். ● Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி ●வகுப்பிற்கு பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassette கள்
- பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்
- 3 அல்லது 6 மாத காலப் பாடத்திட்டம்
- பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

குறிப்பு: ● பழைய மாணவர்களுக்கு Diploma வகுப்புகள் ஆரம்பம்
● அலுவலக நேரம் காலை 8.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை
● புதன் கிழமைகளில் அலுவலகம் மூடப்பட்டிருக்கும்

NALRAVI
ENGLISH LANGUAGE CENTRE
527, First Floor, Galle Road, Wellawatta,
Colombo-06.(Hotel Ceylon Innsக்கு அருகில்)

TNT GRAFIX



### தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல், கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தன்மை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலு சோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது பக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE"



### மாபெரும் இசை நிகழ்ச்சி

உங்கள் தினமுரசின் அனுசரணையுடன்
அறிவிப்பாளர் சீதாராமன்–இக்பால், ஜெகனுடன் வழங்கும்

சீத்தாராவின் இசைமாலை

பிரபல பாடகர்களுடன் உங்கள் அபிமான தொலைக்காட்சி, வானொலி அறிவிப்பாளர்கள் ஒரே மேடையில்

நீர்கொழும்பு இந்து இளைஞர் மண்டபத்தில் 26.09.1999
ஞாயிறு மாலை 3.30க்கும் / 6.30 க்கும்

இரண்டுகாட்சிகள் | டிக்கட் : 100/- 150/- 200/-

இணை அனுசரணை:– பிரீமியர் டின்மீன்களை வழங்கும் ஞானம் இம்போட்ஸ், ஸ்டார் லைட் சலவைத்தூளை உற்பத்தி செய்து விநியோகிக்கும் ஸ்டார் இண்டஸ்ரீஸ், மீவோன் சுவையூட்டிகளை விநியோகிக்கும் பிகொம்பூட்ஸ் நிறுவனம், நீர்கொழும்பு கிரீன் வீதி புஷ்பா ஜுவலர்ஸ்.



### "உலகத் தமிழ் வானொலி"

சர்வதேச தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
INTERNATIONAL TAMIL BROAD CASTING CORPORATION-ITBC

42 ஐரோப்பிய நாடுகள்
மத்திய கிழக்கு நாடுகள் } EUTELSAT-HOT BIRD-3, 12475.5 MHZ இலும்
கனடா உட்பட-வட அமெரிக்கா–F.M சிறப்பலைவரிசையிலும்,

உலகின் பல பாகங்களிலிருந்தும் ஆக்கங்கள் எழுத்து வடிவிலும், ஒலிப்பதிவுகளாகவும் எதிர்பார்க்கப்படுகின்றன.
ஈழத்து கலைஞர்களின் வெளியீடுகள் வரவேற்கப்படுகின்றன.
எமது இந்த ஒலிபரப்பினை ஸ்ரீ லங்காவிலும் வெகுவிரைவில் கேட்கலாம்.
சகல நிகழ்ச்சிகளும் கனடாவிலிருந்து நேரடியாக ஒலிபரப்பாகின்றன.

இது உங்கள் வானொலி
தமிழ் மக்கள் வானொலி

தொலைபேசி: (கனடா) 416-412-7384, தொலைநகல்: 416-412-7386

தபால் விலாசம்:-
ITBC
Post Box No.63503
1571 Sandhust Circle
Toronto, Ontario
M1V 1Vo- Canada.



### கைரேகை

தெட்டத் தெளிவான கைரேகைகளுக்கு உங்கள் கைரேகையை வந்து கொடுத்து ஏற்கனவே பதிவு செய்து கொள்ளவும். இதற்குரிய கட்டணம் ரூபாய் 600/- பதிவு நாடாவில் பலன் பெற விரும்புவோர் ரூபாய் 1000/- தபால் மூலம் ரூபாய் 1500/- வெளிநாட்டவர்களுக்கு 1755/- தேவைகளுக்கு உங்கள் கைரேகையை அனுப்ப வேண்டிய முகவரி.

சுவாமி கங்காதரன்
(அகில இலங்கை சமாதான நீதவான்)
பீ.கே.சாமி ஏசோசியேட் பிரைவேட் லிமிடட். நிர்வாக இயக்குநர் (MANAGING DIRECTOR)
162. மேபீல்ட் ரோட், கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு.13.


2ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 07 10 1980
விண்ணில் 25 06 1997

### அமரர் ஜெயரூபன் ஜெயசிங்கம்

(மாசார் பளை, கல்லூரி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு)

இரண்டு ஆண்டுகள் உதிர்ந்தது. ஓயாது எம் மனங்களில் என்றும் உன் நினைவு. எத்தனை ஜென்மங்கள் சென்றாலும் உன் நினைவு எம் நெஞ்சங்களில் பூத்து நிற்கும். என்றும் உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கும்.

அப்பா ஜெயசிங்கம், அம்மா புஸ்பராணி, சகோதரன் அனுசோபன் (லண்டன்), சகோதரி அனுசோல்யா(இந்தியா), குமார்மாமா(அமெரிக்கா), கிருஸ்ணா மாமா (பிரான்ஸ்), ராசாமாமா (இலங்கை) மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்: அப்பா
Jeyasingam Vanniasingam
St.Laurentius -Str-5, 4613-Rickenbach, Swiss
T.P. 062-2160382

### ஆண்டொன்றாகியதோ?

(திதி:- 31.08.1999 அபரபக்கப் பஞ்சமி)



புங்குடுதீவு 7ம் வட்டாரம்-ஊரதீவு

### ஸ்ரீமான் இராமலிங்கம் இராசையா அவர்கள்

இகம்: 05.02.1920 பரம்:- 10.09.1998

புங்கையூர் பெற்ற செல்வ பொலிவுறு மேனியோனே!
எங்கள் இதயத் தெய்வமே! இன்ப நல் இராசனாரே!
தங்கியே இறைபதத்தில்! ஆண்டொன்று அகன்றதன்றோ!
அங்கு நீ ஆத்மசாந்தி பெறவே! எம் விழி நீர் காணிக்கை!

170, லூமிஸ் பிளேஸ்.
குடாப்பாடு நீர்கொழும்பு.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


### Nursery Teacher Training Course (NTTC)

முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி


ஆறு மாத கால தபால் மூலக் கல்வி

கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த அனைவரும் தபால் மூலம் கற்பது மூலம் ஆறுமாத கற்கை நெறியை பூர்த்தி செய்வதோடு LONDON பட்டதாரியின் DIPLOMA IN NURSERY TEACHER TRAINING சான்றிதழையும், சுயமாக தொழில் செய்யும் தகுதியையும் பெறமுடியும்.

விபரங்களுக்குத் தொடர்புகொள்க.

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S - 27 FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX.
P.O. BOX NO:162. COLOMBO - 11 TELE: 434770.





### அதிஸ்டத்தை அள்ளித்தரும் அதிசயக் கற்கள்

பல வருடங்கள் ஆராய்ச்சியின் பின் மண்ணுக்கடியில் மறைந்து நிற்கும் மகத்தான ரத்தினங்களை உங்கள் கைபிடிக்குள் கொண்டு வந்துள்ளோம். வாழ்வில் வியாபாரம், தொழில், திருமணம், கல்வி, வெளிநாட்டு பயணம் மற்றும் பல வகைளில் அதிஸ்டத்தை அள்ளித் தரும் முழு சரீரத்திற்கும் பொருந்தும். ரத்தினங்களை நியுமராலஜி முறையில் இலவசமாகக் கணித்துக் கூற அதை அணிந்து நீங்களும் அதிஸ்டசாலியாக மாறலாம்.

Accrediated by National Gem & Jewellery Authority

வெளிநாட்டு தொடர்பு இலங்கை நேரம் 9.30 a.m. 7.30 p.m.
T.P. 00941-436331
E-mail: arul_gem@eureka.lk

அருள் ஜுவல்லர்ஸ் 3 ARUL JEWELLERS

3, Sea Street, Colombo - 11. Sri Lanka. T.P. 436331.
Branch: 105, Galle Road, Wellawatte, Colombo 06.




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# சிறப்புப் படையணியின் மற்றுமொரு தாக்குதல்!

**கி**ழக்கில் அம்பாறையில் விடுதலைப் புலிகளது விசேஷ கொமாண்டோக்கள் (சிறப்பு படையணி) தொடர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

18.08.99 அன்று அம்பாறை 13ம் காலணியில் சிறப்புப் படையணியின் தாக்கு தலில் ஆறு அதிரடிப்படையினர் பலியாகினர். இத் தாக்குதல் தொடர்பாக சென்றவாரம் தெரிவித்திருந்தோம்.

இத் தாக்குதல் நடந்து ஒருவாரத்தில் மற்றுமொரு தாக்குதலை புலிகளது சிறப்புப் படையணி நடத்தியுள்ளது.

அம்பாறையில் அறந்தலாவப் பகுதியில் சிறீலங்கா அதிரடிப்படையினர் மீதே விடுதலைப் புலிகளது சிறப்புப் படையணி மீண்டும் பாய்ச்சல் நடத்தியிருக்கிறது.

25.08.99 அன்று காலை அம்பாறை மகா ஓயா வீதியில் பதுங்கியிருந்து வீதிக் கண்காணிப்பில் அதிரடிப்படையினர் ஈடுபட்டனர்.

இவர்களை எதிர்பார்த்து அதே வீதியில் புலிகளது சிறப்புப் படையணியும் பதுங்கியிருந்தது.

பதுங்கியிருந்துவிட்டு புறப்பட்டு வீதியைக் கண்காணித்தபடி கால் நடையாகச் சென்றனர் அதிரடிப்படையினர்.

முதல் தாக்குதல் நடந்து ஒரு வாரம் மட்டுமே சென்றிருந்தமையால் மிக விழிப்பாகவே அதிரடிப்படையினர் வீதியால் சென்றனர்.

அப்போது நேரம் காலை 7.30 மணி, திடிரென்று துப்பாக்கிகள் வெடிக்கும் ஒசை கேட்டு அதிரடிப்படையினர் நிலை எடுக்கும் முன்பாகவே புலிகள் முன்கை எடுத்து விட்டனர்.

பதுங்கியிருந்து பாய்ச்சல் நடத்துவதில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற சிறப்புப் படையணி வெகு துரிதமாக தாக்குதல் நடத்தியது.

இத் தாக்குதல் நடைபெற்ற பகுதிக்கு அருகில் இருபுறமும் புலுக்குணாவ இராணுவ முகாம் இருக்கிறது. சிறப்புப் படையணியின் ஒரு பிரிவினர் சிறிய ரக மோட்டார்களால் இராணுவ முகாம்களை நோக்கி ஷெல்களை ஏவினார்கள்.

துப்பாக்கி வெடியோசை கேட்டு, இராணுவ முகாமில் உள்ள படையினர் உதவிக்கு வருவதைத் தடுக்கவே மோட்டார் தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலின் முடிவில் ஆறு அதிரடிப் படையினர் பலியானார்கள். 13 பேர் காயமடைந்தனர். அவர்களில் ஏழுபேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப் பட்டது.

முகாம்மீதான மோட்டார் தாக்குதலின் காரணமாக இரண்டு படையினர் பலியானார்கள்.

இத் தாக்குதலும் சிறப்புப் படையணிக்கு வெற்றியாக முடிந்துள்ளது.

அம்பாறையில் விசேஷ அதிரடிப்படையினர் விடுதலைப் புலிகளுக்கு சாவல் விடும் வகையில் கடந்த சில மாதங்களாக செயற்பட்டு வந்தனர்.

இதனையடுத்தே தமது சிறப்பு படையணியை பிரபாகரன் அம்பாறைக்கு விசேஷமாக அனுப்பிவைத்ததாகக் கூறப்படுகிறது.

வன்னிக்காடுகளுக்குள் கடும் பயிற்சியும், போர்த் தேர்ச்சியும் பெற்றவர்களே சிறப்புப் படையணியில் உள்ளனர்.

ஒரே மாதகாலத்திற்குள் தொடர்ந்து இரு தாக்குதல்களை சிறப்புப் படையணிகள் நடத்தி முடித்துள்ளன.

மிகவும் துல்லியமாக வேவு பார்த்து விபரங்கள் திரட்டிய பின்னரே சிறப்புப் படையணி களத்தில் இறங்குகிறதாம்.

அரச அதிரடிப்படையினரும் பதுங்கியிருந்து பொறி வைப்பதில் வல்லவர்கள். அவர்களது பொறிகளில் சிக்காது சிறப்புப் படையணி வெகு அவதானமாக வலை விரித்து தாக்குதல் நடத்துவதாக கூறப்படுகிறது.

●○

# 12 வருடம் காத்திருந்து நடத்திய வேட்டை

**ம**ட்டக்களப்பில் தமது நீண்டகால இலக்கான ராசிக்கை புலிகள் தீர்த்துக் கட்டிய பின்னர், சமீபத்தில் மற்றுமொரு நீண்டகால இலக்கை தீர்த்துக் கட்டியுள்ளனர்.

மட்டக்களப்பில் வீடியோப் படப்பிடிப்பாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

கொல்லப்பட்டவர் ஒரு முன்னாள் புலி என்பதையும், புலிகள் பற்றி தகவல்களை புலிகளது எதிர்த் தரப்புக்கு வெளியிட்டு வந்தவர் என்றும் கடந்த வாரம் முரசில் செய்தியும் வெளியாகியிருந்தது.

தற்போது மேலும் பல தகவல்கள் கிடைத்துள்ளன.

பலியானவர் பெயர் க.அறிவழகன் (31) மட்டக்களப்பு நகரில் வீடியோ படம் பிடிக்கும் தொழில் செய்து வருபவர் என்பதுதான் வெளியே தெரிந்த செய்தி.

வெளியே தெரியாத செய்திகள் பல உள்ளன.

கணபதிபிள்ளை அறிவழகன் 12 வருடங்களுக்கு முன்னர் புலிகள் இயக்கத்தில் ஒரு உறுப்பினர். இயக்கப் பெயர்: அசோக். திருக்கோணமலை ஆலங்கேணியைச் சேர்ந்தவர்.

புலிகள் இயக்கத்தில் கட்டுப்பாட்டை மீறி நடந்துகொண்டபோது முதலில் எச்சரிக்கப் பட்டார். தொடர்ந்தும் ஒழுக்கமீறலில் ஈடுபட்டதாகத் தெரிந்ததும் இவரைத் தண்டிக்கத் தீர்மானித்தனர் புலிகள்.

அதனை அறிந்த அறிவழகன் இயக்கத்தை விட்டு தப்பியோடி படையினரிடம் சரணடைந்தார்.

1987ம் ஆண்டு திருமலை மாவட்டத்தில் கூனித்தீவு என்னுமிடத்தில் புலிகளின் முகாம் ஒன்று படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தாக்கப்பட்டது.

அந்த சுற்றிவளைப்பில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பதினொரு பேர் பலியானார்கள்.



சிறப்புப் படையணி



கவச எதிர்ப்புப் படையணி

இந்த முகாம் தொடர்பாக படையினருக்கு துல்லியமான தகவல் கொடுத்து வழிகாட்டியாக அழைத்துச் சென்றது வேறு யாருமல்ல. அறிவழகன்தான்.

இதன் பின்னர் அரச புலனாய்வுத் துறையில் செயற்பட்ட சுரேஸ் ஹாசீம் என்பவருடன் இணைந்து புலிகள் பற்றிய தகவல்களைக் கொடுத்து வந்தார்.

ஆயுதங்களைக் களவாடி ஒரு குழுவினருக்கு விற்ற புகார் தொடர்பாக சுரேஸ் ஹாசீம் தற்சமயம் சிறையில் இருக்கிறார்.

1990ம் ஆண்டு மட்டக்களப்பில் நடைபெற்ற கைதுகள், காணாமல் போதல்கள், கொலைகள் போன்ற சம்பவங்களுக்கு முக்கியமான தகவல் கொடுப்பவராக அறிவழகன் இருந்ததாக புலிகள் அறிந்து கொண்டனர்.

தமது திருமலை முகாம் தாக்கப்பட்டபோதே அறிவழகனுக்கு புலிகள் குறிவைத்துவிட்டனர். சுமார் 12 ஆண்டுகளாக அறிவழகன்மீது குறிவைக் கப்பட்டிருந்தது.

'எப்படியும் என்றோ ஒருநாள் புலிகள் போடுவார்கள்' என்று பலரும் அறிவழகனை எச்சரித்ததால், பயந்துபோன அறிவழகன் வெளிநாடு சென்றுவிட்டார்.

சில காலம் வெளிநாட்டிலிருந்த அறிவழகன் இனிமேல் புலிகள் தன்னை மறந்து போயிருப்பார்கள். தன் காலத்தில் இருந்த புலிகள் பலர் போரில் பலியாகியும் இருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு மட்டக்களப்புக்கு திரும்பி வந்தார். கல்லடியில் வசித்து வந்தார்.

மட்டக்களப்புக்கு புதிதாக வந்துள்ள புலிகளின் அணி பழைய பட்டியல்களையும் புரட்டிப் பார்த்து கணக்கு தீர்க்காது விடப்பட்டவர்களையும் குறிவைக்கத் தொடங்கியுள்ளது.

12 வருடமாக தப்பிக்கொண்டிருந்த அறிவழகனைப் பற்றிய தகவல்களும் திரட்டப்பட்டு அதற்குரிய பிஸ்டல் குழுவினரும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு சித்தாண்டியில் திருமண வீடொன்றுக்கு அறிவழகன் வந்து படம் பிடித்துக் கொண்டிருக்கும் தகவல் புலிகளுக்கு தெரிந்தது.

நீண்டநேரமாக அறிவழகன் அங்கு நின்று படம் பிடித்ததால் புலிகள் செய்தி அறிந்து தேடிவர வாய்ப்பாக இருந்தது.

திருமண வீட்டுக்குள் செல்லாது வெளியே அழைத்து சுட்டுவிட்டுப் போய்விட்டனர்.

இச் சம்பவம் பற்றி புலிகள் பின்வருமாறு கூறியுள்ளனர்: "துரோகிகள் காலத்திற்குப் போக்குக் காட்டினாலும் காத்திருக்கும் புலிகளின் பிடியில் இருந்து தப்பவே முடியாது".

***

**வ**ன்னிச் சமரில் அடுத்த சில மாதங்களுக்குள் முன்னேற்றம் காண்பதற்கு படைத்தரப்பு முயலக்கூடும்.

மன்னார் பூநகரி சாலையைக் கைப்பற்ற படைத்தரப்பினர் தமது கவச படைப்பிரிவையும், பீரங்கித் தாக்குதல்களையுமே முதுகெலும்பாக நம்பியிருந்தனர்.

அந்த நம்பிக்கை ரணகோஷ 04 கட்டம் 02இன் பின்னர் ஆட்டம் கண்டிருப்பதாகத் தோன்றுகிறது.

26.06.99 அன்று ரணகோஷ 04 கட்டம் 02 மேற்கொள்ளப்பட்டு, இலக்கை எட்டாது முற்றுப் பெற்று இரண்டு மாதங்கள் சென்றுவிட்டன.

இந்த நடவடிக்கைக்காக வன்னிச் சமர்க்களத்தில் இருந்த டாங்கிகள் அனைத்தும் ஒன்று குவிக்கப்பட்டன.

வெட்டையான புவிச் சூழலில் மரபுப் போருக்குரிய கனரக ஆயுத வளங்களான ஆட்டிலெறிகளும், கனரக வாகனங்களான டாங்கிகள், துருப்புக்காவிகள் போன்றவையும் உகந்தவை என்பதால் பெருமளவில் ஈடுபடுத்தப்பட்டன.

ஆட்டிலெறிகள் ஷெல்களைப் பொழிய, அதன் மத்தியில் டாங்கிகள் முன்னே பாய்ந்து போயின.

படையினர் எதிர்பார்த்த இலக்குக் கிட்டுவதை புலிகளது கவச எதிர்ப்பு படைப்பிரிவு தடுத்து நிறுத்திவிட்டது.

முன்னரே புலிகளிடம் டாங்கி எதிர்ப்பு படையணி இருந்தபோதும், வன்னிச் சமரின் பின்னரே அது சிறப்பாக விரிவாகியுள்ளது.

வன்னிச் சமர்க்களத்தில் தாம் எதிர்நோக்க வேண்டிய படைக்கலங்கள், இராணுவ வாகனங்கள், படை நகர்வு உத்திகள் என்பவற்றுக்கு ஏற்ப தமது படைப்பிரிவுகளை புலிகள் தயார்படுத்தியுள்ளனர்.

மன்னார் பூநகரிப் பாதையில் கவசவாகன அணியே பிரதானமான பாத்திரம் வகிக்கும் என்பதைக் கணித்து, அதற்கேற்ப தமது முறியடிப்புச் சமருக்கான உத்திகளை பிரபாகரன் வகுத்துக் கொடுத்திருக்கிறார்.

கவச எதிர்ப்பு படையணி விரிவாக்கப்பட்டு, கவச எதிர்ப்பு ஆயுதங்களும் தாராளமாக வழங்கப்பட்டுள்ளன.

ஆர்.பி.ஜி மட்டுமன்றி கவச எதிர்ப்பு நவீன ஆயுதங்களும் கவச எதிர்ப்பு படைப்பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கிட்டுப் பீரங்கிப் படையணி வன்னிச் சமரில் முக்கிய பாத்திரம் வகிப்பது போன்றே, விக்ரார் கவச எதிர்ப்பு படையணியும் வன்னிச் சமரில் முக்கிய பங்காற்றி வருகிறது.

புலிகள் இயக்கத்தின் மன்னார் மாவட்ட முன்னாள் தளபதியாக இருந்து பலியானவர் விக்ரார். அவரது பெயரிலேயே கவச எதிர்ப்பு படைப்பிரிவும் இயங்கி வருகிறது.

ரணகோஷ 04 கட்டம் 02 நடவடிக்கையில் படையினரின் கவச வாகனப் பிரிவுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியது 'விக்ரார் கவச எதிர்ப்பு' படையணி.

அதற்கு முன்பாக வவுனியா-யாழ் சாலையில் நிறுத்தப்பட்டிருந்த விக்ரார் கவச எதிர்ப்பு படையணி, ரணகோஷ 04 நடவடிக்கையை எதிர்கொள்வதற்காகவே மன்னார் பூநகரி பிரதான வீதியில் நிறுத்தப்பட்டிருந்தது.

ஆட்டிலெறி சூடுகள் மத்தியிலும் விக்ரார் கவச எதிர்ப்பு படையணி முன்னேறிப்போய் டாங்கிகளைத் தாக்கியது. முன்னேறிய டாங்கிகளில் ஏழு செயலிழந்தன.

இதனால் எதிர்பார்த்த கள நிலமையை படையினர் காண முடியாமல் போனது. தமது தரப்பில் இரண்டு டாங்கிகள் நாசமானது என்று படைத்தரப்பினர் கூறியிருந்தனர்.

மன்னார் பூநகரி பாதையைக் கைப்பற்றும் படை நகர்வுக்கு கவச எதிர்ப்புப் படையணியும், பீரங்கிப் படையணியுமே பலத்த சவால்.

இந்த சவாலை எப்படி எதிர்கொள்வது என்பதே படையினரின் தீவிர யோசனையாக இருக்கும்.

ஆனால் எப்பாடுபட்டாவது வன்னிச் சமரில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருப்பதே படையினருக்கு உள்ள கட்டாயம்.

ஜனாதிபதி சந்திரிக்கா போரை நிறுத்தப் போவதில்லை என்பதில் புலிகள் வெகு தெளிவாக உள்ளனர்.

●○

**செ**ம்மணி புதைகுழிகள் விடயத்தில் முதற்கோணல் முற்றும் கோணல் என்ற பொன்மொழி பொருத்தமாக இருக்கிறது.

புதைகுழி பற்றிய உண்மைகளை ராஜபக்ஷ கூறியது முதற்கொண்டே அதனை பொய்யாக சித்தரிக்கவும், காலத்தை இழுத்தடிக்கவுமே பலத்த முயற்சிகள் நடந்துள்ளன.

இதன் பின்னர் சமீபத்தில் ராஜபக்ஷ உட்பட கிருஷாந்தி கொலை வழக்கின் எதிரிகளிடம் இரகசியப் பொலிசார் நடத்திய விசாரணைகளும் ராஜபக்ஷவால் குறை கூறப்பட்டுள்ளன.

குடிமக்களை கொன்று புதைத்த அதிகாரிகளது பெயர்களை தான் கூறியபோது அவற்றை பதிவு செய்ய விசாரணையாளர்கள் மறுத்தனர் என்று நீதிமன்றத்தில் அஞ்சாது கூறியுள்ளார் ராஜபக்ஷ.

அப்படி பதியாதுவிட்டதின் நோக்கம் என்ன? எனவே விசாரணைகள் ஒழுங்காக நடக்குமா? குற்றவாளிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? என்றெல்லாம் சந்தேகங்கள் எழுவது தவிர்க்க முடியாதது.

யாழ் குடாநாட்டில் காணாமல்போனோர் பற்றி புகார்கள் எழுந்தபோது, படை சார்ந்த அதிகாரிகளையே அதனை விசாரிக்க நியமித்தார் ஜனாதிபதி சந்திரிக்கா.

படை சார்ந்த அதிகாரிகள் விசாரிக்கும் போது உண்மையைக் கூறுவதற்கு மக்கள் துணிவார்களா? அதுமட்டுமல்ல புகார் கூறியவர்கள் முகாம்களுக்குத்தான் விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

இத்தகைய விசாரணைமுறைகூட சாட்சியங்களை அச்சுறுத்தும் மறைமுக உத்திதான்.

இதன்பின்னரே காணாமல்போனோரின் கதி பற்றிய உண்மைகளைக் கண்டறிய படைசாராத, அரசு சாராதவர்களைக் கொண்டு விசாரணை ஆணைக்குழு அமைக்குமாறு கோரப்பட்டது.

இக் கோரிக்கையை தமிழ்க் கட்சிகளும் ஜனாதிபதியிடம் முன்வைத்தன. காணாமல் போனோரின் குடும்பத்தினரும் ஜனாதிபதியிடம் நேரடியாகவே கோரிக்கை விடுத்திருந்தனர்.

இரண்டு மாதத்துக்குள் முடிவுகளை அறியக் கூடியதாக உடனடியாக விசாரணைக் கமிஷன் அமைக்கப்படும் என்று ஜனாதிபதி வாக்குறுதி கொடுத்திருந்தார். தற்போது மூன்று ஆண்டுகள் கடந்தும் கமிஷன் வரவில்லை.

விசாரணைக் கமிஷன் நியமித்தால் மட்டும் நீதி கிட்டிவிடுவதில்லை. ஆனால் அதன் முன்னர் அளிக்கப்படும் சாட்சியங்கள் மூலம் நடந்த அநியாயங்களாயினும் அம்பலமாகியிருக்கும்.

அப்படி நடக்கும், அது படையினருக்கு பிடிக்காது என்று தெரிந்துதான் விசாரணைக் கமிஷன் அமைக்க முன்வராது வாக்குறுதி பறக்கவிடப்பட்டது.

இப்போது மறுபடி காணாமல் போனோரது உறவினர்களை பொலிசார் விசாரிக்க முற்படுகின்றனர்.

ராஜபக்ஷவையும் அவர்களே விசாரித்துள்ளனர்.

படையின் அதிகாரிகளோ, பொலிசாரோ விசாரிப்பது உண்மைகளை வெளியே கொண்டுவர உதவாது என்ற அடிப்படையில் தானே விசாரணைக்கமிஷன் கோரப்பட்டது.

அப்படியிருக்க மறுபடி பொலிசாரே சென்று காணாமல்போனோரது உறவினர்களிடம் விசாரிப்பதை கமிஷன் கேட்ட தமிழ்க் கட்சிகளும் கண்டு கொள்ளாமல் இருக்கின்றன.

இந்த விழிப்புத் தளர்ந்த நிலைதான் மாபெரும் மனித உரிமை மீறல் விவகாரத்தை அரசாங்கம் தன் இஷ்டப்படி கையாள வழிவகுத்துள்ளது.

எனினும் ஒரே ஆறுதல், ராஜபக்ஷவின் தளராத உறுதி. மாபெரும் பாவச் செயலை செய்தவராக இருந்தாலும், அதற்கு பரிகாரம் காண்பதில் காட்டும் உறுதிதான் பாரிய மனித உரிமை மீறல்களையும் குழி தோண்டி மறைக்கும் முயற்சிகளை தாண்டி அம்பலமாக்கியுள்ளன.

காலத்தை இழுத்தடிக்க செய்யும் முயற்சிகளால், செம்மணி விவகாரம் பற்றி அடிக்கடி உலகுக்கு நினைவூட்டும் பலாபலனும் ஏற்பட்டு வருகிறது.

நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



***யாழ்ப்பாணத்தில் பளையில்*** அன்னாசிப்பழச் செய்கை அமோகமாக நடந்திருக்குதாம். இதுவரை யாழ் குடாநாட்டில் இல்லாத சாதனை இது. யாழ் பல்கலைக்கழக விவசாயபீடம் இந்தச் சாதனைக்குக் காரணமாக இருந்துள்ளதாம். பார்த்தியளோ மூளையை? உதுதானே அதிகாரம் கொடுக்கப் பயப்படுகினம். கொடுத்தால் எங்கேயோ போயிருவினம் என்றுதானே பொறாமை கலந்த பயம். யாரைச் சொல்கிறேன் என்று விளங்கும்தானே!

**யாழ் குடாநாடு** செல்ல அனுமதி மறுக்கப்பட்டதை பெரிய சட்டப்பிரச்சனையாக மாற்றப்போகிறார் குமார். அதற்கான ஆவணங்கள் தயாராகிக் கொண்டிருக்குது. பாதுகாப்புத் தொடர்பான செயலாளரை பலமுறை குமாரர் தொடர்பு கொண்டும் அவர் 'லைனுக்கே' வரவில்லையாம்!

**கழக உட்பிரச்சனை** ஒரு முடிவுக்கு வந்தமாதிரித் தெரியுது. கழக மாணிக்கத்துடன் மறு தரப்பார் பிரச்சனை இல்லாமல் போக முடிவு செய்துவிட்டனராம். அடுத்த தேர்தலில் மாணிக்கம் வவுனியாவிலும், சித்தர் யாழிலும் போட்டியிடப் போவதாகவும் தீர்மானமாம். ஆனால் வவுனியாவில் போட்டி பலமாக இருக்கும்போல் தெரிகிறது.

**கொழும்பில் சர்வோதயா** இயக்கம் ஏற்பாடு செய்த பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடினராம். வண்ணப் படங்களும் பத்திரிகைகளில் வெளியாகின. இந்த சந்தடியில் சர்வோதயா பற்றி மறக்கலாமோ? வடக்கு-கிழக்கு தமிழ்ப்பகுதிகளுக்கு என்று பெறப்பட்ட நிதியை குடியேற்றங்களுக்கு பயன்படுத்திய புண்ணியவான்கள் யார்? அதனைக் கூறிப் பெருமைப்பட்ட புண்ணியவான்கள் யார்? இதனை எல்லாம் கண்டித்துத்தானே ரெண்டு எழுத்தார் வடக்கில் தடையும் போட்டவை. தற்போதும் சர்வோதயக் கொள்கை மாறியதாகத் தெரியவில்லை. கோஷம் நன்று: ஆனால் அது வேஷமாக இருக்கக்கூடாதல்லோ?

**கிரிக்கெட் வர்ணனைக்கு** தமிழுக்குக் கொடுக்கும் நேரம் போதாது என்பது உண்மைதான். அதற்காக இனிமேல் கவலைப்படக்கூடாது. நேரத்தை மேலும் கூட்டிக் கொடுத்தால் கேட்கிறவைக்கு வாழ்க்கையே வெறுத்துப் போயிடும். 28.08.99 சனிக்கிழமை தமிழ் வர்ணனையாளர் ஷேன் வோர்னும், ரொபின்சிங்கும் இணைந்தாடி ஓட்டங்களைக் குவித்ததாக கூறினார். தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்பார் என்று காதைத் தீட்டிக் கேட்டுப்பார்த்தேன். ம்ஹூம். அதே அறிவிப்பாளர் உளறிய உளறல்கள் இதைவிடப் பல. இப்படிப்பட்ட விண்ணர்கள் எல்லாம் அறிவிப்பாளர்களாக இருக்கும்போது நேரத்தைக் கூட்டுவானேன்? உள்ளதே போதுமப்பா! பிச்சைவேண்டாம் நாயைப்பிடி என்ற கதைதான்.

**ரெண்டு எழுத்தாரினால்** 'தேறாத ஆள்' என்று கைவிடப்பட்ட முன்னாள் ஈரோஸ் உறுப்பினர் அந்தப் பாலகர். வடக்கு-கிழக்கு முன்னாள் அதிகாரக் கட்சிக்கு தாவியது அந்தப் பட்சி. அங்கிருந்து கரும்புலிகளுக்கு உபதேசம் பண்ணுவதுபோல ஆவரங்கால் நடராஜா என்ற பெயரில் அக் கட்சிப் பிரசுரத்திலும் எழுதினார். தமிழ்க் கட்சியான ஜனநாயகக் கட்சியினரையும் வசைபாடினார். தற்போது அந்த ஜனநாயகக் கட்சியிடம் கால் கடுக்க அலைகிறார். கொள்ளைக்காரர் என்று எழுதிய கையால் அங்கு விருந்துண்டு மகிழ்கிறாராம். ஐயோ பாலா! அடுத்தது எங்கு தாவுவாரோ?!

**வவுனியா ஹர்த்தாலுக்கு** சிருடைத்தரப்பு இம்முறை அமைதியாக ஒத்துழைத்ததாம். எண்ணெய் விநியோக விவகாரத்தில் கழகத்தினர் ஹர்த்தால் செய்தபோது முறுகல் நிலை ஏற்பட்டமாதிரி இம்முறை ஏதும் நிகழவில்லையாம்!

**சுவிஸில் கார்** வியாபாரத்தில் கொடி கட்டிப் பறந்த இரண்டு இலங்கைத் தமிழர்கள் கம்பி எண்ணுகிறார்கள். ஓடி ஒடிக் களைத்துப் போன கார்களை வாங்கி, கிலோமீட்டரை மாற்றிப்போட்டு விற்பனை செய்தவையாம். பலகாலமாக இந்த வியாபாரம் நடந்திருக்கு. சமீபத்தில்தான் வகையாக மாட்டிக்கொண்டனராம். அள்ளிக்கொண்டு போய் கம்பிக்குப் பின்னால் போட்டுவிட்டது பொலிஸ். என்னதான் இருந்தாலும் வெள்ளைக்காரனுக்கே அல்வா கொடுத்துப் போட்டினமல்லோ! சூரர்கள்தான்!

**கனடாவில் தற்கொலைகள்** நம்மவர்கள் மத்தியில் பெருகிப் போச்சுது. நாட்டுச் சூழ்நிலை, ஒய்வில்லாத வேலை, உறவுச் சீர்குலைவுகள் என்று பல காரணங்கள். என்னதான் இருந்தாலும் பிறந்த மண்போல வருமோ?! பறந்து போய் வாழும்போதுதான் பிறந்த மண் பெருமை தெரியுது என்று கனடா நண்பர் கவலையுடன் கூறினார்.

**இந்தவாரப் பொன்மொழி. உபயம்: புனிதர் அகஸ்டின்.**

"தண்டனை என்பது
அநியாயம் செய்தவர்களுக்குச்
செய்யப்படும்
நியாயம்!"



படிப்பகம்

www.padippakam.com



# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# இந்தியக் கேணலை மயக்கிய பெண் நிருபர்

மணலாற்றுப் பகுதியை எப்படியாவது கைப்பற்றியே தீருவது என்று படைத்தரப்பு முடிவு செய்திருந்தது.

ஏற்கனவே 'ஒப்பரேசன் மின்னல்' என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கை பின்னடைவை சந்தித்திருந்தது.

இதனையடுத்தே மற்றுமொரு படை நகர்வு 17.03.92 அன்று மேற்கொள்ளப் பட்டது.

'ஒப்பரேசன் சிக்ஸர்' என்று துடிப்பான பெயரிட்டு, இந்த நடவடிக்கை ஆரம்பமானது.

மூன்று படைப்பிரிவுகளும், கொமாண்டோ படையணி, கவசப் படையணி, பீரங்கிப் படையணி என்பனவும் இந்த பாரிய படை நகர்வில் குதித்தன.

விமானப்படை உதவியுடன் படையினர் தமது நகர்வை ஆரம்பித்தனர்.

ஒன்பது நாட்களாக மோதல் நீடித்தது. பெருமளவான வெடி மருந்துகளை படைத்தரப்பு பயன்படுத்தியது.

இந்தச் சமரில் தமது கவச வாகனப் படையணியையே படையினர் முக்கியமாகப் பயன்படுத்தினார்கள்.

கவசவாகனப் படைப்பிரிவை எதிர்த்து புலிகளது கவச வாகன எதிர்ப்புப் பிரிவினர் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

ஒன்பது நாள் சண்டையில் இரண்டு டாங்கிகள் உட்பட ஆறு கவச வாகனங்கள் முற்றாக அழிக்கப்பட்டன.

இதனால் படை நகர்வு தடைப்பட்டது. கவச வாகனங்களும், டாங்கிகளும் அழிக்கப்பட்டதையடுத்து படைத்தலைமை தன் திட்டத்தைக் கைவிட முடிவு செய்தது.

சீனாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரி.85, ரி. 86ரக டாங்கிகள், செக்கோஸ்லோவாக்கியாவில் இருந்து தருவிக்கப்பட்ட ரி.55 ரக டாங்கிகள் என்பவையும் இந்த நகர்வில் பாவிக்கப்பட்டதாக தகவல்கள் கூறின.

நவீனரக துப்பாக்கிகள் சிலவும் இச் சண்டைகளின்போது புலிகளால் கைப்பற்றப் பட்டன.

டாங்கி எதிர்ப்பு துப்பாக்கி ஒன்றும் தம்மால் கைப்பற்றப்பட்டதாகப் புலிகள் அறிவித்தனர்.

ஆர்.சி.எல். எனப்படும் டாங்கி எதிர்ப்புத் துப்பாக்கியே தம்மால் கைப்பற்றப்பட்டதாக புலிகள் கூறியிருந்தனர்.

கொக்குத் தொடுவாயின் வடபகுதியில் இருந்தே படை நகர்வு ஆரம்பமானது.

அங்கு ஆறுமாதங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது நடவடிக்கையாக இது அமைந்தது.

டாங்கிகள், கவசவாகனங்கள் என்பவற்றை புலிகள் தாக்கியதை அடுத்து, புலிகளிடம் டாங்கி எதிர்ப்பு நவீன ஆயுதங்கள் இருப்பதாக படைத்தரப்பு சந்தேகித்தது.

'ஒப்பரேசன் சிக்ஸர்' நடவடிக்கையில் புலிகளது பல முகாம்கள் கைப்பற்றப்பட்டதாக படையினர் கூறினார்கள். புலிகளுக்கு பலத்த இழப்பை ஏற்படுத்திவிட்டு படை நடவடிக்கை முற்றுப்பெற்றதாக படைத்தரப்பு கூறியிருந்தது.

ஆனால் ஒப்பரேசன் மின்னல் போன்றே, ஒப்பரேசன் சிக்ஸரும் நினைத்த இலக்கை எட்டாது முடிவுக்கு வந்தது.

## இந்திய கண்ணோட்டம்

'எக்னாமிக் பொலிட்டிக்கல் வீக்லி' என்னும் பத்திரிகை இந்தியாவில் இருந்து வெளிவருகிறது.

அப்பத்திரிகையில் அர்ஜுன் கட்டோஷ் என்பவர் இலங்கை நிலவரம் தொடர்பாக கட்டுரை ஒன்று எழுதியிருந்தார்.

ராஜீவ் படுகொலையின் பின்னர் புலிகள் பற்றி நல்லவிதமாக எழுதுவதற்கு இந்தியப் பத்திரிகையாளர்கள் துணியாத நேரம் அது.

அக் கட்டுரையின் முக்கியமான சில பகுதிகளை மட்டும் தருகிறேன்:

"1990ம் ஆண்டுக் காலகட்டத்தில் இந்திய அமைதிப்படை தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கல்கட் நாலாயிரம் இந்திய இராணுவத்தினரை இழந்தபோதும், பெரிய சாதனை புரிந்துவிட்டதாகக் கூறினார்.

விடுதலைப் புலிகளை பலமிழக்கச் செய்து காடுகளுக்குள் துரத்திவிட்டதாகவும், சிறீலங்கா இராணுவம் அவர்களை முற்றாக அழித்துவிடும் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

சிறீலங்கா இராணுவம் ரஞ்சன் விஜயரத்னாவின் அனுசரணையுடன் ஜே.வி.பி. இயக்கத்தை அழித்தது யாவருக்கும் தெரியும்.

ஆனால் அதே சிறீலங்கா இராணுவம் யாழ்ப்பாணக் கோட்டையை இழந்தது. மாங்குளம் முகாமை இழந்தது.

இந்திய இராணுவம் மூன்று வருட காலத்திற்குள் இழந்த தொகையைவிட கூடுதலான இராணுவத்தினரை ஆறு அல்லது ஏழு மாதங்களுக்குள் சிறீலங்கா இராணுவத்தினர் இழந்தனர்.

இரத்தம் சிந்தினாலும்கூட வெற்றி தோல்வி இல்லாத நிலைதான் ஏற்படும் என்பதை இராணுவத்தினர் புரிந்திருப்பார்கள்.

முன்பு இந்தியப் பாதுகாப்பு அமைச்சில்



இருந்து பெற்றுவந்த அறிக்கைகளை இந்தியப் பத்திரிகைகள் பிரசுரித்தன.

தற்போது சிறீலங்கா அரசு வழங்கும் அறிக்கைகளை ஆதாரமாக வைத்து, இப்போது நடைபெறும் யுத்தத்துக்கும், வடக்கு கிழக்கில் வாழும் மக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களுக்கும் விடுதலைப் புலிகளே காரணம் என்று கூறி வருகின்றன.

ரஞ்சன் விஜயரத்ன கொலை, கூட்டுப் படை தலைமையகம் தகர்க்கப்பட்டமை, அரசியல்வாதிகள் பலர் கொல்லப்பட்டமை போன்ற நடவடிக்கைகளைக் கூறி, புலிகளை பயங்கரவாதிகளாகச் சிலர் சித்தரிக்கின்றனர்.

இவைகள் எல்லாம் விடுதலைப் புலிகளுடன் நேரில் தொடர்பு கொள்ளாதவர்கள் பிறர் கூறியதைக் கேட்டுவிட்டுக் கூறியவை என்பதை மக்கள் அறியமாட்டார்கள்.

## இரு உலகம்

விடுதலைப் புலிகளுடன் நேருக்கு நேர் நின்று போராடிய இந்திய இராணுவ அதிகாரிகளும், சிப்பாய்களுமே புலிகளை நன்கு அறிவார்கள்.

தமக்குப் பாதகமான சூழ்நிலைகளில்கூட விடுதலைப் புலிகள் எப்படி நின்று தாக்குப் பிடித்தார்கள் என்பதையும் அவர்கள் அறிவார்கள்.

இந்திய இராணுவம் சிறீலங்காவில் நிலை கொண்டிருந்த காலகட்டத்தில் இரண்டுவிதமான உலகங்கள் இருந்தன.

போராளிகளை நேரில் சந்திக்காது தலைமை அலுவலகம், வரைபடங்கள், உயர் அதிகாரிகள், உயரப் பறக்கும் ஹெலிகள் ஆகியவற்றைக் கொண்ட உலகம் ஒன்று.

சூரிய வெப்பத்திலும், மழையிலும், ஆபத்து நிரம்பிய காடுகளிலும், நகர ஒழுங்கைகளிலும் விடுதலைப் புலிகளுடன் போரிட்ட சாதாரண சிப்பாய்களது உலகம் இரண்டாவது.

இங்கு கருணை கேட்கவோ, கொடுக்கவோ முடியாத சூழ்நிலை- காயங்கள், பட்டினி, இறப்பு முதலியன அவர்களின் சகாக்கள்.

இங்கே எதிராளிகள் இருதரப்பினரும் மற்றவருடைய பலம் பலவீனத்தை நேரில் பார்த்தனர்.

'சௌத் பிளாக்' என்று அழைக்கப்படும் இந்திய வெளிவிவகார அமைச்சு எதனை காது குளிரக் கேட்க விரும்புகிறதோ, அதனையே கூறிக்கொண்டிருந்தனர் இந்திய இராணுவ உயரதிகாரிகள்.

அந்த இராணுவ அதிகாரிகள் கூட்டிச் சென்று காண்பித்த இடங்களைப் பார்த்துவிட்டு, அவர்கள் கூறியதை மட்டும் கேட்டுவிட்டு பத்திரிகைகளில் நிருபர்கள் எழுதினார்கள்.

இந்திய இராணுவம் அழித்தவிட்டதாகக் கூறிய முகாம் அப்படியே இருந்ததையும், விடுதலைப் புலிகளிடம் கைப்பற்றப்பட்டதாகக் கூறிக் காண்பித்த ஆயுதங்கள், இந்திய இராணுவத்தினரால் சென்னையில் இருந்து தருவிக்கப்பட்டவை என்பதையும் 1989ம் ஆண்டு பி.பி.சீ. ஆதாரத்துடன் அறிவித்தது.

இத் தகவல்கூட ஒரு பெண் நிருபரின் அழகில் மயங்கி ஒரு இந்திய இராணுவ கேணல் கூறியதால் வெளியாகியது.

இதனால் அதிர்ச்சியடைந்த இந்திய இராணுவம் இதனை விசாரிக்க உத்தரவிட்டது.

ஆனால் வவுனியாக் காட்டில் கேணல் பெண்ணிடம் மயங்கியதை நிரூபிக்க முடியவில்லை. இந்தக் கேணல் இப்போது (1992) பிரிகேடியர்!"

இவ்வாறு பல உண்மைகளை அக்கட்டுரையாளர் வெளிப்படுத்தியிருந்தார்.

## புலிகள் தடை

1992இல் வன்னியில் புலிகள் மரங்களை அழிப்பதற்கு கடுமையான தடை விதித்திருந்தனர்.

"வன்னிப் பகுதியில் காடுகளை அழிப்பதோ, மரங்களை அழிப்பதோ தடை செய்யப்பட்டுள்ளது.

இயற்கை வளங்களான காடுகளை அழிப்பது எதிர்காலத்தில் மழை இல்லாமல் போகும் அபாயத்தை ஏற்படுத்தும். இதனால் விவசாய உற்பத்தி பாதிப்படையும்.

இதனால் மரங்களை வெட்டுவதோ, காடுகளை அழிப்பதோ கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது.

இத் தடையை மீறுகிறவர்கள் கடும் நடவடிக்கைக்கு உள்ளாவார்கள்." என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வன்னிப் பிரிவு அறிவிப்பு ஒன்றை வெளியிட்டிருந்தது.

இத் தடையை மீறி மரம்வெட்டப் போனவர்களும் உள்ளனர். அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் கடுமையான தண்டனை வழங்க புலிகள் தயங்கவில்லை.

தற்போது (1999) வன்னியில் பல காடுகளும், மரங்களும் அரச படையினரால் அழிக்கப்பட்டு வருகின்றன.

பெருவாரியான மரங்களை சிங்கள மர வியாபாரிகள் லொறிகளில் சென்று ஏற்றிவருகின்றனர்.

ஒரு லொறி நிறைந்த மரங்களின் விலையே பல இலட்ச ரூபாய்கள் தேறும். வளத்தை அழித்து யார் யாரோ வளம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

## வை.கோ.வை மாட்ட

ராஜீவ் கொலை வழக்கில் வை.கோ.வை சிக்கவைக்க மத்திய புலனாய்வுத் துறை அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சி ஒன்று 1992 ஜனவரியில் அம்பலமாகியது.

அப்போது வை.கோ. அவர்கள் தி.மு.க.வில் இருந்தார்கள். அன்றைய தமிழக ஆளும் கட்சியான அ.தி.மு.க.தான் வை.கோவை மாட்டிவிட சதி செய்திருக்கலாம் என்று கருதப்பட்டது.

சென்னை மத்திய சிறையில் இருந்த குணராஜ் என்னும் கைதி 8.01.92 அன்று மனு ஒன்றை சிறை அதிகாரியிடம் கையளித்தார்.

ராஜீவ் கொலை வழக்கை முதலில் விசாரித்த நீதிபதி சித்திக்குக்கு அந்த மனு அனுப்பப்பட்டு 20.01.92 அன்று நீதிமன்றப் புத்தகத்தில் பதிவானது.

அந்த மனுவில் குணராஜ் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"நான் மத்திய சிறையில் பத்மநாபா கொலை வழக்கில் சிறைவைக்கப்பட்டுள்ளேன்.

30.12.91 அன்று மதியம் சிறை முதன்மைக் காவலர் கதிர்வேலு நான் இருக்கும் பிரிவுக்கு வந்தார். வழக்கறிஞர் வந்துள்ளார் என்று அழைத்துச் சென்றார்.

நானும் வழக்கறிஞர் வந்துள்ளார் என்ற உற்சாகத்தில் சென்றேன். ஆனால் தனி அறையில் இரண்டு மத்திய புலனாய்வு துறை அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் பெயர், சங்கர் மற்றும் மோகன்தாஸ்.

அவர்கள் என்னை விசாரித்தனர். சுமார் அரைமணி நேரம் விசாரணை என்ற பெயரில் சித்திரவதைக்கு உள்ளானேன்.

என்னிடம் இரண்டு அதிகாரிகளும் மாறி மாறி கேள்வி கேட்டனர்.

'ஏன் திருச்சிக்கு வந்தாய்? சாந்தனைப் பார்க்க வந்தாயா?' என்று கேட்டனர். நான் "இல்லை" என்று கூறியதும் இருவரும் மாறிமாறி என் கன்னத்திலும், மர்மஸ்தானத்திலும் அடித்தனர்.

'ஏன் என்னை அடிக்கிறீர்கள்?' என்று கேட்டேன்.

உடனே சங்கர் என் மர்மஸ்தானத்தில் பிடித்து அழுத்தினார். எனக்கு உயிர் போவது போலிருந்தது.

நான் கத்தினேன். உடனே மோகன்தாஸ் எனது வாயைப் பொத்தினார். மீண்டும் கேள்விகள் கேட்கத் தொடங்கினார்கள்.

அப்பொழுது 'ராஜீவ் கொலை நடக்கப் போவது கோபால்சாமி எம்.பிக்கும் தெரியும் தானே?' என்று கேட்டனர்.

அதற்கு நான், 'எனக்கு கோபால்சாமியையே தெரியாது' என்று கூறினேன்

'பொய்யாடா கூறுகிறாய்? இரு உன்னை என்ன செய்கிறோம் பார்!' என்று மிரட்டினார்கள்.

மறுபடி என்னைப் பொலிஸ் காவலில் வைத்து கொல்லப் போவதாகவும் எச்சரித்தனர்.

இதன்பின்னர் சென்னை மத்திய சிறையில் என்னைத் தனிமைச் சிறையில் அடைத்துவிட்டனர்.

மாண்புமிகு நீதிபதி அவர்கள் என் உயிருக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்!" என்று தனது மனுவில் குணராஜ் கூறியிருந்தார்.

இதேபோலவே மற்றொரு கைதியான ஆனந்தராஜன் என்பவரையும் புலனாய்வு அதிகாரிகள் சித்திரவதை செய்ததாகப் புகார் கூறப்பட்டது.

இது தொடர்பாகவும் வழக்கறிஞர்கள் எஸ். துரைசாமி, வீரசேகரன் மனு ஒன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர்.

## துணைப்படை

மணலாறு கொக்குத் தொடுவாய் பகுதிகளில் படை நடவடிக்கை ஒருபக்கம் இருக்க, குடியேற்ற முயற்சிகளும் முடுக்கி விடப்பட்டன.

இவற்றைத் தடுக்க புலிகள் சில தாக்குதல்களை மேற்கொண்டதால் குடியேற்றங்கள் தடைப்பட்டன.

குடியேற்றத் திட்டங்களை தடுப்பதற்காக தமது துணைப்படையினரை புலிகள் கட்டியமைத்தனர்.

தமிழ்ழ துணைப்படை என்ற பெயரில் மக்களைத் திரட்டி ஆயுதப் பயிற்சி கொடுக்கப்பட்டது.

வயதானவர்கள் உட்பட விவசாயிகள் பலர் பயிற்சி பெற்று துணைப்படையாகச் செயற்பட்டனர்.

1991 இறுதியில் கொக்குத் தொடுவாயில் மேற்கொள்ள முயன்ற குடியேற்றத் திட்டங்கள் துணைப்படையினராலும், புலிகளாலும் முறியடிக்கப்பட்டன.

(தொடர்ந்து வரும்)

---

# மறுபிறவி

ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று, மேன் முறையீட்டில் விடுதலையானவர் புகைப்படப் பிடிப்பாளர் சுபா சுந்தரம். ராஜீவ் கொலை வழக்கு தொடர்பான புதிய தகவல்கள், விசாரணை நடந்த முறைகள் பற்றி அவர் கூறும் தகவல்கள் புதியவை. கண்டிப்பாக நாம் அறிந்து கொள்ள வேண்டியவை.

ஜனவரி 28ம் திகதி காலை கோர்ட்டுக்கு அழைத்துச் செல்வதற்காக சிறை அதிகாரி ஒவ்வொரு கட்டடத்திலும் உள்ள சிறைவாசிகளையும் தயாராகும்படி உத்தரவிட்டார். நான், தீர்ப்புக்கு செல்வதுபோல் தயாராகவில்லை. திருவிழாவுக்கு கிளம்புவது போல தயாராகிக் கொண்டிருந்தேன்.

தீர்ப்பு தினத்தில் அணிந்துகொள்வதற்காக, டெய்லரிடம் புது சட்டை, புது பேண்ட் தைக்கச் சொல்லியிருந்தேன். சட்டை வந்துவிட்டது. பேண்ட் தயாராகவில்லை. இப்படி ஏதேனும் ஆகலாம் என்று முன்கூட்டியே எதிர்பார்த்திருந்ததால் புதிதாக எட்டு முழ வேட்டி ஒன்றும் வாங்கி வைத்திருந்தேன்.

எனக்கு வேட்டி அணிந்து பழக்கமில்லை. அதனை இறுக்கமாக அணிவதற்கு பெல்ட்டும் இல்லை. அதனால் ஒரு சணல் கயிறை வாங்கி, வேட்டியை இறுக்கினேன்.

இடுப்பை இறுக்குகின்ற கயிறு போல, கழுத்தை இறுக்குகின்ற கயிறை தயார் செய்யச் சொல்லும் தீர்ப்பை நீதிபதி வெளியிடப் போகிறார் என்பதை அப்போது நான் யூகிக்கக்கூட இல்லை. ஒவ்வொரு பிளாக் சிறைவாசிகளாக கோர்ட்டுக்கு தயாராகிக் கொண்டிருந்தார்கள். ஏ-1 குற்றவாளியான நளினிக்கு கடவுள் பக்தி அதிகம். விநாயகர் பக்தர். அவர் பூஜையெல்லாம் செய்து முடித்து நம்பிக்கையுடன் தயாராகி வந்தார்.

ஈழத்தமிழரான சாந்தன், 'எதுவும் நடக்கலாம்' என்று எதிர்பார்த்திருந்தாலும் எந்த உணர்வையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் அமைதியாகவே இருந்தார். அவரது மனப்பக்குவத்துக்கு காரணம், அவர் ஒரு படைப்பாளியாக இருந்ததுதான். அவரிடம் எழுத்து வன்மை இருந்தது.

சிறையிலிருந்தபடியே புனைபெயர்களில் நிறைய கதைகளை எழுதியிருக்கிறார். தமிழ் வார ஏடுகள் பலவற்றில் அவரது கதைகள் பிரசுரமாகியிருந்தன.

ராஜீவ் கொலை வழக்கில் முக்கிய குற்றவாளியாக கைது செய்யப்பட்ட சாந்தன் எந்த உணர்வையும் முகத்தில் பிரதிபலிக்கவில்லை.

சிறை வளாகத்திலேயே இருந்த கோர்ட்டுக்கு, துப்பாக்கி ஏந்திய காவலர்களின் பாதுகாப்புடன் நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம்.

சிறை எஸ்.பி. என்னிடம் நெருங்கிவந்து, "இரவு சாப்பாட்டுக்கு உங்க வீட்டுக்கு போய் விடலாம்" என்றார். கோர்ட்டுக்கு அழைத்து வரும் வழியில் வெளிவாசலைப் பார்த்தேன்.

ஷாமியானா பந்தல் போடப்பட்டு அதில் பத்திரிகை சகோதரர்கள் நிரம்பி வழிந்திருந்தனர். புகைப்படக் கலைஞர்கள் ஏராளமாக இருந்தனர்.

கையில் கேமராவை பிடித்தபடி நிற்கும் சக பத்திரிகையாளர்களுக்கு நடுவே, அதோ எனது மகன் அருண்குமாரும் நிற்பது தொலைவிலிருந்தே தெரிகிறது. பாசத்துடன் அவனை பார்க்கிறேன்.

அவனருகில் குடும்ப அங்கத்தினர்களும் உறவினர்களும் நிற்பதை காணமுடிகிறது.

வழக்கறிஞர் துரைசாமி எனது தோளைத் தொட்டார். "உங்க பையன் கேமராவோடு இருக்கிறார். தீர்ப்பு முடிந்து விடுதலையாகி வரும்போது மற்ற கைதிகளை நீங்கதான் அந்த கேமராவில் படமெடுக்க வேண்டும்." என்றார் மிகவும் நம்பிக்கையான குரலில்.

கோர்ட்டுக்குள் அழைத்துச் செல்லப்பட்டோம். அன்றைய தினம், அமாவாசை. அந்த தினத்தில்தான் தீர்ப்பளிப்பது என ஏற்கனவே தீர்மானித்திருந்தார் நீதிபதி நவநீதம்.

எங்கள் இரவுகளை நிரந்தர அமாவாசையாக்க வேண்டும் என்பதாலோ என்னவோ 26 பேரும் தீர்ப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தோம். சி.பி.ஐ. தரப்பிலும் எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தது.

நீதிபதி நவநீதம் கோர்ட்டுக்குள் வந்தார். நிசப்தம்... நிசப்தம்... நிசப்தம்.

அவரது வார்த்தைகள்தான் அந்த நிசப்தத்தைக் கலைத்தது.

"சி.பி.ஐ. அதிகாரிகள் திறமையாக செயல்பட்டு இந்த வழக்கை கையாண்டிருக்கிறார்கள். குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் அக்குதொக்கில்லாமல் நிரூபணமாகியுள்ளது. 125 ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மற்ற குற்றங்களும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது." என்றவர், மதிய உணவுக்குப்பின் 2 மணிக்கு கோர்ட்டுக்கு வருமாறு உத்தரவிட்டார்.

நான் வழக்கறிஞர் துரைசாமியைப் பார்த்தேன்.

அவரது நம்பிக்கைகளெல்லாம் நொறுங்கிப் போய், தளர்ந்திருந்தார். மனது கலங்கி போயிருப்பதை கண்கள் காட்டின.



3

அவரது கலக்கத்தின் பின்னால் இருந்த அந்த பயங்கரம்... நியாயங்கள் தானாக முன்வந்து நம்மிடம் நிற்பதில்லை. சட்டங்களை வைத்துக் கொண்டுதான் நியாயத்தை தேட வேண்டியிருக் கிறது. எங்களின் நியாயங்களும் அப்படித்தான். சிறை வளாகமும் அதற்கு மேல் உள்ள வானமும் மட்டுமே எங்கள உலகம் என்றிருந்த நிலை இன்றோடு முடியும் என்று தான் 98-ம் ஆண்டு ஜனவரி 28ந் தேதியை எதிர்பார்த்திருந்தோம்.

ஆனால் எங்கள் உலகம் இன்னும் இன்னும் சுருங்குகிறது என்பது புரிந்துவிட்டதால்தான் வழக்கறிஞர் துரைசாமி கலங்கிப்போயிருந்தார். அவர் எதையோ சொல்ல நினைப்பதையும், அதை கஷ்டபட்டு விழுங்கிக் கொள்வதையும் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

மதிய உணவுக்காக இடைவேளை விடப்பட்டிருந்தாலும், அந்த நேரத்தில் யாருடைய தொண்டைக்குள்ளும் கவள சோறு கூட இறங்கவில்லை.

### சுபா சுந்தரம்

தீர்ப்பெனும் கோடாரி தலையில் விழுமோ, கழுத்தில் விழுமோ, நெஞ்சில் பாயுமோ என்ற பதற்றமும், பரபரப்பும் எங்களுக்கு மட்டுமல்ல, வழக்கறிஞர்களுக்கும் சிறைத்துறையினருக்கும் வெளியில் காத்திருப்பவர்களுக்கும் அதிகரித்துக்கொண்டே இருந்தது.

குற்றங்கள் நிரூபணமாகிவிட்டன என்று நீதிபதி சொல்லியிருந்ததால் எப்படிப்பட்ட தீர்ப்பும் வரலாம் என்று புரிந்துவிட்டது. இருந்தாலும், வழக்கறிஞர்கள் எங்களுக்கு தெம்பூட்டி, சாப்பிடுமாறு வற்புறுத்தினர். நான் கொஞ்சமாக மோர் சாதம் சாப்பிட்டேன்.

இரவு சாப்பாட்டுக்கு வீட்டுக்குப் போக முடியுமா என்பது பற்றி மெல்ல மெல்ல எழுந்த சந்தேகம் என்னை சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

## அலசுவது - இராஜதந்திரி

# ஸ்ரீலங்கா இராணுவம் 50 ஆண்டுகள்

**சி**றீலங்கா இராணுவத்தினர் தமது 50வது ஆண்டை கொண்டாடவுள்ளனர். அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

சிறீலங்கா இராணுவம் முதலில் முடிக்குரிய றோயல் இராணுவமாக பிரிட்டிஷ் ஆட்சியாளரின் கீழேயே செயற்பட்டு வந்தது.

சிறீலங்கா இராணுவத்தில் ஆரம்ப காலத்தில் முக்கிய பதவிகளை தமிழ் பேசும் அதிகாரிகளே அலங்கரித்தனர்.

அலங்கரித்தனர் என்றுதான் கூறவேண்டியுள்ளது. ஏனெனில் அக் காலத்தில் இராணுவத்தில் உயர் பதவி வகிப்பது கௌரவத்திற்குரிய ஒன்றாகவே கருதப்பட்டு வந்தது.

பணம் படைத்த உயர் குடும்பப் பின்னணிகள் உள்ளவர்களே இராணுவத்தில் முக்கிய பொறுப்புக்களை பெறமுடிந்தது. அப்போது



சண்டைகளோ, சச்சரவுகளோ கிடையாது என்பதால் இராணுவத்திற்கு சேருவதோ, உயர் பதவியில் அமருவதோ ஆபத்தானதாகவும் அமைந்திருக்கவில்லை.

சிறீலங்கா இராணுவத்தின் முதற் தளபதியாக அந்தப் பதவியை அலங்கரித்தவர் ஒரு தமிழர். அன்ரன் முத்துக்குமாரு என்பது அவரது பெயர். தற்போது அவர் அவுஸ்திரேலியாவில் வசித்து வருகிறார்.

1958ம் ஆண்டுவரை சிறீலங்கா இராணுவம் ஓரளவு பல் இனத் தன்மை கொண்டதாகவே விளங்கி வந்தது.

1958க்கு பின்னர் குறிப்பாக 1960களில் சிறீலங்கா இராணுவம் தன் பல்லினத் தன்மையில் இருந்து, சிங்கள இராணுவமாக படிப்படியாக குணாம்ச ரீதியிலான மாற்றம் அடையத் தொடங்கியிருந்தது.

இராணுவத்தில் உயர் பதவி வகித்த தமிழர்கள் பத்து வருடத்தின் பின்னர் ஓய்வு பெற்றனர். அல்லது இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றுக்கொண்டு பெரும் தொழில் நிறுவனங்களில் உயர் பதவிகள் பெற்றுச் சென்றனர்.

அவ்வாறு அவர்கள் ஓய்வு பெற்றதை சாதகமாக்கிக் கொண்டு, இராணுவத்திற்குள் தமிழர்களது ஆளுமைக்கு ஆப்பு வைக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இங்கும் ஒரு விடயத்தை கவனிக்கக் கூடியதாகவுள்ளது. தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழலாம் என்று காலத்திற்கு காலம் நம்பியே வந்துள்ளனர்.

ஆனால் சிங்களத் தலைமைகளும், சிங்கள ஆட்சியாளர்களும் தமிழ் மக்களைமிட்டு விழிப்புணர்ச்சியோடும், அவர்களை ஒடுக்கும் நீண்டகாலத் திட்டத்தோடுமே செயற்பட்டு வந்துள்ளனர்.

இராணுவத்தில் தமிழர்களது ஆளுமையை அகற்றி, சிங்கள இராணுவமாக அதனை உருமாற்றம் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும், இலங்கை முழுவதையும் என்றோ ஒருநாள் பௌத்த சிங்கள மக்களது நாடாக மாற்றும் நீண்டகால திட்டத்தின் ஒரு முக்கிய அங்கமேயாகும்.

சிறீலங்கா இராணுவத்தினர் முதன் முதலில் 303 ரக ரைபிளைத்தான் பயன்படுத்தி வந்தனர். 1970ம் ஆண்டுவரை 303 ரக ரைபிள்தான் சிறீலங்கா இராணுவத்தின் பாவனையில் இருந்து வந்தது.

1970ம் ஆண்டு ஜே.வி.பி. கிளர்ச்சி வெடித்தபோதும், பிரிட்டிஷ் ஆயுதங்களையே இராணுவம் வைத்திருந்தது.

கிளர்ச்சியின்போது இந்தியா, சீனா போன்ற நாடுகள் சிறிமாவோ அம்மையாரின் தலைமையிலான அரசாங்கத்திற்கு நட்புக்கரம் நீட்டியிருந்தன. இராணுவரீதியாக உதவியளித்து கிளர்ச்சியாளரிடமிருந்தும் காப்பாற்றியிருந்தன.

1970ம் ஆண்டுக்குப் பின்புதான் இலங்கை ஆட்சியாளர்கள் தமது இராணுவத்தினருக்காக முதன் முதலில் ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டனர்.

சிறிமாவோ அம்மையாரின் தலைமையிலான அரசாங்கத்திற்கும், சீன அரசுக்கும் இடையே அப்போது நெருக்கமான உறவு நிலவியது. தமது இராணுவத்துக்குரிய ஆயுதங்களை சீனாவிடமிருந்தே சிறீலங்கா ஆட்சியாளர்கள் பெற்றுக்கொண்டனர். ரி.56 ரக துப்பாக்கிகளே முதன் முதலில் வாங்கப்பட்டிருந்தன.

1970ம் ஆண்டு கிளர்ச்சியின் பின்னரே இலங்கை விமானப்படைக்கும் இந்தியா, பிரான்ஸ் போன்ற நாடுகளது வான்கலங்கள் சில பெறப்பட்டிருந்தன.

1970ம் ஆண்டுக்கு முன்பு இராணுவத்தின் மொத்த எண்ணிக்கை பத்தாயிரத்துக்கும் குறைவாகவே இருந்தது. பிரிகேடியர் பதவிதான் இராணுவத்தில் உயர்ந்த பதவியாக விளங்கியது. படை எண்ணிக்கை கூடியபோதே மேஜர் ஜெனரல், லெப்டினன்ட் ஜெனரல், ஜெனரல் போன்ற பதவிகளும் உருவாகின.

தற்போது இலங்கை இராணுவத்துக்குள் மேஜர் ஜெனரல்கள் மட்டும் பத்துக்கு மேற்பட்டோர் இருக்கின்றனர். இராணுவத்தினரின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை தாண்டிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

ஜே.வி.வி. கிளர்ச்சிக்குப் பின்னர் இராணுவம் ஓரளவு பலப்படுத்தப்பட்டபோதும், பெரியளவுக்கு நவீனமயமாகவில்லை.

பெரும் மரபுப் போரில் ஈடுபடத்தக்க நவீன கவச வாகனங்கள், கனரக வாகனங்கள், நீண்டதூர ஆட்டிலெறிகள், நீண்டதூர மோட்டார்கள், விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் போன்றவை இராணுவத்தினரிடம் இருக்கவில்லை.

சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சிக் காலத்தில்தான் வடக்குக்கு பெருமளவான இராணுவத்தினர் முதன் முதலாக அனுப்பப்பட்டனர்.

தமிழ் பேசும் மக்களது உரிமைப் போராட்டத்தை முளையிலேயே கிள்ளியெறிவதற்கு அம்மையார் வெகு தீவிரம் காட்டினார்.

பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் காரணமின்றி கைது செய்யப்பட்டு பல்லாண்டுகளாக சிறையில் வைக்கப்பட்டனர். மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக விசாரணையின்றி சிறைவைக்கப்பட்டவர்களும் இருந்தனர்.

இன்று அவசரகாலச் சட்டத்தை நியாயப்படுத்த, யுத்தம் நடப்பதால்தான் அச் சட்டம் நீடிப்பதாக வரலாற்றை திரிபுபடுத்தி தமிழ் மக்களை ஏமாற்ற முயற்சிக்கிறார்கள்.

ஆயுதப் போராட்டம் தீவிரம் பெறாத 1970 களில் சிறிமாவோ அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் அவசரகாலச் சட்டத்தின் கீழ்தான் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் சிறைக்கூண்டுக்குள் தள்ளப்பட்டனர்.

அக்காலகட்டத்தில்தான் வடக்கில் இராணுவமும் அச்சுறுத்தலுக்கு உரிய கருவியாகச் செயற்படத் தொடங்கியது.

சிறிமாவோ அம்மையாருக்கு அடுத்தபடியாக 1977இல் ஐ.தே.கட்சி பதவிக்கு வந்திருந்தது. அவர்களது கொள்கைகள் முன்பிருந்த ஆட்சியின் கொள்கைகளுக்கு நேர்மாறாக அமைந்திருந்தன.

திறந்த பொருளாதாரக் கொள்கை, இலங்கையை சிங்கப்பூராக மாற்றுவது என்றெல்லாம் சிங்கள மக்களுக்கு சொர்க்கத்தைக் காட்டப்போவதாக ஜே.ஆர். ஜெயவர்த்தனா புதிய கொள்கைகளை வகுத்திருந்தார்.

ஆயினும் ஒரே ஒரு அடிப்படைக் கொள்கையில் மட்டுமே ஜே.ஆர். தனக்கு முன்பிருந்த அரசாங்கங்களின் கொள்கையை மேலும் சிறப்பாக முன்னெடுக்க முடிவு செய்திருந்தார்.

இலங்கைத் தீவை பௌத்த சிங்கள மயமாக்கும் கொள்கைதான் அதுவாகும். அக்கொள்கையை முன்னெடுப்பதோடு, இராணுவத்தையும், அவசரகால சட்டத்தையும் பயன்படுத்தி தமிழ் பேசும் மக்களை ஒடுக்கிவைத்திருக்கும் சிறிமாவோ அம்மையாரின் உத்தியையும் தொடர்ந்து முன்னெடுக்க ஆரம்பித்தார்.

சிறிமாவோ அம்மையாரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பல வேலைத்திட்டங்களை ஐ.தே.கட்சி ஆட்சியாளர்கள் தூக்கி குப்பைத் தொட்டியில் வீசியெறிந்தனர்.

ஆனால் அம்மையார் அரசு ஆரம்பித்து வைத்த இராணுவத்தை நவீன மயப்படுத்தி வடக்கு-கிழக்கில் குவிக்கும் வேலைத்திட்டத்தை மட்டும் ஐ.தே.கட்சி ஆட்சியாளர்கள் கைவிடாது, மேலும் சிறப்பாக நிறைவேற்றத் தலைப்பட்டனர்.

1978ம் ஆண்டு ஜனாதிபதி ஆட்சி முறை வந்தபின்னர் மாபெரும் இராணுவ அணிவகுப்பு ஒன்று ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு வழங்கப்பட்டிருந்தது. இலங்கைத் தீவில் நடைபெற்ற முதலாவது மாபெரும் இராணுவ அணிவகுப்பு அதுவேயாகும்.

ஐ.தே.கட்சியின் ஆட்சியில்தான் இராணுவம் மிக நவீனமயமானது. அன்றைய தென்னாபிரிக்க நிறவெறி அரசிடமும், இஸ்ரேல், பாகிஸ்தான் போன்ற நாடுகளிடமும் அயுதங்களும், கவசவாகனங்களும், வான்கலங்களும், கடற்கலங்களும் வாங்கிக் குவிக்கப்பட்டன.

அமெரிக்க அரசு தனது நேச நாடுகள் ஊடாக இலங்கை இராணுவத்துக்கு ஆயுதங்களை அள்ளிக்கொடுத்ததோடு பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

இனப்பிரச்னைக்கு இராணுவத்தீர்வு கண்டே தீருவது என்ற முனைப்போடு இராணுவம் நவீனமயப்படுத்தப்பட்டதால், இயல்பாகவே இனரீதியான உணர்வும் இராணுவத்துக்குள் மேலோங்கி நின்றது.

இக்கட்டத்தில் விரல்விட்டு எண்ணத்தக்க தமிழர்கள் சிலரே இராணுவத்துக்குள் இருந்தனர். அவர்களும் கேந்திர முக்கியத்துவமான பணிகளில் இருந்து தள்ளியே வைக்கப்பட்டிருந்தனர்.

சிறீலங்கா இராணுவம் மிக நவீனமாக வளர்ச்சி கண்டிருந்தபோதுதான் 1983ம் ஆண்டு இனப்படுகொலை நடைபெற்றிருந்தது.

இந்த இனப்படுகொலை வெறியாட்டத்தை இராணுவம் நினைத்திருந்தால் 24 மணிநேரத்திற்குள் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருக்க முடியும்.

ஆனால் முப்படைக்குப் பொறுப்பான ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா இராணுவத்தை நவீனமயப்படுத்தியது இன ஒடுக்குமுறைக்கே தவிர, இனப்படுகொலையை நிறுத்தப் பயன்படுத்துவதற்காக அல்ல. எனவே இனப்படுகொலை வெறியாட்டத்தை அவர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்.

ஐ.தே.கட்சிக் காலத்தில் அரச இராணுவம் பெரு வளர்ச்சி பெற்ற அதே நோக்கில், தமிழ் பேசும் மக்களிடையேயும் விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவு இராணுவத்துக்கு சவால் விடத்தக்க இராணுவமாக உருவாகிக் கொண்டிருந்தது.

அரச இராணுவத்தின் அடக்குமுறைகளே அதற்கு சமமான இன்னொரு ஆயுதப் படையை தமிழ்பேசும் மக்கள் மத்தியில் இருந்து விரைவாக வளர்ச்சி பெற வைத்துள்ளன.

இன ஒடுக்குமுறை என்பது பேரினவாத நிலைப்பாடாகும். அதனை பதவிக்கு வரும் அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் முன்னெடுத்து வருகின்றன.

இந்த அரசாங்கங்களே தமது இன ஒடுக்குமுறை கொள்கையை முன்னெடுக்க இராணுவத்தை ஒரு முக்கிய கருவியாக பயன்படுத்தி வருகின்றன.

சிறீலங்கா இராணுவத்தில் உயர் பொறுப்பில் இருந்த, தற்போதும் இருக்கின்ற அதிகாரிகள் எவருமே ஆட்சித் தலைமைக்கு விரோதமாக அவர்கள் விருப்பத்துக்கு எதிராக நடக்கக் கூடியவர்கள் அல்ல. சிறீலங்கா இராணுவத்தின் 50 வருடகால வரலாற்றில் இது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இதனால்தான் இன்று நாட்டின் நிகழ்ச்சிப் போக்கில் இராணுவமே தீர்க்கமான பங்கை வகிக்கின்றபோதும், இராணுவப் புரட்சிகள், சதிகள் போன்ற எந்த நிகழ்வுக்கும் துளியும் வாய்ப்பே இல்லாதுள்ளது.

ஆட்சியில் யார் அமர்ந்தாலும், அவர்களுக்கு மிக விசுவாசமான படை அதிகாரிகளே இங்குள்ளனர். யாழ் குடாநாட்டை சூரியக்கதிர் மூலம் கைப்பற்றிய படையினர் தம்மை 'சந்திரிக்கா படையினர்' என்று அழைத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

1987 இல்.சிறீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான முதலாவது பெரும் போரைத் தொடுத்திருந்தது. 'ஒப்பரேசன் லிபரேசன்' என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட இந்த படை நடவடிக்கையின்போது, அகதி முகாம்கள், ஆலயங்கள் போன்றவற்றில் தஞ்சமடைந்திருந்த நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

எனினும், யாழ் குடாநாட்டை ஐ.தே.கட்சிக் காலத்தில் இராணுவத்தினரால் கைப்பற்ற முடியவில்லை.

அதேசமயம் ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் வடக்கு-கிழக்கில் பாரிய இராணுவ முகாம்கள்



பல விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன.

டென்சில் கொப்பக்கடுவ, விஜயவிமலரத்ன போன்ற சிறந்த இராணுவத் தளபதிகள் புலிகளது கண்ணிவெடித் தாக்குதலில் பலியாகினர். இத்தாக்குதலுக்கு புலிகள் உரிமை கோரியதோடு, கண்ணிவெடிகளை புதைத்த புலிகளுக்கும் பிரபாகரனால் சிறப்புப்பரிசுகள் வழங்கப்பட்டிருந்தன.

எனவே ஐ.தே.கட்சி ஆட்சியாளர்கள் இராணுவத்தை பலப்படுத்திய அதேசமயம், பலத்த இழப்புக்களையும் இராணுவம் சந்தித்திருந்தது.

இதன்பின்னர் ஆட்சிக்கு வந்த தற்போதைய சந்திரிக்கா அரசாங்கம், ஐ.தே.கட்சி ஆட்சியாளரைவிட இராணுவத்தீர்வு முனைப்பில் பல படிகள் முன்னே சென்றுள்ளது.

யாழ் குடாநாட்டில் கவசவாகனப் படைப் பிரிவுகளை முதுகெலும்பாக கொண்ட மூர்க்கமான படை நகர்வாக சூரியக்கதிர் மேற்கொள்ளப்பட்டது. மக்கள் அங்கிருந்து இடம்பெயராது இருந்திருந்தால் பெரும் உயிர்ப்பலிகள் நேர்ந்திருக்கும்.

மக்களது உயிர்களை பற்றி கவலையின்றி யுத்த வெற்றியை மட்டுமே குறியாக வைத்து நடத்தப்படும் படை நகர்வுகளுக்கு தற்போதைய ஆட்சியாளர்கள் அனுமதித்து வருகின்றனர்.

இனப்பிரச்சனைக்கான இராணுவத்தீர்வுக்காக மட்டுமன்றி, அரசாங்கத்தின் தேர்தல் வெற்றி தோல்விகளை நிர்ணமிக்கும் பாத்திரத்தையும் தற்போது இராணுவம் வகித்து வருகிறது.

தனது 50 ஆண்டுகால வரலாற்றில் சிறீலங்கா இராணுவம் வந்தடைந்துள்ள கட்டம் இதுதான்.

தற்போது வன்னிச் சமர்தான் இராணுவம் எதிர்நோக்கியுள்ள மிக முக்கிய சவாலாக உள்ளது. சிறீலங்கா இராணுவம் சந்தித்துள்ள மிகப் பாரிய மரபுச் சமரும் இதுவேயாகும்.

இந்தச் சமர்க்களமானது இலங்கைத் தீவில் அரச இராணுவத்துக்கு சமமான இன்னொரு இராணுவமும் இருக்கிறது என்பதை துல்லியமாக உலகறியச் செய்துள்ளன.

இரண்டு வருடம் முடிந்து மூன்றாவது ஆண்டுக்குள் வன்னிச் சமர் புகுந்துள்ளது. சுமார் 70 கிலோமீட்டர் நீளமான நெடுஞ்சாலையை இரண்டு வருடமாக கைப்பற்ற முடியாது போனமையும், 'ஜயசிக்குறுய்' கைவிடப்பட்டமையும் அரச இராணுவத்துக்கு மிகப் பெரிய பின்னடைவேயாகும்.

அரச இராணுவத்தின் 50 ஆண்டுகால வரலாற்றில் மிகப் பெரும் சமராகவும், இலக்காகவும் யாழ் குடாநாட்டுக்கான இராணுவ விநியோகப் பாதைத் திறப்பே அமைந்துள்ளது.

ஆனால் தனது 50வது ஆண்டுக் கொண்டாட்டத்தின்போதுகூட அந்த இலக்கை இராணுவத்தால் எட்டிவிட முடியாதென்றே தெரிகிறது.

இதற்கிடையே தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கையை பெறும் முயற்சியிலும் இராணுவம் பலத்த தோல்வியையே சந்தித்துள்ளது.

யாழ் குடாநாட்டில் சூரியக்கதிரின் பின்னர் அங்கு சென்ற மக்களிடம் படையினர் இன்முகத்தோடு பழகினார்கள். நற்பெயரும் கிட்டியிருந்தது. ஆனால் இதுவெல்லாம் வெகு துரிதமாக சரிந்து வீழ்ந்திருக்கிறது.

குடாநாட்டில் காணாமல் போனோர் விவகாரம், பாலியல் வல்லுறவுகள், பழிவாங்கும் பதிலடிகள், செம்மணி புதைகுழிகள் போன்றவை இராணுவம் மீதான அச்சத்தையே மக்களிடையே ஏற்படுத்தியுள்ளன. இந்த அச்சம் புலிகளுக்கு சாதகமான சூழ்நிலையையே தோற்றுவித்து வருகின்றன.

கிழக்கிலும் படையினரின் பதிலடிகளும், அச்சமூட்டல்களும் அவர்கள் தொடர்பான அந்நிய மனப்போக்கையே தமிழ்பேசும் மக்களிடையே உருவாக்கியுள்ளன.

எனவே, சிறீலங்கா இராணுவம் தனது ஆரம்பத்தில் கொண்டிருந்த பல்லினத் தன்மையை இன்று இழந்து நிற்பதோடு, ஏனைய இனங்களது நம்பிக்கையை பெறுவதற்கும் தவறிவிட்டது.

ஐம்பது ஆண்டை இராணுவம் கொண்டாடும்போது, வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட மாபெரும் சொத்தழிவுகள், உயிரிழப்புக்கள், இடம்பெயர்வுகள் போன்ற மாபெரும் துயர்கள்தான் தமிழ் பேசும் மக்களது நினைவில் தோன்றும் என்பது கசப்பான உண்மையாகும்.

---

## சந்திக்கு வராத சங்கதிகள்

**நக்கீரன்**

**வ**வுனியாவில் ரெலோ தாக்கப்பட்டதை அதன் சக தமிழ்க்கட்சிகளேகூட உளப்பூர்வமாகக் கண்டிக்கவில்லை.

தமிழ்க் கட்சிகளது சுயரூபம் சமீபகாலமாக வெகு நேர்த்தியாக அம்பலமாகிக் கொண்டிருக்கிறது.

புலிகள் தாக்குதல் நடத்தினால் 'சகோதர மோதல்', 'சகோதரப் படுகொலை', 'ஜனநாயக விரோதம்' என்றெல்லாம் அறிக்கைகள் பறந்து பறந்து வருவதுண்டு.

ஆனால் ரெலோவை புரட்டி புரட்டி எடுத்திருக்கிறார்கள். அவமானப்படுத்தி இருக்கிறார்கள். இன்று அவர்களுக்கு, நாளை எமக்கு என்று எக் கட்சிக்கும் உணர்ச்சி பொங்கவில்லை.

தமிழ்க் கட்சிகள் எல்லாமே ஐக்கிய இலங்கையை தமது இன்றைய கொள்கை என்று கூறுகின்றன.

அப்படியானால் தமிழ்பேசும் மக்களும் சிங்கள மக்களும் சகோதரர்களாக வாழ்வதை நாடிநிற்கும் கட்சிகள் என்று அர்த்தம்.

எனவே, படையினரும் தமிழ்க் கட்சிகளுக்கு சகோதரர்கள்தான். ஆகவே ரெலோமீதான தாக்குதலையும் சகோதர மோதலாக கருதியாவது கண்டித்து இருக்கலாம்.

புலிகள் எமது ஆட்கள். அவர்களே நம்மைத் தாக்கலாமா? படையினர் அப்படியல்லவே. இப்படித்தான் நடப்பார்கள் என்று தமிழ்க் கட்சிகள் விளக்கம் கூறுவது அவர்கள் கொள்கைக்கு மாறானது. ஏனெனில் தமிழ்க் கட்சிகளுக்கு புலிகளை விட தற்போது நெருங்கிய சகோதரர்கள் படையினரே.

●●●

**கூட்டணி** பா.உ. ஜோசப் பரராஜசிங்கம் இலண்டனில் புலிகளது ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்திருக்கிறார்.

கனடா சென்று திரும்பும் வழியில்தான் பாலசிங்கத்தைப் பார்த்திருக்கிறார்.

'ஓநாய்கள் மத்தியில் ஆடுகள் போல அரசியல் செய்யாதீர்கள். ஒருபோதும் சிங்களத் தலைமைகள் தகுந்த தீர்வுக்கு தாமாக உடன்பட மாட்டார்கள்.' என்று பாலசிங்கம் கூறினாராம்.

கூட்டணியில் நீலன்மீது தமக்கு நல்லபிப்பிராயம் இருக்கவில்லை என்று கூறிய பாலசிங்கம், இரா.சம்பந்தர், ஆனந்தசங்கரி போன்றோர்மீதும் தமக்குள்ள அதிருப்தியை கோடிட்டுக் காட்டியுள்ளாராம்.

### உலகப் பொலிஸ்காரனிடம் முறையீடு!

'விடுதலைப் புலிகள் அரசியல் பேச்சுக்களுக்கு எதிரானவர்களல்ல. ஆனால் சந்திரிக்கா அரசு பேச்சுக்கு தயாராக இல்லை. போருக்கே முதலிடம் கொடுக்கிறது' என்றும் பாலசிங்கம் கூறியிருக்கிறார்.

-★-

**அ**ம்பாறை மாவட்டத்தில் தமிழ்க் கட்சிகளது சகல நடவடிக்கைகளையும் நிறுத்துமாறு புலிகள் கூறிவிட்டனர்.

மட்டக்களப்பில் கூட்டணி எம்.பிகள் மக்களைச் சந்திக்க மட்டும் புலிகள் அனுமதித்துள்ளனர். கட்சிப் பணிகளை செய்வதற்கு அனுமதி கிடையாது.

அம்பாறையில் தமது கட்டளையைமீறி தமிழ்க் கட்சிகள் செயற்பட்டால் தண்டனை தவிர்க்க முடியாதது என்று திட்டவட்டமாகப் புலிகள் கூறிவிட்டனர். அம்பாறையில் புலிகளது கவனம் திரும்பியிருக்கிறது. விசேஷ அதிரடிப்படை மீதும் தொடர் தாக்குதல்கள் நடந்துள்ளன.

கூட்டணி பிரமுகரும் அம்பாறையில் கடத்தப்பட்டார். குறிப்பிட்ட பிரமுகர் நீலன் திருச்செல்வத்தின் பெயரைப் பயன்படுத்தி, வேலை பெற்றுத்தருவதாக பணம் கறந்ததாகவும் புகார்கள் போனதாம்.

★★★

**பி**ரிட்டன்மீது இலங்கை அரசு கசப்பாக இருக்கிறது. பிரிட்டனுக்கு அமெரிக்கா புத்தி சொல்ல வேண்டும் என்று இலங்கைத் தூதர் அமெரிக்காவில் கூறியிருக்கிறார்.

இது பிரிட்டனை மேலும் சீண்டிவிடும் விளையாட்டு. இலங்கைத் தூதரின் பேச்சு பிரிட்டனுக்கு நிச்சயம் எரிச்சலைக் கொடுத்திருக்கும்.

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு மத்தியஸ்தம் வகிக்க பிரிட்டன் முன்வந்ததும் இலங்கை அரசுக்கு பிடிக்காத சங்கதி.

அன்ரன் பாலசிங்கத்துக்கு பிரிட்டன் கதவு திறந்துவிட்டதும் மாளாத எரிச்சல். அதிர்ச்சி, அதுமட்டுமா, நீலன் கொலைபற்றி பிரிட்டன் கண்டுகொள்ளவே இல்லை. அதுவும் சந்தேகம்.

அன்ரன் பாலசிங்கத்துக்கு பிரிட்டன் உதவுவதாக 'ஐலண்ட்' மறைமுகமாக குற்றம்சாட்டியிருந்தது.

பிரிட்டன்மீது பேரினவாதிகளுக்கு ஏற்பட்ட கோபத்தை, இலங்கை அரசின் தூதரும் துரிதமாக எதிரொலித்துள்ளார்! அந்தளவுக்கு ஒரு புரிந்துணர்வு.

இலங்கைத் தமிழர்களுக்கு எங்கெங்கு ஆதரவு உண்டோ அங்கெல்லாம் கத்தரிக்கோல் போடுவதில் தற்போதைய ஆட்சியாளருக்குள்ள ஈடுபாட்டை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

அமெரிக்கா எஜமானர் போன்றும், அதுதான் பிரிட்டனை குட்டி புத்தி சொல்ல வேண்டும் போன்றும் இலங்கைத் தூதர் கூறியிருப்பது இராஜதந்திரம் அல்ல. இராஜ அந்தரம்.

அமெரிக்காவை உலகப் பொலிஸ்காரனாக இலங்கை அரசு ஏற்றுக்கொண்டுவிட்டது என்பதும், தூதரின் பேச்சால் துலக்கமாகியுள்ளது.

உலகப் பொலிஸ்காரனான அமெரிக்காவிடம் பிரிட்டனைப் பற்றி புகார் செய்துள்ளார்கள். ●



படிப்பகம்

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 77

**கடந்தவாரம்**

**அமீனின் இரண்டாவது மனைவியான கேயின் உடலை அவளது பிள்ளைகளோடு சென்று பார்வையிட்டான் அமீன். கேயை வசை பாடினான். கேயின் உடல் அவளது சொந்த ஊரான அருவாவில் அடக்கம் செய்யப்பட்டது.**

**இனி....**

# இடி அமீன்

கேயின் உடல் அடக்கம் செய்யப்பட்ட நிகழ்ச்சிக்கு அமீன் செல்லவில்லை. தனது சார்பாக யாரையும் அனுப்பிவைக்கவுமில்லை.

கேயின் தகப்பனாருக்கு அமீன்மீது பலத்த சந்தேகம். தன் மகளை அமீன்தான் கொடூரமாக வெட்டிக் கொலை செய்திருக்கிறான் என்று நம்பினார்.

அமீனைத் தவிர வேறு எவருக்கும் இத்தகைய காட்டுமிராண்டித்தனமாகக் கொலை செய்யும் எண்ணம் எழாது என்பதும் அவரது நம்பிக்கைக்குத் தூண்டுகோலாக இருந்தது.

மருத்துவமனையில் வந்து அமீன் தன் மகளை வசைபாடியபோது அமீனின் மேலிருந்த சந்தேகம் உறுதியாகிவிட்டது.

தானாக அறிந்து கொண்ட உண்மையை தன் மனதுக்குள் புதைத்துத்தான் வைத்திருந்தார்.

ஆனால் இறுதிச் சடங்கில் தன் மகள் அநாதைப் பிணம்போல புதைக்கப்படுவதைக் கண்டதும் பொறுக்க முடியவில்லை. மனதில் புதைந்திருந்ததை உதடுகளால் வெளியேற்றிவிட்டார்.

"என் மகளைக் கொன்ற பாவியை எனக்குத் தெரியும். உரிய நேரத்தில் அந்த உண்மையை ஊர் உலகம் அறியச் சொல்லாமல் விடமாட்டேன்!" என்று பெரும் சத்தமாகக் கூறினார்.

கேயின் இறுதிச் சடங்கை கண்காணிக்க அமீனின் உளவாளிகள் சாதாரண மக்கள்போல வந்திருந்தனர்.

அந்த அப்பாவிக் கிழவருக்கு அது தெரியவில்லை. அமீனின் காதுகளுக்கு உடனடியாக தகவல் பறந்தது.

**"கிழவருக்கு ஆயுள் போதும் என்று நினைக்கிறேன். மகளுடன் சென்று விடவேண்டும் என்று ஆசைப்படுகிறான் கிழவன்!"** என்று இடிச் சிரிப்பை உதிர்த்தான் அமீன்.

கேயின் தகப்பனாரை இரவோடு இரவாகக் கடத்தி காணாமல் போகச் செய்திருக்கலாம். அல்லது வேறு ஏதாவது வழியில் கொலை செய்திருக்கலாம்.

ஆனால் அமீன் பழிவாங்குவதிலும் கொடூர ரசனை கொண்டவன். தனக்கு குரூர திருப்தி ஏற்படும்விதமாக எதிரிகளை ஒழித்துக் கட்டுதவில் அமீனுக்குள்ள அலாதிப் பிரியம் உலகப் பிரசித்தமானது.

தன் முன்னாள் மனைவியின தந்தையார், வயதானவர் என்பவற்றைக்கூட சுத்தமாக மறந்துவிட்டு, அவரை வதைத்துப் பழிவாங்க திட்டம் போட்டான்.

திட்டம் நிறைவேறியபோது கேயின் தகப்பனார் சிறையில் இருந்தார். தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தார்.

"சாதாரண மனிதரான நான் ஒரு சர்வாதிகாரியை எதிர்க்க நினைத்தது முட்டாள்தனம்!" என்று தன்னைத்தானே நொந்து கொண்டார்.

'அதிபரது முன்னாள் மனைவி கேயின் தந்தையார் கைது. அவரது வீட்டிலிருந்த பெருந்தொகையான ஆயுதங்கள் மீட்பு. அதிபரைக் கொல்ல நடந்த சதி அம்பலமாகியுள்ளது. கேயின் தந்தையார் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருகிறார்.'

இப்படித்தான் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தது.

அந்தச் செய்தி வந்த பத்திரிகைகளை கேயின் தகப்பனாரின் முன்பாக வீசினார்கள்.

"படித்துப் பார் கிழவா! நீ எத்தனை பெரிய பயங்கரவாதி என்பது உனக்கே தெரியாது! ஊருக்கே நாங்கள் சொல்லித்தான் தெரியும்!" என்று அசிங்கமாகச் சிரித்தான் அந்த இராணுவ அதிகாரி.

பத்திரிகையைப் படித்துப் பார்த்துவிட்டுத்தான் கேயின் தகப்பனார் தேம்பிக் கொண்டிருந்தார்.

பத்திரிகைகளைப் படிக்கக் கொடுத்து, அவரிடம் என்ன பிரதிபலிப்புத் தெரிகிறது என்று தன்னிடம் தெரிவிக்குமாறு அமீன்தான் உத்தரவு போட்டிருந்தான்.

**"கிழவனுக்கு அடி, உதை, தேவையில்லை. உளவியல் ரீதியான வதையே போதும். அப்படியே சொர்க்கத்துக்குப் போய் விடுவான்!"** என்றும் அமீன் கூறியிருந்ததால், உடல்ரீதியான சித்திரவதைகள் எதுவும் இடம்பெறவில்லை.

ஆனால் உடல்வதையைவிட தன்மீது சுமத்தப்பட்ட பொய்யான, பொல்லாத பழியை அறிந்ததுமே கிழவருக்குப் பாதி உயிர் போய்விட்டது.

'தேம்பித் தேம்பி அழுகிறார். பாதிப் பிணமாக மாறிவிட்டார்' என்று அமீனுக்கு கூறியபோது, மலைப்பாம்புக் கறியை ஒரு பிடி பிடித்துக் கொண்டிருந்தவன், **"கறியை விட ருசியான செய்தி!"** என்று சிரித்தான்.

அமீன் விவாகரத்துச் செய்த மனைவியரில் நோறாதான் அதிஷ்டசாலி. அமீனால் இம்சிக் கப்படாது தப்பினாள்.

நோறாவுக்கு 40 வயது. ஆசிய வர்த்தகர்களை வெளியேற்றியபோது, அவர்கள் கைவிட்டுச் சென்ற பெரிய துணிக்கடை ஒன்றை நடத்துமாறு அமீன்தான் அவளிடம் ஒப்படைத்திருந்தான்.

நோறா அமீனுக்கு ஏற்றபடி கட்டிலில் ஈடுகொடுக்க முடியாதவளாக- உடல்ரீதியாகத் தளர்ந்து போனாள்.

அமீனின் வக்கிரமான ஆசைகளுக்கும் அவள் வளைந்து கொடுக்க மறுத்தாள். அவளது உறவை அமீன் வெட்டிவிட்டதற்கு முக்கிய காரணம் அதுதான்.

நோறாவை அமீன் அவமானப்படுத்தாது விட்டதற்கும் காரணம் இருந்தது. நோறா லாங்கி இனத்தைச் சேர்ந்தவள்.

உகண்டாவில் லாங்கி இனத்தினர் செல்வாக்குப் பெற்ற இனமாக இருந்தனர். லாங்கி இனத்தாருடன் பகையைத் தேடிக்கொள்ள அமீன் விரும்பவில்லை.

இதனால் நோறாவுக்கு விவாகரத்துக்கு பின்னரும் அமீன் பல உதவிகளைச் செய்தான். அவளுக்கும் தனக்கும் பிறந்த பிள்ளைகளுக்கும் நோய்கள் வந்தால் லிபியா சென்று மருத்துவம் செய்யவும் அமீனே உதவினான்.

தன் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதுபோல அமீன் பலமுறை கனவு கண்டான்.

ஒரு பெண்ணால்தான் தனக்கு மரணம் நேர்வதாகவும் அமீன் கனவு கண்டிருந்தான். அவள் தன்னைக் கட்டியணைத்து முத்தமிட்டபடி, தன் முதுகில் கத்தியால் ஆழமாகக் குத்துவதாகவே கனவு கண்டான்.

இந்தக் கனவுக்குப் பின்னர் பெண்களோடு சகவாசம் வைத்துக் கொள்வதிலும் உஷாரானான்.

தன்னிடம் வரும் பெண்ணை உடல் முழுவதும் தடவிப்பார்த்துவிட்டே, தன் அறைக்குள் அனுமதிப்பான்.

அமீன் இப்படி தங்கள் உடம்பு முழுக்கத் தடவுவதற்கு அவசர ஆசைதான் காரணம்



என்றே சில பெண்கள் நினைத்துக் கொள்வர்.

**"இது வரவேற்பு வருடல்!"** என்று சொல்லிவிட்டு அமீன் சிரிக்கிற சிரிப்பின் சத்தத்திலேயே பெண்களுக்கு சர்வமும் பயமாகிவிடும்.

தனது மாளிகையின் ஒரு பகுதியிலேயே நாலாவது மனைவி மெடினாவையும் குடியமர்த்தினான்.

தனது மனைவியரில் மூவரை விவாகரத்துச் செய்தாலும் அவர்களது பிள்ளைகளை அமீனே வளர்த்தான். நோறாவின் பிள்ளைகள் மட்டும் தாயிடம் சென்று வருவார்கள்.

தன் மனைவி, பிள்ளைகளுக்குத் தெரியாமலேயே ஜனாதிபதி மாளிகைக்கு அழகிகளை அழைத்து சல்லாபித்துக் கொண்டிருப்பான்.

**"இன்று இரவு முக்கியமான ஆவணம் ஒன்றைப் பார்வையிடப் போகிறேன்!"** என்று மெடினாவுக்கு கூறிவிடுவான்.

மெடினாவுக்கு அமீன் பார்வையிடப் போகும் 'முக்கிய ஆவணம்' எதுவென்று தெரியும். தெரிந்ததுபோலக் காட்டிக் கொள்ள மாட்டாள்.

மெடினாமீதும் அமீன் சந்தேகப்பட்ட தருணம் ஒன்று வந்தது.

தனது நடமாட்டங்களைக் கட்டுப்படுத்திக் கொண்ட அமீன், வெளியே செல்லும் அவசியம் ஏற்பட்டால் பல முன்னெச்சரிக்கைகளைக் கையாண்டான்.

தனது மெய்காப்பாளர்களைக்கூட அமீன் முழுமையாக நம்பியது கிடையாது. 'பணத்துக்காகவும், சலுகைகளுக்காகவும் என்னோடு ஒட்டியிருக்கிறார்கள். நான் எப்படிப்பட்டவன் என்று தெரிந்தும் என்னோடு இருக்கிறார்கள் என்றால் பணத்துக்காக எதையும் செய்வார்கள் என்றுதானே அர்த்தம்..?' என்று சியம்பாவிடம் கூறியிருக்கிறான் அமீன்.

## தருவது ரசிகன்

மெய்காப்பாளர்கள் அமீன் புறப்படுவதற்காக ஏற்பாடு செய்து வைத்திருப்பார்கள்.

அமீனின் வாகனம் எந்தெந்த வழிகளால் செல்ல வேண்டும்? பாதுகாப்புக்கள் எப்படிச் செய்யப்படவேண்டும் என்பவற்றை மெய்க்காப்பாளர் குழுவுக்கு பொறுப்பாக உள்ள அதிகாரியே மேற்கொள்வது வழக்கம்.

ஆனால் அமீன் திடீரென்று அந்த ஏற்பாடுகளைத் தலைகீழாக மாற்றிவிடுவான்.

அமீனின் முன்னெச்சரிக்கையே அவன் உயிரைக் காப்பாற்றியது.

அரச நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்வதற்காக அமீன் புறப்பட்டபோது, அவன் வழக்கமாகச் செல்லும் பென்ஸ்காரும், அதற்கு முன்னும் பின்னுமாக செல்லும் பாதுகாப்பு வாகனங்களும் தொடரணியாகக் காத்திருந்தன.

அமீனின் உள்ளுணர்வு அவனை எச்சரித்தது. 'உனது காரில் போகாதே' என்று யாரோ இழுத்துப் பிடிப்பதுபோல பிரமை தோன்றியது.

தொடரணி புறப்பட்டுச் செல்லட்டும் என்று கூறினான் அமீன். மெய்காப்பாளர்கள் ஒன்றும் புரியாமல் விழித்தனர்.

"ம்... புறப்படட்டும்!" என்றான் அமீன்.

அவனது பென்ஸ் கார் நடுவே செல்ல வாகனங்கள் தொடரணியாகப் புறப்பட்டுச் சென்றன.

அமீனது பென்ஸ் காருக்கு கறுத்தக் கண்ணாடிகள் பொருத்தப்பட்டிருந்தன. அதனால் அமீன் உள்ளே இருக்கிறானா இல்லையா என்பது வெளியே நின்று பார்த்தால் தெரியாது.

தொடரணி புறப்பட்டுச் சென்றதும், இன்னொரு காரை கொண்டு வர உத்தரவிட்டான் அமீன்.

அதுவும் ஒரு மெர்சிடஸ் பென்ஸ் கார்தான். சாரதியைக் கீழே இறங்குமாறுகூறினான். சட்டென்று காருக்குள் ஏறிய அமீன் தானே காரைச் செலுத்திச் சென்று விட்டான்.

அமீன் எந்தப் பாதுகாப்புமின்றி தனியாகக் காரில் செல்லுவான் என்று யாருமே எதிர் பார்க்க மாட்டார்கள்.

விழாவுக்கு தனியாகச் சென்று காரில் இறங்கிய அமீனைக் கண்டதும் அங்கு நின்ற பொலிசாரும், விழா அதி காரிகளும் கதி கலங்கி ஓடிவந்தனர்.

அதேநேரம் பொலிசாரின் தகவல் தொடர்பு சாதனம் அந்த விபரீதச் செய்தியை அலறியது.

"அதிபர் அமீனும், அவரது பாது காவலர்களும் சென்ற தொடரணி விபத்தில் சிக்கியது. அதிபரது கார் மர்ம வாகனம் ஒன்றினால் மோதித் தூக்கி எறியப்பட்டிருக்கிறது!" என்று மறுமுனை பதற்றமான குரலில் தகவல் கூறியது.

அப்படியானால் தங்கள் முன்பாக நிற்பது யார்? பொலிசார் உச்சக்கட்ட குழப்பத்தில் சிக்கினார்கள்.

ஆனால் தாங்கள் சந்தேகப்படுவதாகக் காட்டிக் கொள்ளவும் பயந்தார்கள்.

சற்றுச் துணிச்சலை வரவழைத்துக் கொண்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் முன்னே வந்து, மிகப் பவ்வியமாக தகவல் தொடர்பு சாதனம் மூலம் அறிவிக்கப்பட்ட தகவலைக் கூறினார்.

தனக்கு முன்பாக அங்கு வந்திருக்க வேண்டிய தொடரணி ஏன் வரவில்லை? என்று அமீனுக்கு சந்தேகம் ஏற்பட்டிருந்தது. அமீன் வேறு பாதையால்தான் அங்கு வந்து சேர்ந்திருந்தான். அதனால் வழியிலே ஏற்பட்ட விபத்தை அவன் அறியவில்லை.

இப்போது தகவலை அறிந்ததும் அவனது முகம் சிவந்தது. பொலிஸ் அதிகாரியின் கையில் இருந்த தகவல் தொடர்பு சாதனமான வோக்கி டோக்கியைப் பிடுங்கி எடுத்தான். விபத்து நடந்த பகுதியில் இருந்து தன் மெய்காப்பாளர் குழுவின் பொறுப்பதி காரியுடன் தொடர்பு கொண்டான்.

நடுங்கும் குரலில் மெய்காப்பாளர் குழுவின் அதிகாரி அங்கு நடந்த விபத்தை விளக்கினார்.

**"மோதிய வாகனத்தை எப்படித் தப்ப விட்டீர்கள்? முட்டாள்களே அங்கே என்னடா.... பிடுங்குகிறீர்கள்? முட்டாள்கள். முட்டாள்கள்!"** என்று வோக்கியிலேயே இரைந்தான் அமீன்.

விழாவை இரத்துச் செய்துவிட்டு அமீன் திரும்பினான். அவனுக்கு இரத்தம் கொதித்தது. இரத்த அழுத்தம் கூடிவிட்டது. இதயத் துடிப்பு எகிறியது. அதனால் கைகால்களும் நடுங்குவது போலிருந்தது.

பொலிஸ் அதிகாரியிடம் கார்ச்சாவியைத் தூக்கி எறிந்தான். **"காரை எடு. என் மாளிகைக்குப் போ!"** என்றான்.

விழாவுக்கு வரும் அமீனுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்காக நிறுத்தப்பட்டிருந்த அத்தனை பொலிசாரும் தம் வாகனங்களில் அமீனுக்கு பாதுகாப்பாகச் சென்றனர்.

வழி நெடுக அமீனுக்கு ஒரே ஒரு சிந்தனைதான்.

**"எனது வாகனத் தொடரணி எந்தப் பாதையால் வரும் என்பதை எதிரிகளுக்குத் தெரியப்படுத்தியது யார்?"**

அமீன் மனதை குடையோ குடை என்று குடைந்த கேள்விக்கு மாளிகையை நெருங்கும்போது பதில் கிடைத்தது.

மெடினா!

மெடினாவுக்கு விபரீதம் காத்திருந்தது.

(இடி தொடரும்)

# காபரே டாக்டர்

இங்கு சற்றுக் கவர்ச்சியாக காட்சிதரும் பெண் சாதாரணமானவரல்ல. பெரிய பேராசிரியை.

ரசியாவைச் சேர்ந்த இந்த இலக்கியப் பேராசிரியையின் பெயர் சூசன். அமெரிக்காவில் உள்ள நார்த்ராம்டன் நகரில் காபரே நடனம் குறித்து பாடம் நடத்தி வருகிறார்.

காபரே பாடம் நடத்தும்போது கவர்ச்சியாக ஆடை அணிந்து கொள்வாராக்கும் என்றுதானே நினைக்கிறீர்கள் அதுதான் இல்லை.

இவர் பகுதி நேரத் தொழிலாக விடுதிகளில் காபரே நடனமும் ஆடிவருகிறார். அவ்வாறு ஆடி ஆடி சம்பாதித்து மேலும் கல்வி கற்றார். கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டமும் வாங்கி விட்டார். காபரே ஆடும் டாச்டர் பெண்மணி.

இந்தியாவிலும் சட்டத்தரணி தொழில் செய்யும் பெண் ஒருவர் அரை நிர்வாணப்



போஸ் கொடுத்து பெரும் சர்ச்சைகளை கிளப்பி வருவது குறிப்பிடத்தக்கது. அந்தச் சட்டத்தரணிப் பெண் பகுதிநேரமாக மொடலிங் தொழில் செய்கிறார்.

# கல்யாணமாம் கல்யாணம்



இந்த ஜோடியும் வித்தியாசமானது தான். இலண்டனைச் சேர்ந்த ஆலன்-தன்யா தம்பதியே இவர்கள்.

இந்த ஜோடியின் பொழுதுபோக்கு என்னவென்று தெரிந்தால் மூக்கில் விரலை வைப்பீர்கள்.

பத்து வருடத்துக்கு ஒரு தடவை விவாகரத்துச் செய்வதுதான் இவர்களது பொழுதுபோக்கு.

பத்து வருடத்துக்கு ஒரு தடவை ஜோடி மாறுவதாக நினைத்துவிடாதீர்கள். பத்து வருஷத்துக்கு ஒருதடவை விவாகரத்துச் செய்துவிட்டு பின்னர் இருவருமே மறுபடி மணந்து கொள்வார்கள்.

ஒரே தம்பதி இப்படி விவாகரத்து செய்து மீண்டும் மீண்டும் இணைவது ஒரு புதுமைதானே.

1966இல் இவர்களது திருமணம் நடை பெற்றது. 1976இல் முதன் முதலாக விவா கரத்துச் செய்தனர். பின்னர் 1976இல் தேவாலயத் தில் திருமணம். இப்படியே நான்கு முறை நடந்துள்ளது.

கின்னஸில் இடம்பிடிக்கும் யோசனையுடன்தான் இப்படிப் புதுமை செய்கிறார்களோ தெரியவில்லை. ஆனால் இந்த ஜோடி இப்போதே பிரபலம் பெற்றுள்ளது.

# வித்தியாசமான ரசிகை

கிரிக்கெட் வீரர்களுக்கு பெண் ரசிகைகள் இருப்பது தெரியாத சங்கதியல்ல. சச்சின் டெண்டுல்கருக்கும் பல பெண் ரசிகைகள் உள்ளனர். அவர்களில் வித்தியாசமானவர் தீபு. முழுப் பெயர் தீப்தா.



தீப்தாவை சச்சினுக்கும் பிடித்துவிட்டது. தமிழ்நாட்டில் சென்னையைச் சேர்ந்த தீபு வைஷ்ணவா கல்லூரியில் முதலாமாண்டு மாணவி.

இவர் சச்சினை எப்படிக் கவர்ந்தார்? அதுபற்றி தீபு கூறுகிறார்:

"நான் ஆறாம் வகுப்பு படிக்கும்போதுதான் சச்சின் சர்வதேச கிரிக்கெட்டுக்கு வந்தார். அப்போதே எனக்கு அவரைப் பிடிக்கும்.

அப்போதே அவரைப் பற்றிய விஷயங்களை சேகரிக்க ஆரம்பித்தேன். அவர் விளையாடும் சகல போட்டிகளையும் பார்ப்பேன். கண்கொட்டாது இரசிப்பேன்.

சென்னைக்கு வந்தபோது சச்சினை பார்க்க பலமுறை துரத்தினேன். பயன் இல்லை. எப்படியோ ஒரு தடவை பார்த்து விட்டேன். ரொம்ப லவ்லியா பேசினார்.

நான் அவரைப் பற்றி சேகரித்து வைத்திருந்த விபரங்கள், நான் எழுதி வைத்திருந்த அபிப்பிராயம் போன்ற அனைத்தையும் அவரிடம் காண்பித்தேன். ஆள் அப்படியே பிரமித்துப் போய் விட்டார்!" என்று கூறுகிறார் தீபு.

சச்சின் டெண்டுல்கர் பற்றி இரண்டு புத்தகங்கள் தயாரிக்குமளவுக்கு விபரங்களைத் திரட்டி வைத்திருக்கிறார்.

சச்சினும் தீபுவைப் பாராட்டியதோடு, புத்தகம் எப்போது வெளிவரும்? என்று அக்கறையோடு கேட்டாராம்.

'இந்த வருடமே வெளியிட்டுவிடு. நான் விளையாட ஆரம்பித்து பத்து வருடம் ஆகப் போகிறது. அதனை காரணமாக வைத்து வெளியீடு செய்யலாம்!' என்றும் உற்சாகம் கொடுத்தாராம் சச்சின்.

சச்சினுக்கு பல கோடி ரசிகைகள் இருக்கலாம். ஆனால் தீபு வித்தியாசமான பிரயோசனமான ரசிகை.

# இரண்டும் இரண்டும்

அன்னா கார்ட்டெஜ், பீட்ரா மார்டினெஜ் இருவரும் ஒரே பிரசவத்தில் பிறந்த இரட்டையர்கள். இருவருக்கும் தற்போது 37 வயது.

இதன்பின்னர்தான் அந்தச் சகோதரிகளுக்கு மற்றொரு ஆச்சரியம் காத்திருந்தது.

அறுவைச் சிகிச்சை செய்த டாக்டர்களான ரெபேர்ட்டும், ரபேலும்



அன்னாவின் சிறுநீரகத்தில் கோளாறு. மாற்று சிறுநீரக சத்திர சிகிச்சை செய்ய ஏற்பாடு நடந்தது. பீட்ரா தன் சிறுநீரகத்தில் ஒன்றை கொடுத்து உதவினார்.

அமெரிக்க லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள யு.எஸ்.சி.பல்கலைக்கழக மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடந்தது.

ஒரே பிரசவத்தில் பிறந்த இரட்டையர்கள். அவர்கள் இருவருக்கும் 61 வயது. இதுவரை இரண்டு தடவை இரட்டையர்களுக்கு மாற்று உறுப்பு அறுவைச் சிகிச்சை செய்துள்ளனர் அந்த இரட்டை டாக்டர்கள். அபூர்வமான விஷயம் தானே!




வாரமலர் தினமுரசு
செப். 05-11,1999

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## காத்திருப்பு



மனிதர்களுடன் மிகவும் நெருக்கமாகப் பழகும் பிராணி டொல்ஃபின். மனிதர்களின் கடல்வாழ் நண்பன் என்றும் கூறலாம்.

அமெரிக்க கலிஃபோர்னிய மாநிலத்தில் கடல்வாழ் பிராணிகளைப் பேணிப் பாதுகாக்கும் அமைப்பு ஒன்று உள்ளது. அங்கு வளரும் டொல்ஃபின்கள் உணவை எதிர்பார்த்து வரிசையில் ஏங்கி நிற்கும் காட்சியே இது.

டொல்ஃபின் மீன்களுக்கும் பொருளாதாரத் தடை போட்டு விட்டார்களோ?!

## தகவல் பெட்டி

## கைகுலுக்கல்

இவர் கை என்ன பெரிதோ என்று நினைப்பீர்கள். கை சாதாரண அளவுதான். ஆனால் புகைப்படம் எடுத்தவரின் கமரா உத்தியால் இப்படி கைமட்டும் பிரமாண்டமாகத் தெரிகிறது.

இப்படி இவரது கையை பெரிதாகக் காண்பித்தது காரணத்தோடுதான். அமெரிக்காவில் 1956இல் நடைபெற்ற செனட் சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டியவர் இவர்.

வெற்றி பெற்ற பின்னர் மக்களை மறந்து போகும் அரசியல்வாதிகள் போலில்லாமல், வாக்காளர்களை சந்தித்து சலிக்காமல் கைகுலுக்கினார். இவரது நன்றிக் கைகுலுக்கலால் மக்களிடையே மாபெரும் செல்வாக்குப் பெற்றார். தன் கையே தனக்குதவி என்பது சரிதானே.




## தடங்கலுக்கு வருந்தவில்லை

ஃபிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிசில் கோல்டன் லீக் தடகளப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் 800 மீ. பந்தயத்தில் முதலிடத்தைப் பிடித்தவர் டென்மார்க் வீரர் வில்சன் கிப்கெப்டர்.

அவர் முதலிடத்தை வென்றதை விட ஆச்சரியம் என்ன தெரியுமா? அவரது கால்களைப் பாருங்கள். வலது கால் 'ஷு' கழன்று விழுந்துவிட்டது. அப்படியிருந்தும் தொடர்ந்து ஓடி முதலிடம் பிடித்தார்.

ஒரு காலில் மட்டும் ஷுவுடன் ஓடுவது சிரமம். அப்படியும் ஓடி முதலிடம் வென்றது சாதனைதானே'




## பணி பெரிது




பார்த்தால் சிறிது. செய்யும் பணிகள் பெரிசு. எதிர்வரும் ஜனவரி மாதம் அதாவது 21ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அறிமுகம் செய்யப்படப்போகும் தகவல் சாதனம் இது.

ஜப்பான் டோக்கியோவில் தயாராகியுள்ள இக் கருவிக்கு 'கம்யுனிக்கேட்டர்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

கையடக்கமாக கொண்டுசெல்லும் இக் கருவி மூலம் ரோட்டு ஓரமாக நின்றபடியே ஈமெயில் தகவல்களை பெறலாம். அனுப்பலாம். பின்னர் நடையைக் கட்டலாம். கைக்குள் தகவல் தொடர்பு சாதனம். விரல் நுனியில் வந்துவிட்டது உலகம்.

## ரகம் புதிது

இது என்ன தெரிகிறதா? புதிய வடிவ கம்பியூட்டர். அமெரிக்க ஐமேக் நிறுவனம் தயாரித்துள்ள ஆப்பிள் ஐபுக் லேட்டாப் கம்பியூட்டர் இது தான்.



வயர்லெஸ் தொழில் நுட்பத்தில் இது இயங்கும். இந்தக் கம்பியூட்டர் மூலம் தொலைபேசி இல்லாமலேயே இண்டர்நெட் இணைப்பையும் பெறமுடியும்.

இதற்கே ஆச்சரியப்பட்டால் எப்படி? 21ம் நூற்றாண்டில் இதைவிட அப்பனான கம்பியூட்டர் எல்லாம் வரப்போகிறது பாருங்கள்.

## சவாரி



தாத்தாவின் முதுகில் பேரன் சவாரி செய்வது மனிதர்களுள் மட்டும்தானா?!

அந்தச் சுகமும், சொகுசும் இந்த ஆமைகளிடத்திலும் உண்டு. இங்கு பாருங்கள் கிழ ஆமையாரின் முதுகிலும், தலையிலும் இளையவர்கள் சவாரி செய்கிறார்கள். கிழ ஆமையாருக்கு எத்தனை வயது தெரியுமா? 80.

பிரிட்டனிலுள்ள வேல்ஸ் உயிரியல் பூங்காவில் இந்தப் பாசக் காட்சி பதிவானது.

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 118

# மும்பாய் பட உலகை கலக்கிய செய்தி

தமிழ்நாட்டிலிருந்து மயன்

சமீபத்தில் மும்பாய் பட உலகில் பரவிய செய்தி ஒன்றினால் நடிகைகள் பலர் பொறி கலங்கிப்போனார்கள்.

இந்தி நடிகர்கள் சிலருக்கு 'எய்ட்ஸ்' இருப்பதாக கூறியது அந்தச் செய்தி.

எந்தெந்த நடிகருக்கு எய்ட்ஸ் என்று அறிவதற்குள் பல நடிகைகள் துடிதுடித்துப் போய் விட்டனர்.

தங்களுடன் நெருங்கிப் பழகிய நடிகர்களுக்கு எய்ட்ஸ் இருந்தால், தமக்கும் எய்ட்ஸ் தொற்றியிருக்குமே என்று பயந்து நடுங்கிவிட்டனர்.

வேறு சில நடிகைகளோ தம்மோடு நெருங்க ஆசைப்படும் அல்லது தாம் நெருங்க ஆசைப்படும் நடிகர்களுக்கு 'எய்ட்ஸ்' இருக்கிறதா என்பதை எப்படி அறிவது என்று தவியாய்த் தவித்தனர்.

இவர்களுக்குள் துணிந்து செயற்பட்டவர் ஷில்பா ஷெட்டிதான். சமீபகாலமாக அக்ஷய் குமாருடன் ஒட்டி உறவாடி வருகிறார் ஷில்பா.

பத்திரிகை காரியாலயம் ஒன்றுக்கு ஃபோன் செய்து, தனக்கு அறிமுகமான பத்திரிகையாளரிடம் விசாரித்தாராம் ஷில்பா.

விசாரித்தபோது ஷில்பா பின்வருமாறும் கூறினாராம்: "யாருக்கு எய்ட்ஸ் இருந்தாலும் அக்ஷய் குமாருக்கு இருக்கவே இருக்காது!"

"என்ன மேடம், இவ்வளவு உறுதியாகச் சொல்கிறீர்கள்?" என்று பத்திரிகையாளர் கேட்டிருக்கிறார்.

"சமீபத்தில்தான் அக்ஷய் கனடா போய் முழுமையான உடல் பரிசோதனை செய்திருக்கிறார். ஆரோக்கியமானவர் என்று சான்றிதழும் வாங்கி வந்திருக்கிறார்!" என்று கூறினாராம் ஷில்பா.

இந்தி நடிகைகள் சிலர் தங்களை நாடி வரும் பெரும் புள்ளிகளிடம் 'சான்றிதழ்' கேட்பதாக சமீப காலமாக கதை உலாவுகிறது.

ஷில்பா நடிகர் அக்ஷய் குமாரிடமே 'சான்றிதழ்' பார்த்துவிட்டுத்தான் அவர் பக்கம் சாய்ந்தாரோ?!

## தொலைபேசி யுத்தம்

ஆறெழுத்து குமார நடிகர் மூன்றெழுத்து நாயகியை திருமணம் செய்யப்போவது அறிந்ததும் முன்னாள் காதலியான இரண்டெழுத்து நடிகை எரிமலையாகிவிட்டார்.

நடிகரைச் சந்திக்க முயற்சி செய்தார். நடிகர் நழுவிவிட்டார். பின்னர் மூன்றெழுத்து நடிகைக்கு ஃபோன் செய்து தாறுமாறாக அர்ச்சனை செய்துள்ளார்.

அர்ச்சனை தாங்காத நடிகை ஃபோனை பொத்தென்று வைத்துவிட்டார். மறுபடியும் அழைப்பு எடுத்தாராம் இரண்டெழுத்து நடிகை.

அப்போது மூன்றெழுத்து நடிகையின் தந்தையார் ஃபோனை எடுத்தாராம். அவருடனும் நடிகை ஆபாசமான வார்த்தைகளால் அம்பெய்தாராம்.

பதிலுக்கு நடிகையின் தந்தையும் ஆபாசமாக பதிலடி கொடுக்க, திகைத்துப்போன இரண்டெழுத்து நடிகை ஃபோனை வைத்துவிட்டார்.

***

விசித்ரமான கவர்ச்சி நடிகை இப்போது கிசுகிசுக்கள் பற்றி கவலைப்படுவதே கிடையாது. அடிக்கடி துபாய்க்கு போய் வருகிறார்.

துபாயில் நடிகையின் கலைச் சேவையால் கவரப்பட்ட நிரந்தர அழைப்பாளர்கள் சிலர் இருக்கின்றனராம்.

சில சந்தர்ப்பங்களில் துணை நடிகைகளையும் அழைத்துப் போகிறார். 'நட்சத்திரக் கலைவிழா' என்று துபாய்க்குப் போகிறார்கள். ஆனால் அங்கு எந்த விழாக்களும் நடந்ததாகத் தெரியவில்லை.

விசித்ர நடிகை கூறுகின்ற கலைவிழாவுக்கு என்ன அர்த்தம் என்பது துபாயில் உள்ள அவரது நேசர்களுக்கே வெளிச்சம்.

## அறிமுகம்

தயாரிப்பாளர் குஞ்சமோனின் மகன் எபி. அவருக்காக தந்தை தயாரித்த படம் கோடீஸ்வரன். படம் பிரமாண்டமாக தயாராகியும், திரையிடாமல் தள்ளிப்போகிறது.

இதற்கிடையே மற்றொரு படத்தில் இரு கதாநாயகர்களில் ஒருவராக நடிக்கிறார் எபி. இன்னொரு கதாநாயகன் ஆகாஷ். இவர் ரோஜாவனம் படத்தில் நடித்தவர். படத்திற்கு 'அறிமுகம்' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

இப்படத்தை புதிய இயக்குநர் தங்கமணி இயக்க, எஸ்.ஏ. ராஜ்குமார் இசையமைக்கிறார்.

## கமல் சுறு சுறுப்ப

'ஹேராம்' படப்பிடிப் வெகு விறுவிறுப்பாக நடந் வருகிறது. 'மருதநாயகம் போன்று 'ஹேராம்' படமு இடை நடுவில் கைவிடப்படுமே என்று சந்தேகம் தெரிவிக்க பட்டது.

கமலின் எதிரிகள் கட்ட விட்ட கதைதான் அது. எந்த சர்ச்சைக்கும் பயந்து பின்வா காது ஹேராம் படத்தை நடித்து இயக்குகிறா கமல்.

அண்மையில 'ஹேராம்' படத்துக் காக காந்தி சுட பட்ட காட்சி படமாக்க பட்டுள்ளது. காந்தி யாக இந்தி நடிகர் நஸ்ருதீன் ஷா நடித்துள்ளார்



முரளி சிம்ரான்
படம்: கனவே கலையாதே

## பரிசல் ரோஜா

நடிகை ரோஜா திருநெல்வேலி படத்தில் பிரபுவுக்கு ஜோடியாக நடிக்கிறார். இப்படத்திற்காக ரவிக்கைபோடாது நடித்துள்ளார் ரோஜா. 'முதல் மரியாதை' படத்தில் ராதா நடித்தது போன்ற பாத்திரம். பரிசல் ஓட்டும் பெண்ணாகத்தான் ரோஜாவும் நடிக்கிறார். ஏற்கனவே தெலுங்குப் படங்களில் பாடல் காட்சிகளில் பரிசல் ஓட்டும் காட்சிகளில் ரோஜா நடித்துள்ளார்.





கார்த்திக்-லைலா

## விவிங்ஸ்டனும்

விக்கிரமன் இயக்கத்தில் விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்கும் படம் 'வானத்தைப்போல'. இப்படத்தில் பிரபுதேவா நடிப்பது பழைய செய்தி. தற்போது லிவிங்ஸ்டனும் நடிக்கிறார். விஜயகாந்த் இரட்டை வேடத்தில் நடிக்கிறார். லிவிங்ஸ்டன் நடித்துள்ள 'விரலுக்கு ஏற்ற வீக்கம்' நன்றாக ஓடிக்கொண்டிருக்கிறது.

## சங்கமம் வண்ணன்

தனது மைத்துனர் ரகுமானுக்காக இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் தயாரிப்பாளர் பிடித்து இசை போட்டு கொடுத்த படம் 'சங்கமம்.' படம் பிரமாதமாக ஓடாதுவிட்டாலும் இசை பேசப்படுகிறது. வராக நதிக்கரை ஓரம் பாடல் செம ஹிட்.

இப் படத்தில் நடிப்பில் பேசப்படுபவர் மணிவண்ணன். தெருக்கூத்து கலைஞர் வேடத்தில் பிய்த்து உதறியிருக்கிறார்.

சந்திரபாபு, நாகேஷ் ஆகியோர் நகைச்சுவை நடிப்பில் மட்டுமன்றி குணசித்திர நடிப்பிலும் கொடிகட்டிப் பறந்தவர்கள். மணிவண்ணனும் அந்த இடத்தைப் பிடித்திருக்கிறார்.

முகப்பேழ் புதுமுகம் உமா படம்: வீர நடை சங்கவி



விசித்ரா

## சினிமா கவி

படம் : கனே
நடிப்பு: முரளி சார்
இசை: தேவா

பஞ்சாப் பெ சிம்ரானின் பெ சம்மதம் பெற சின்னி ஜெ வீட்டு மாடியில் பார்க்கிறார்கள் பொற்கோவிலி சிம்ரானின் திற்கு குண்டு முரளியின் க சோகத் இன்னொ திருமண பார்த் திற்கி எடு

## காதோடு சொல்லுகிறோம்

மலையாள 'ஜெய' நடிகர் முன்பு 'பூ' நடிகையுடன் நெருக்கமாக இருந்தவர். இதனால் ஜெய நடிகரின் மனைவி தலையிட்டு இருவரும் ஜோடி சேர தடை விதித்தார். தற்போது இருவரும் மறுபடி ஜோடி சேருகின்றனர். இதனைப் பொறுக்காத மனைவி, 'பூ' நடிகையின் காதலரிடம் புகார் கூறினார். இருவரையும் இணைந்து நடிக்க வைப்பதே இயக்குநரான அந்தக் காதலர்தான் என்பது தெரிந்ததும், ஜெய நடிகரின் மனைவிக்கு வாழ்க்கையே வெறுத்துப் போனது.

நாலெழுத்து இயக்குநரின் படத்தில் மணியான மும்பை நடிகை நடித்து வருவது தெரிந்ததே. ஆக்ஷன் கிங்குடன் முரண்டுபிடித்தாலும், இயக்குநருடன் தாராளமாக நடக்கிறாராம் நடிகை. இயக்குநரின் திறமையைக் கண்டுவியந்த பின்னரே, அவருடன் தாராளமாக நடக்க முன்வந்தாராம் நடிகை.

பிரகாசமான நடிகர் மதுபோதையில் திளைத்திருந்தபோது சில லகரங்கள் அவரிடம் இருந்து கூட இருந்தோரால் உருவப்பட்டதாம். போதை தெளிந்த பின்னர் அதிரடி விசாரணை நடத்தி பணத்தை திரும்பப் பெற்றுக் கொண்டாராம் நடிகர்.

கவிஞர் அறிவுமதி எழுதிய கவிதைகளை திரைப்பட உலக பிரபல கவிஞரிடம் படிக்கக் கொடுத்தாராம். அவற்றை தனது கவிதைகளாக களவாடி, புதிய படம் ஒன்றுக்கு பயன்படுத்தியுள்ளாராம் அந்தக் கவிஞர். வாழ்க்கை வெறுத்துப்போய் நிற்கிறார் அறிவுமதி.



படிப்பகம்

www.padippakam.com

## மினி சினி

தாஜ்மஹால்' படத்தில் கதாநாயகனாக அறிமுக ாகும் மனோஜ், படத்தில் இடம்பெறும் 'ஈச்சி லுமிச்சி...' என்று தொடங்கும் பாடலை .ஆர்.ரகுமான் இசையில் சொந்தக்குரலில் பாடி ள்ளார்.

னோஜ் பட்நாகர் இயக்கும் 'குட்லக்' படத்தில் ிரசாந்த்திற்கு ஜோடியாக 'ஹலோ' படத்தில் நடிக்கும் ப்ரீத்தி டிப்பதாக இருந்தது. இப்போது அவருக்குப் பதிலாக ஊரி ங்கா என்ற இந்தி நடிகை நடிக்கிறார்.

ாபுகணேஷ் இயக்கி நடித்த 'நான் ஒரு இந்தியன்' பல ாலமாக விற்பனையாகாமல் இருந்தது. தற்போது ுப்படத்தின் பெயரை 'தேசியப்பறவை' என்று மாற்றி வெளியிடவுள்ளார்கள்.

ரேஷ்கோபியுடன் 'லேலம்' (தமிழில் ஏலம்) என்ற மலையாளப் டத்தில் ஜோடியாக நடித்த கௌசல்யா, மறுபடி சுரேஷ் காபிக்கு ஜோடியாக 'சீக்ரெட் ஐ' என்ற மலையாளப் படத்தில் டிக்கவுள்ளார்.

ார்த்திக்கின் 'விக்னேஷ்வர்' என்ற ஒரேயொரு படத்தில் ட்டும் சொந்தக்குரலில் பேசி நடித்த குஷ்பு இப்போது ின்சாரக் கண்ணா', 'அலைபாயுதே' ஆகிய படங்களில் சாந்தக்குரலில் பேசி நடிக்கிறார்.

✤ சூப்பர் குட் ஃபிலிம்ஸ் தயாரித்த 'நீ வருவாய் என...' படத்தை இயக்கியவர் புதிய இயக்குநர் ராஜகுமாரன். படம் நன்றாக இருப்பதால், சூப்பர் குட் ஃபிலிம்ஸ் அவருக்கு இன்னொரு படத்தை இயக்க வாய்ப்பளித்துள்ளது.

✤ 'வாலி' படத்தில் அஜித்குமாரின் கனவுக்காதலி சோனாவாக நடித்தவர் நக்மாவின் தங்கை ஜோதிகா. மீண்டும் இவர் அஜித்குமாருடன், 'முகவரி' என்ற படத்தில் நடிக்கிறார்.

✤ கார்த்திக்கை வைத்து 'பூவேலி', 'ரோஜாவனம்' ஆகிய படங்களை இயக்கிய செல்வா, மீண்டும் கார்த்திக்கை வைத்துப் படமொன்றை இயக்கவுள்ளார். இப்படத்தை கோவை செழியன் தயாரிக்கிறார்.

✤ 'சக்தி ரீ.வி' யில் ஒளிபரப்பாகிவரும் 'ஜெயிப்பது நிஜம்', 'இப்படிக்குத் தென்றல்' போன்ற நாடகங்களில் நடித்து வரும் நீனா மேக்-அப் போடாமல் சத்யராஜின் 'புரட்சிக்காரன்' படத்தில் நடித்து வருகிறார்.

✤ பிரகாஷ்ராஜ்-ப்ரீத்தி ஸிந்தா நடித்த 'ராஜகுமாருடு' என்ற தெலுங்குப்படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருப்பதால் அதை தமிழில் மொழிமாற்றி வெளியிடப் போகிறார் பிரகாஷ்ராஜ்.

## சோனாலியின் ஜாதகம்

**சொந்தப் பெயர்:** சோனாலி பிந்த்ரே.
**வயது:** 19
**உயரம்:** ஐந்து அடி ஆறு அங்குலம்.
**எடை:** ஐம்பத்திநான்கு கிலோ.
**உடற்கட்டு:** 34-24-34
**சுபாவம்:** கலகலப்பான சுபாவம்.
**தமிழில் முதல் படம்:** பம்பாய். கதாநாயகியாக காதலர் தினம். கண்ணோடு காண்பதெல்லாம்.
**ஆண்களிடம் கவர்ந்தது:** கம்பீரமான தோற்றம். நகைச்சுவை உணர்வு, அறிவுபூர்வமான பேச்சு.
**எப்படிப்பட்ட ஆணைப்பிடிக்கும்:** பெண்களை மதிக்கும் ஆண்களைப் பிடிக்கும்.
**மனதைக் கவர்ந்த நாயகன்:** அமீர்கான். அவரைப் போன்ற ஒரு கதாநாயகனை நான் இதுவரை சந்தித்ததில்லை. அழகும், கவர்ச்சியும், ஆண்மையும் மிக்கவர். அவருக்கு குழந்தைத்தனமான முகம். எல்லாக் கதாநாயகிகளுக்கும் அவரைப் பிடிக்கும்.

## துடியாட்டம்

'மோனிஷா என் மோனலிசா' படத்தில் அறிமுகமாகி 'மலபார் பொலிஸ்' படத்திலும் அப்பாசுடன் கலக்கியவர் மும்தாஜ்.


இந்தக் கட்டழகியை 'உனக்காக எல்லாம் உனக்காக' படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சியில் கவர்ச்சி நடனம் ஆடவைத்துள்ளனர்.

'துனியா துனியா உன்கன்னம் இனிக்கும் தேன் கனியா' என்று தொடங்கும் பாடல் காட்சிக்குத்தான் துடியாட்டம் போட்டிருக்கிறார் மும்தாஜ். யுவன் சங்கர் ராஜா இசையமைத்த பாடல்.

## இயக்கும் திட்டம்

'மலபார் பொலிஸ்' பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதால் சத்யராஜ் மிக உற்சாகமாக இருக்கிறார். அடுத்த ஆண்டு மீண்டும் ஒரு படத்தை இயக்கப் போகிறார். அதற்கான கதையைத் தேடிக்கொண்டிருக்கிறார்.

ஏற்கனவே இயக்கிய 'வில்லாதி வில்லன்' போல் இல்லாமல் கலக்கலாக இயக்கப் போகிறாராம்.




குணால்-சோனாலி
படம்: காதலர் தினம்

## ஒரு பாடலுக்கு பத்து நாள்

'காதலர் தினம்' படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. இதன் வெற்றிக்கு முக்கிய காரணம் ஒளிப்பதிவாளர் ஸ்ரீராம்.

மணிரத்னம் மூலம் திரைப்பட ஒளிப்பதிவாளராக அறிமுகமானவர் ஸ்ரீராம்.

'காதலர் தினம்' படத்தில் நான்கு நிமிடங்கள் இடம்பெறும் பாடல் காட்சி ஒன்றை மட்டும் பத்து நாட்கள் படமாக்கினாராம். இவ்வாறு நிதானமாக, மிகச் சிறப்பாக படமாக்கியதால்தான் காலதாமதமாக படம் வெளிவந்தது. ஆனாலும் படப்பிடிப்புக்காகவே படம் ஓடுகிறது.

'காதலர் தின' நாயகன் குணால் புதுமுகம். அவருக்கு ஜோடியான சோனாலி அனுபவம் பல கண்டவர். சோனாலி பற்றி குணால் என்ன கூறுகிறார்.

"மிகச் சிறந்த நடிகை. பெரிய நடிகை என்றாலும் படப்பிடிப்பில் துளி கூட கர்வம் இல்லாமல் அடக்கமாக இருந்தார். நாங்கள் இருவர் சம்பந்தப்பட்ட காட்சிகளில் நான் சில காட்சிகளில் மிக்க சிரமப்பட்ட போதும் பொறுமையாக இருந்தார்" என்கிறார்.

'காதலர் தினம்' வெற்றிபெற்றுள்ளது. ஆனால் கதாநாயகன் குணாலுக்கு புதிய வாய்ப்புக்கள் எதுவும் வரவில்லை.



ரகுமான்-விந்தியா
படம்: சங்கமம்

## ...மர்சனம் — நமது விமர்சனக்குழு

### ...சியில்லாத சிம்ரான் (42/100)

...லையாதே
...ம்ரான், சின்னி ஜெயந்த், கோவை சரளா, ...ாமு, ராஜீவ்.
**...யக்கம்** : கௌதம்.

சிம்ரானும், முரளியும் கல்லூரியில் காதலிக்கிறார்கள். ...ருடன் பழகி, நற்பெயர் எடுத்துவிட்டு, தம் காதலுக்கு ...க்கிறார் முரளி.

...ம் முரளியும் பஞ்சாப் மாநிலம் சென்று சிம்ரான் ...தகின்றனர். வீட்டில் சிம்ரானுக்கு வேறு மாப்பிள்ளை ...தனால் முரளி தம் காதலை சிம்ரானின் அப்பாவிடம் ...த்து கூறுகிறார். சம்மதம் கிடைக்கிறது.

...தரர் பொலிஸ் அதிகாரி. தீவிரவாதிகள் அவரது வாகனத் ...றார்கள். வாகனத்தில் சென்ற சிம்ரானும் அவர் குடும்பமும் ...ன்பாகவே சுக்கல் சுக்கலாக வெடித்துச் சிதறுகின்றனர். ...சுருளும் முரளி தமிழ்நாட்டுக்கு திரும்புகிறார். அங்கு ...ம்ரானை பார்க்கிறார். சந்தர்ப்ப சூழலால் இருவருக்கும் ...டக்க ஏற் பாடாகிறது. அந்த நேரம் ...ம்ரானின் முன்னாள் காதலன் வந்து ... இதன் பின்னர் முரளி என்ன முடிவு ...ார் என்பதுதான் கதைத் திருப்பம்.

...ம்ரான் இரண்டு பாத்திரங்களிலும் ...டல் இல்லாமல் அமைதியாக நடித் ...ார். இதிலும் கவர்ச்சிக்கு முழுக்குப் ...டிருப்பது அதிசயம். முரளி வழக்கம் ... நடித்துள்ளார். போகிற போக்கில் ...பரசி என்ற பட்டத்தை சிம்ரான் ...விடுவார் போலிருக்கிறது.

...ஞ்சாப் பொற்கோயில், பிரிட்டிஷ் ... மனித வேட்டை நடத்திய ஜூலியன் ...பாக் போன்ற பகுதிகளை ஒளிப்பதி... தங்கர்பச்சான் உன்னதமாக படம் ...திருக்கிறார். பாடல்களும் நன்று.

...மாத்தத்தில் பார்த்து ரசிக்கக்கூடிய ... இளம் தலைமுறைக்கு பிடிக்கும்.

## மின்சாரக் கஜோல்

'மின்சாரக் கனவு' மூலம் தமிழ்ப்பட ரசிகர்களுக்கும் மின்சாரம் பாய்ச்சியவர் கஜோல். கஜோல் பற்றி இந்தி நடிகர் சஞ்சய்தத் சொன்ன அபிப்பிராயம் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது.

அப்படி என்ன கூறியிருக்கிறார் சஞ்சய்தத்?

'கமராவுக்கு முன்னால் கஜோல் வந்து நின்றாலே மின்சாரம் பாய்ந்ததுபோல இருக்கும். கமராவுக்குப் பின்னால் கஜோலுடன் பேசும்போது ஆயிரம் கிலோ ஐஸ்கிரீமை அப்பியதுபோல இருக்கும்! பச்... ஆனால் கஜோலுக்கு கல்யாணம் ஆகிவிட்டதே. இல்லையென்றால்...' என்று பெருமூச்சு விட்டிருந்தார் சஞ்சய்தத்.

கஜோல் மட்டுமல்ல அவரது கணவரான அஜய் தேவ்கானும் கொதித்துப் போய் இருக்கிறார்கள்.

## மனிஷா கோபம்

'முதல்வன்' படத்தின் மூலம் மறுபடி தமிழ்ப்பட ரசிகர்களை கதிகலங்க வைக்கப்போகிறார் மனிஷா கொய்ராலா. அவருக்கு பத்திரிகையாளர்கள் மீது பயங்கரக் காய்ச்சல். காய்ச்சலுக்கு என்ன காரணம்?

"இந்தப் பத்திரிகையாளர்களால் பெரும்தொல்லை. ஒரு நடிகரைக் காதலித்தாலோ, ஒருவருடன் வாழ்ந்தாலோ அது அந்த நடிகையின் சொந்த விஷயம். அதில் ஏன் இவர்கள் மூக்கை நுழைக்கிறார்கள்?" என்று காய்ந்திருக்கிறார் மனிஷா.

## வம்புகான்

சர்ச்சையை உருவாக்குவது என்பது வில்லன் மன்சூரலி கானுக்கு சர்க்கரை சாப்பிடுவது மாதிரி.

சமீபத்தில் இந்திய இராணுவத்தைப் பற்றி பேசி வம்பில் மாட்டியிருக்கிறார். 'இந்திய இராணுவத் தளபதிகள் கையாலாகாதவர்கள். பதுங்கி இருந்து எப்படித் தாக்குவது என்று சந்தனக் கடத்தல் வீரப்பனை வைத்து பயிற்சி கொடுக்க வேண்டும்" என்று பேசியிருக்கிறார்.

## ரம்யா-குஷ்பு

'படையப்பா' படத்தில் ரம்யா கிருஷ்ணனின் பாத்திரம் வெகுவாகப் பாராட்டப்பட்டது. அதனால் தனது அடுத்த படமான 'மின்சாரக் கண்ணா'விலும் அப்படியொரு பாத்திரத்தை வைத்திருக்கிறார் இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார்.

ஆண்வாடை பிடிக்காத பெண்ணாக நடிக்கிறார் குஷ்பு. தொழிற்சாலை முதலாளியான குஷ்பு, தன் தொழிற்சாலையில் பெண்களுக்கு மட்டுமே வேலை கொடுத்திருப்பாராம்.

## அக்கா யோசனை

'பூவெல்லாம் கேட்டுப்பார்' படம் இளைஞர்கள், இளைஞிகளிடம் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இப்பட நாயகி ஜோதிகாவுக்கும் நல்ல பெயர். நக்மாவின் தங்கையான ஜோதிகாவுக்கு 'வாலி' படத்தின் பின்னர் கிடைத்துள்ள அசத்தல் வாய்ப்பு இது.

தமிழ்ப்பட இயக்குநர்கள், படக் கம்பனிகள் பற்றி நக்மா நிறைய விளக்கங்கள்கூறி, எப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறாராம்.

நக்மா தமிழில் கவர்ச்சியாக நடித்து கலக்கியவர். ஆனால் ஜோதிகா 'பூவெல்லாம் கேட்டுப்பார்' படத்தில் கவர்ச்சி காட்டாது நடித்திருக்கிறார். என்றாலும் கவர்ச்சி காட்டவும் தயங்கமாட்டாராம்.

## மலபார் ராஜ்

'மலபார் பொலிஸ்' படத்தில் சத்யராஜ் வயதான பொலிஸ்காரராக நடித்துள்ள காட்சிகள் பலத்த பாராட்டைப் பெற்றுள்ளன.

அந்தப் பாத்திரத்துக்காக ஏழெட்டு 'விக்'வைத்துப் பார்த்தும் இயக்குநர் வாசுவுக்கு திருப்தி ஏற்படவில்லையாம்.

பின்னர் சத்யராஜின் இயல்பான முடியோடு படமாக்கினார்கள். கச்சிதமாக வந்துவிட்டது. இப்போது பாராட்டும் எக்கச்சக்கமாக குவிகிறது.


படிப்பகம்

www.padippakam.com

# இனப் படுகொலை



▲ 1964—சைப்பிரஸ் உள்நாட்டு போரில் உருக்குலைந்து கிடந்தது. துருக்கியர்களை கிரேக்கர்கள் இனப்படுகொலை செய்தனர்.

கிரேக்கரால் கொல்லப்பட்ட தன் கணவனையும், சகோதரனையும் பார்த்து கதறுகிறார் துருக்கியப் பெண்மணி.

இந்த புகைப்படம் கிரேக்கரது இனப்படுகொலை நடவடிக்கைக்கு சான்றாக உலகெங்கும் வெளியாகியது. உலகப் புகழ்பெற்ற படமாகவும் இடம்பிடித்துள்ளது.



## யார் இவர்?

இங்கிலாந்தில் புகழ்பெற்ற பிரதமாக இருந்தவரின் சிறுவயதுத் தோற்றம் இது. உலகமே அறிந்தவராயிற்றே! நீங்களும் அறிந்திருப்பீர்கள்தானே!

விடை உதவி 18ம் பக்கம்.

## ஹைக்கூ

**வானவில்**

தூரிகை இன்றி
வரையப்பட்ட
அற்புத சித்திரம்.

*

**பெண்**

பிரம்மன் எழுதிய
இன்னொரு
கவிதை.

*

**கடல்**

அலைகளுடன்
தரையில் ஒரு
வானம்.

*

ஹிப்காஸ் நிஸ்மி-
பொத்துவில்-03.

## கனவு காண அனுமதியுங்கள்!

என்னைக் கனவு காண
அனுமதியுங்கள்...
நான் கனவிலேயே
வாழ்ந்துவிட்டுப் போகிறேன்!

**

ஓவியம் ஒன்று
வரைய நினைக்கையில்...
தூரிகையே தொலைந்து போனது!

**

கவிதை ஒன்று
எழுத நினைக்கையில்
காகிதமோ பறந்து போனது!

**

ஓவியத்தை
என் இதயத்தில் வரைந்து
உன் பெயரையே
கவிதையாக்கினேன்!

**

அதனால்தான்
என்னைக் கனவு காண
அனுமதியுங்கள்....

**

ந.ஸ்ரீபிரியா-வவுனியா.

## குமுறல்

மாங்குளம் வரை
சென்று திரும்பினேன்!
மனதில் சுமை...
கனக்கிறது!

o—o

மரங்கள் இல்லை..?
மனைகள்...?
பூங் காற்று ஊதிய இடம்
"புதுமணம்" நாறுகிறது.

o—o

புனித கோயில்கள்..
தடம் இல்லை..?
புதிய கோவில்கள்...?
போதி மாதவனின்
புகழ் பாடுகின்றன.

o—o

பிரித்தானியர் காலத்து
வாடிவீடு..
பிரித்தெறியப்பட்டுள்ளது
கல்விக் கூடங்கள்
குட்டிச் சுவராம்..
பொட்டல் வெளியில்
கொட்டுண்டு கிடக்கிறது!

o—o

"வன்னி மண்" இன்று
வளம் குன்றி...
வண்ணம் குன்றி..
குற்றுயிராய்...
கோலம் மாறி குமுறுகிறது.

கயல்வண்ணன் - வவுனியா.

## உறவும் பரிணாமமும்

ஆத்மார்த்தமென்பதை
உன்னில்தான்
தேடித் தெரிந்து கொண்டேன்.
எல்லா அறிவியலையும்
நீயும் நானும் விவாதித்தோம்
பழகிய கொஞ்ச நாட்களாயினும்
ஒரு தேசம் விட்ட
உறவாயினும்
ஜீவிதத்தின் உச்சரிப்புகளில்
நீயும் நானும்
கைகோர்த்த நினைவுகள்
அற்புதமானவை.

•

பெண்ணியத்தின்
எத்தனை விபரிப்புக்களின்
தேடல்கள் உன்னில்
புதைந்து கிடக்கின்றன.
எனக்கு ஒரு உத்வேகம்
வருகிறது.
உன்னைப் பார்க்கும் போதும்
இன்னும்
உன்னை முத்தமிடும் போதும்.

•

எமது நெருக்கங்கள்
அர்த்தப் பாடுடையவைதான்
ஆனாலும் அண்மித்தலை
எட்ட வைக்கும்
அதிர்வுகளை
எதிர் கொள்ளும் திராணி
இருக்கிறது
உனக்கும் எனக்கும்.

•

எந்தத் தொலை தூரமாயினும்
நீ என்னுள்ளே இருக்கிறாய்
நானும்.
வா இன்னும் விவாதிப்போம்!
தேச விடுதலைபற்றி
இன்னும்
பெண் விடுதலை பற்றியும்

•

யாருமில்லா
பனி படரும் இரவில்
இருவருமாய்
கைகோர்த்த படிக்கு
சுதந்திரமாய் அலைவோம்
மறுபடியும்.

•

மற்றுமொரு
பனிக்காலமும்
அரவமற்ற இடமும்
எம்விவாதங்களுக்கு
ஒத்து வரும்.
ஏனெனில் இருவருமே
வித்தியாசமானவர்கள்.

ஷீரா அனஸ்- இலண்டன்.

தேன் கிண்ணம்

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கார்னர்'

05.09.99 முதல் 11.09.99வரை

**மேடம்:**
குடும்பத்தில் நிலவிவந்த பல பிரச்சனைகள் நீங்கும். கல்வி, தொழில் முயற்சிகள் கைகூடும். தூர இடத்து பயண வசதி அல்லது இடமாற்றம் என்பன ஏற்படும் அச்சுவினி கார்த்திகை நட்சத்திரக் காரர்களுக்கு பண வசதிகள், உதவிகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி
அதிஷ்ட நிறம்: இளநீலம்: எண்: 9
அதிஷ்ட திகதிகள்: 9,11

**இடபம்:**
சனிகாலமும் கிரக மாற்ற அமைப்பும் மனதில் தளப்பமான நிலையை உருவாக்கும். அத்துடன் குடும்ப அமைப்பில் பலவிதமான பிரச்சனைகள் தோன்றக்கூடும். திருமண, காதல் உறவு பிரச்சனைகள் தீர்க்கப் படமாட்டாது. தொழில் சீராக நடக்கும். ரோகிணி நட்சத்திரக்காரருக்கு அவதானம் அவசியம்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்
அதிஷ்ட நிறம்: இளம்பச்சை: எண்:5
அதிஷ்ட திகதிகள்: 5,10

**மிதுனம்:**
2ல் சுக்கிரன், வியாழனும், சனி 11லும் உள்ளதால் முயற்சிகளுக்கு ஏற்ற நற்பலன் கிட்டும். சகோதரர்களின் உதவிகள் கிடைக்கும். பண, தொழில் வசதிகள் சீராக அமையும். திருமணத்தடைகள் விலகும். நோய் துன்பங்கள் குறைவடையும். புனர்பூச, மிருகசீட நட்சத்திரக்காரர்கள் வசதிகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், சனி
அதிஷ்ட நிறம்: இளமஞ்சள்: எண்: 1
அதிஷ்ட திகதிகள்: 10, 11

**கடகம்:**
சில விடயங்களில் தாமதம் இருந்தாலும் வெற்றிகள் வார இறுதியில் காணப்படும். ஆலயதரிசனமும் பெரியோர்களின் ஆசியும் கிடைக்கும். போசன சுகமும் சயன சௌக்கியமும் நன்றாகக் காணப்படும். ஆயிலிய, பூச நட்சத்திரர் நற்சுகங்களைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன் சனி
அதிஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு: எண : 2
அதிஷ்ட திகதிகள் : 5, 7

**சிம்மம்:**
பற்பல முயற்சிகள் தீட்டப்படும். மனதில் பயம் இருந்தாலும் துணிந்து கருமம் ஆற்றுவீர்கள். மகிழ்ச்சிக்குரிய விடயங்கள் ஓரிரண்டு நடைபெறும். காதல் விடயங்கள் கைகூடும். பூர, மக நட்சத்திரருக்கு பண வருவாய் உண்டு.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி
அதிஷ்ட நிறம்: றோஸ் வர்ணம்: எண்: 1
அதிஷ்ட திகதிகள்: 10, 5

**கன்னி:**
அட்டமத்து காலம் சிக்கலுடன் இருந்தாலும் நோய் துன்பங்கள் குறையும். பல பிரச்சனைகள் நீங்கும். நண்பர்கள், உறவினர்களிடம் இருந்து பண உதவிகள் வந்து சேரும். அத்த, உத்திரக்காரர்களுக்கு பிரச்சனைகள் குறையும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வியாழன்
அதிஷ்ட நிறம்: பச்சை; எண்: 9
அதிஷ்ட திகதிகள்: 6, 9

**துலாம்:**
களத்திர பலம், பலதடைகளை விலகும். சகோதரர்களின் அன்பும் பரிசளிப்பும் காணப்படும். மனதில் மகிழ்ச்சி தோன்றும். தெய்வ அருள் கிடைக்கும். பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரமாகும். சுவாதி நட்சத்திரருக்கு, பற்பல சிறப்புக்கள் வந்துசேரும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி
அதிஷ்ட நிறம்: இளநீலம்; எண்: 1
அதிஷ்ட திகதிகள்: 8, 10

**விருட்சிகம்:**
பணச்செலவுகள், சிக்கல்கள் காணப்படும். அலைச்சல்கள் ஏற்படும். எதிலும் அவசரமில்லாது நிதானமாகச் செயல்படவேண்டும். முயற்சிகள் எதுவும் பலனளிக்க மாட்டாது. திருமண விடயங்கள் பணப்பிரச்சனைகளில் பின்னடைவு காணப்படும். கேட்டை, அனுஷக்காரர் குடும்பத்தவர்கள் நிதானமாக இருக்கவேண்டும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 4
அதிஷ்ட திகதிகள் : 7, 9

**தனுசு:**
பணவருவாய் காணப்படும். உறவினர்கள் நண்பர்களின் உதவிகள் வந்து சேரும். விவசாய உற்பத்திகள் பெருகும். திருமண பாக்கியம் கைகூடும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும். புதிய பொருட்கள் சேரும். கல்வி உயர்வைக் கொடுக்கும். உத்திராட நட்சத்திரருக்கு, யோகமான வாரமாகும்.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், சனி
அதிஷ்ட நிறம்: மஞ்சள்: எண்: 5
அதிஷ்ட திகதிகள்: 5, 10

**மகரம்:**
பயண வசதிகள், தூர இடத்துச் செய்திகள் எதிர்பார்க்கலாம். நீண்டநாள் நோய் தொல்லை குறையும். மனதில் அமைதி பிறக்கும். கல்வி, தொழில் சீராக அமையும். அவிட்ட, திருவோணக் காரர்களுக்கு பிரச்சனைகள் குறைவடையும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வியாழன்
அதிஷ்ட நிறம்: [illegible]: எண்: 7
அதிஷ்ட திகதிகள்: 7, 11

**கும்பம்:**
எதிர்பார்த்த விடயங்கள் தோல்வியில் முடியும். நோய் துன்பங்கள் வாட்டும். கைப் பொருட்கள் ஏதேனும் இழக்க வேண்டி வரும். அவிட்ட, சதயக்காரர்கள் கவனமாக இருக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, புதன்
அதிஷ்ட நிறம் : நீலம்: எண்: 1
அதிஷ்ட திகதிகள்: 9, 10

**மீனம்:**
அமைதியான நிலையும் முடிவுகளில் மாற்றமும் காணப்படும். வார நடுப்பகுதியில் முக்கிய விடயங்கள் கைகூடும். திருமணத் தடைகள் விலகும். புதிய செய்திகள் மனதிற்கு சந்தோஷம் தரும். உத்திரட்டாதி, ரேவதி நட்சத்திரக்காரர் நன்மையடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி
அதிஷ்ட நிறம் : மருண்: எண்: 5
அதிஷ்ட திகதிகள்: 5, 7

## நில் — கவனி — முன்னேறு

வாழ்க்கை என்பது ஒரு பயணம். அதில் கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் துணைவர்கள். அதனால்தான் வாழ்க்கைத் துணைவி, வாழ்க்கைத் துணை வர் என்று அழைக்கப்படுகிறார்கள்

பெண்ணை சக மனுஷியாக மதிக்கும் ஆண்மகனை பெண்ணும் மதிப்பாள்.

பரஸ்பர மரியாதைதான் குடும்ப வாழ்க்கையை குதூகலப்படுத்தும்.

சமைப்பதும், துவைப்பதும் பெண்ணுக்குரியவை என்பது பத்தாம் பசலித்தனமான மனப்போக்கு.

இன்பத்திலும், துன்பத்திலும் பெண்ணுக்கு ஆணும், ஆணுக்கு பெண்ணும் தோள் கொடுப்பதே உன்னதம்.

குடும்ப வாழ்வை குதூகலமாக அனுபவிக்கும் பலரது அனுபவங்களை இதோ கேளுங்கள். இதன்படி நடந்துபாருங்கள்.

### வாழ்க்கைத் துணைவர்கள்



★ உங்கள் துணையின் சின்னச் சின்னத் தவறுகளை மனதில் வைக்காது மறந்துவிடுங்கள்.
★ பிறந்தநாள், திருமணநாள் போன்ற முக்கிய நாட்களை நினைவில் வைத்திருந்து பரிசுப் பொருட்களை கொடுப்பதை வழக்கமாக வைத்திருங்கள்.
★ உங்கள் துணையின் குறைகளை மற்றவர்கள் முன்னிலையில் சுட்டிக்காட்டாதீர்கள். தனிமையில் பேசி சரிப்படுத்திக் கொள்ளுங்கள்.
★ விடுமுறைகளில் நண்பர்கள், உறவினர்களோடு மட்டும் பொழுதைப் போக்காமல் உங்கள் துணையுடனும் நேரத்தைச் செலவிடுங்கள். மனம் விட்டு பேசுங்கள்.
★ வேலைக்கு செல்லும் துணைவியாக இருந்தால் துணைவரும் வீட்டு வேலைகளில் முடிந்தளவு பங்கெடுத்துக் கொள்ளுங்கள்.
★ உங்கள் துணையின் உறவினர்கள் வரும்போது அவர்களை வரவேற்று உபசரித்து அவர்களோடு சிறிது நேரத்தை செலவிடுங்கள்.
★ குடும்பம் தொடர்பான பிரச்சனைகள், சொத்துக்கள் வாங்குவது முதல் வீட்டு தளபாடங்கள் வாங்குவது உட்பட இருவரும் யோசனைகளை பகிர்ந்து கொண்டு தெரிவுசெய்யுங்கள்.
★ வீட்டின் படுக்கையறையை இருவருக்கும் பிடித்தமான முறையில் அலங்காரம் பண்ணி வைத்திருங்கள்.
★ எப்போதும் சுத்தமாக இருப்பதற்கு முன்னுரிமை கொடுங்கள். வீட்டில் தானே என்று அச்சுப்பிச்சு என்று அழுக்காக இருக்காதீர்கள்.

**என்ன யோசனைகள் போதுமா? இவற்றை முதலில் கடைப்பிடித்தாலே தானாக குடும்ப வாழ்வில் தென்றல் வீசத் தொடங்கும். வாழ்வே மாயம் என்று சலித்துக் கொள்ள மாட்டீர்கள்.**



படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## சோர்வுக்கு பதிலடி



உடல் சோர்வைப் போக்குவது எப்படி?

* சரியாகத் தூங்காமல் இருந்தாலே உடல் சோர்வு அதிகமாக ஏற்படும். உறக்கக் குறைவு மூலம் உடல் தளர்ந்து நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து போய்விடும்.

* நிறைய சாப்பிட்டால் உடல் சோர்வு நீங்கிவிடும் என்று நினைப்பது தவறு. கலோரியை விட தூக்கம்தான் சோர்வு நீக்கும் சிறந்த டொனிக் ஆகும்.

* சோர்வாக இருக்கும்போதும், வழக்கமான நேரத்திற்குத்தான் தூங்குவேன் என்றிருக்காமல் முன்னதாகவே தூங்கச் செல்லுங்கள்.

* உடலை வருத்தி அதிகமான நேரம் உழைத்தால் சில நேரம் தூக்கம் வராது. மிதமான சூட்டில் ஒரு கப் பால் குடித்துவிட்டுத் தூங்கினால், உடனடியாகத் தூக்கம் வந்துவிடும்.

* தூங்கச் செல்வதற்கு முன்னால் இலேசான சுடுநீரால் உடலைக் கழுவுவது நல்லது.

* உறக்கக் குறைவு மட்டுமல்ல, அலுப்பு நிறைந்த வேலை பார்த்தாலும் உடல் சோர்வடையும். இப்படிப்பட்டவர்கள் ஓய்வுநேரத்தையும் வார விடுமுறை நாளையும் உற்சாகமானதாகவும், மகிழ்ச்சிகரமானதாகவும் மாற்றிக்கொள்ள வேண்டும். நண்பர்களோடு பொழுதைக் கழிப்பது, ஓய்வு நாட்களில் உறவினர்களின் வீடுகளுக்குச் செல்வது, உடலுக்கும் மனதுக்கும் உற்சாகத்தைத் தரும்.

* தொடர்ந்து பல மணிநேரம் வேலை பார்ப்பவர்கள் தங்கள் வேலையில் இடமாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இடையிடையே ஓய்வெடுத்துக்கொண்டால் சோர்வு ஏற்படாது.

* அதிகமான உடல் உழைப்பில் ஈடுபடுகிறவர்களுக்கு ஓய்வு அவசியம். மூளைக்கு அதிக வேலை கொடுப்பவர்கள் ஓய்வு எடுக்காவிட்டால் அதிக மன நெருக்கடி ஏற்படும்.

* ஓய்வு நேரங்களில் முழுமையாக ஓய்வை அனுபவியுங்கள். அந்த நேரத்தில் தொழிலைப் பற்றியும், தொல்லைகளைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டாம்.

* மன, உடல் சோர்வு ஏற்பட்டிருக்கும் போது மிகக் கவனத்துடன் பார்க்க வேண்டிய வேலைகளில் ஈடுபடாதீர்கள். தொலைக்காட்சி பார்ப்பது, புத்தகங்கள் படிப்பது, வேலை மூலம் ஏற்படும் சோர்வை விரட்டும்.

## சோப் பிரியர்களுக்கு

சிலர் எப்போது பார்த்தாலும் அதிகமாக சவர்க்காரத்தைப் போட்டுக் குழைத்து கைகளை அலம்பிக்கொண்டே இருப்பார்கள். சிலர் ஒரு நாளைக்கு மூன்று முறை குளிப்பார்கள். சவர்க்காரம் போட்டு தேய் தேய் என்று தேய்ப்பார்கள். இதனால் தோல் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக தோல் சிகிச்சை வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.

தோல் வறட்சி, தோல் அரிப்பு, தோல் உரிந்து எளிதில் இரத்தம் வருவது போன்றவை ஏற்படும். அதிக மணம் கொண்ட இரசாயன சவர்க்காரங்களை விட மூலிகை சவர்க்காரங்கள் அல்லது மிதமான எண்ணெய் சவர்க்காரங்களை உபயோகிக்கலாம்.

கரடு முரடான துணியைக் கொண்டு தோலை அழுந்தத் துடைக்காமல் மெல்லிய துணியால் இலேசாக ஒற்றி எடுப்பது நல்லது.

## எல்லோரும் அழகானவரே



பெண்களில் இரண்டு வகையினர் உள்ளனர்.

பார்ப்பதற்கு பளிச்சென்று இருப்பவர்கள். தம் அழகை முறையாக வெளிப்படுத்தத் தெரியாதவர்கள். மற்றப்படி அழகில்லாத பெண்கள் என்று இந்த உலகில் யாரும் கிடையாது.

### பப்பாளிப்பழம்:

முகத்தின் இறந்த திசுக்களை நீக்கி, சருமத்தைப் பொலிவாக வைத்திருக்கக் கூடிய 'என்ஸைம்'களைக் கொண்டது பப்பாளிப்பழம். இதன் சதைப்பகுதியைக் கூழாக்கி, முகத்தில் கவனமாகப் பற்றுப் போட்டால், நல்ல பலன் கிடைக்கும். எல்லா வகையான சருமம் உடையவர்களுக்கும் ஏற்ற 'ஃபேஷியல் மாஸ்க்' இது.

### ஒரேஞ்ச்:

ஒரேஞ்ச் பழத்தின் தோலைத் தூர எறிந்துவிடாமல், வெய்யிலில் காயவைத்து சன்னமாக அரைத்துக் கொள்ளுங்கள். இதில் சிறிது மஞ்சள், சந்தனம், தேன், பாலேடு சேர்த்து முகத்தில் தடிமனாகப் பற்றுப் போடவும். நாளடைவில் முகம் பொலிவு பெறும்.

### தயிர்:

முகம், தலைமுடி, உடல் ஆகியவற்றை இயற்கையான முறையில் பளிங்கு மாதிரி சுத்தம் செய்ய உதவுவது தயிர். உடலிலும் முகத்திலும் தயிர் பூசி அரைமணி ஊறிய பின் வெதுவெதுப்பான நீரில் குளித்தால் பலன் கிடைக்கும்.

புளித்த தயிரை தலையில் பூசி, பிறகு ஷம்பூ போட்டால் பொடுகு, அழுக்கு நீங்கி தலைமுடி ஆரோக்கியமாகப் பளபளக்கும்.

வெய்யில் வாட்டியெடுக்கும் கோடை காலத்திலும், மிகக் கடுமையான குளிர் காலங்களிலும் முகத்தை அடிக்கடி தண்ணீரால் கழுவக்கூடாது. தண்ணீர் முகத்தை மேலும் வறட்சியடையச் செய்யும்.

அதனால் எண்ணெய்ப்பசையுள்ள சருமமுடையவர்கள் பாலும், வறண்ட சருமமுடையவர்கள் தயிரும் பூசிய பிறகே தண்ணீரால் முகத்தைக் கழுவ வேண்டும்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** GJ

பெயர்:..............................
முகவரி:..............................
..............................
தொழில்:..............................
கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 11-09-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## மோனிக்கா என் மோனிக்கா

வழங்குவது புவனா — 06

பிளேய்லர் திருமணம் செய்துவிட்டான் என்று அறிந்ததும் அவனுடன் நெருங்கி உறவாடிய நாடகக்கல்லூரி மாணவிகள் சிலர் அவனுடன் உறவைக் கத்தரித்துக் கொண்டனர்.

ஆனால் மோனிக்காவுக்கு பிளேய்லர்மீது ஆர்வம் அதிகமானது. அவனது மனைவியைக் காணவேண்டும், கண்டு தனக்கும் அவனுக்கும் உள்ள நெருக்கத்தைக் கூறி வெறுப்பேற்ற வேண்டும் போலிருந்தது.

பிளேய்லர் விடுமுறை முடிந்து வந்ததும் மோனிக்கா தொடர்பு கொண்டாள். எவ்வித தயக்கமோ, குற்ற உணர்ச்சியோ இல்லாத குரலில் பிளேய்லர் அவளுடன் பேசினான்.

"உன் உடம்பு பெருத்திருக்கிறதா?" என்று எடுத்த எடுப்பிலேயே கேட்டான். அது உண்மைதான். சிலநாட்களாக நினைத்தபோதெல்லாம் சாப்பிட்டு உடல் எடை அநியாயத்திற்கு ஏறிவிட்டது.

இது அவனுக்கு எப்படித் தெரியும் என்ற ஆச்சரியத்தோடு, "ஆம்!" என்றாள்.

"எனக்கு நீ குண்டா இருப்பதுதான் பிடிக்கும்!" என்றான் பிளேய்லர்.

"ஏன்?" என்று மோனிக்கா கேட்டதற்கு, "எனக்கு எல்லாமே பெரிதாக இருந்தால்தான் பிடிக்கும். எல்லாமே...!" என்று ஒருமாதிரியான ஓசையுடன் சிரித்தான்.

மோனிக்காவுக்கு தன் உடலை அவன் ஆசையோடு விவரிப்பது கிளு கிளுப்பான சந்தோசத்தை ஏற்படுத்தியது.

அந்த சந்தோசத்துடனேயே கேட்டாள், "இன்று எங்கே சந்திக்கலாம்?"

மோனிக்கா அப்படிக் கேட்டதும் பிளேய்லர் அவளது ஆசையைப் புரிந்துகொண்டு, "அவசரமா?" என்று கேட்டான்.

"ஏன் உங்களுக்கு என்னைப் பார்க்க ஆசை இல்லையா? இல்லையானால் வேண்டாம். ஆறுதலாகப்..."

"இல்லை வருகிறேன். இன்று கொஞ்சம் விசேஷமாகச் சந்திக்கலாம்!" என்றான் பிளேய்லர்.

விசேஷமாகச் சந்திப்பது என்பதற்கு என்ன அர்த்தம் என்பது மாலையில்தான் மோனிக்காவுக்குத் தெரிந்தது.

நெடுஞ்சாலைகளில் தங்குவிடுதிகள் பல இருக்கின்றன. அவற்றை 'மோட்டெல்ஸ்' என்று அழைப்பார்கள்.

அநேகமாகக் காதலர்கள்தான் அவற்றை சில மணிநேரங்களுக்கு வாடகைக்கு பிடித்து தங்குவார்கள்.

அவ்வாறான ஒரு மோட்டெல் ஒன்றை வாடகைக்குப் பிடித்து வைத்திருந்தான் பிளேய்லர்.

அங்குதான் மோனிக்காவை அழைத்துச் சென்றான்.

### முதன் முதலாக

உள்ளே ஒரு கட்டில் இருந்தது. தொலைக் காட்சிப் பெட்டி இருந்தது. ஒரே ஒரு நாற்காலி மட்டுமே இருந்தது. மிகச் சிறிய அறை.

மோனிக்காவை அணைத்துக் கட்டிலில் அமரவைத்து, தானும் அவள் அருகில் அமர்ந்தான் பிளேய்லர்.

பிளேய்லரும் மோனிக்காவும் இதற்கு முன்னரும் பல தடவைகள் ஒருவரை ஒருவர் தழுவி முத்தமிட்டுள்ளனர். மோனிக்காவின் அங்கங்களை பிளேய்லர் ஸ்பரிசம் செய்துமிருக்கிறான்.

ஆனால் அவை எல்லாம் பொது இடங்களில் நடந்தவை. இப்போதுதான் முதன் முதலாக தனி அறை ஒன்றில் ஓர் ஆடவனை சந்திக்கிறாள் மோனிக்கா.

அதனால்தானோ என்னவோ அவளுக்கு படபடப்பாக இருந்தது. உடம்பெல்லாம் உஷ்ணமாக இருந்தது.

## உள்ளத்தில் உணர்ச்சிக் கலவை

பிளேய்லர் அவளைத் தன்னோடு இறுக்கமாக அணைத்தபடி அவள் இதழ்களில் முத்தமிட்டான். அவளும் அதற்கு இடமளித்து, அவனது மேல் உதடுகளை தன் இதழ்களால் மெல்லக் கவ்வினாள்.

பிளேய்லரின் கை ஒன்று இஷ்டம் போல அவள் உடம்பெங்கும் ஊர்ந்தது. மோனிக்கா ஏதோ முணுமுணுத்தாள். அவளுக்கு அவன் கைகள் செய்யும் விஷமங்கள் அவஸ்தையாக இருந்தது.

பிளேய்லர் மெல்ல மெல்ல அவளது உடைகளைக் களைய ஆரம்பித்தான். முதலில் தடுத்தாள். அவனும் உடன்படுவதுபோல நடித்து முயற்சியைக் கைவிட்டு, அவளது கழுத்து நரம்பில் தன் மூக்கினால் உரசி கூச்சப்படுத்தினான்.

பின்னர் மறுபடி அவள் உடைகளில் கை வைத்தான். இம்முறை மிக மிகப் பலவீனமாக மோனிக்கா தடுத்தாள். அவன் பின்வாங்காது தொடர்ந்து முயற்சிக்க, அவள் தடையை வாபஸ் வாங்கினாள். முழுத் தடைகளையும் விலக்கத் தானும் ஒத்துழைத்தாள்.

பிளேய்லர் மோனிக்காவை நெற்றியில் முத்தமிட்டு கட்டிலில் மல்லாத்தினான். மோனிக்கா தன் கைகளால் அவனது கழுத்தை வளைத்து இழுத்தபடி சரிந்தாள்.

பிளேய்லர் மோனிக்காவை ஆக்கிரமிக்கத் தொடங்கினான். பிளேய்லருக்கு அனுபவம் புதிதல்ல. மோனிக்காவுக்கு புத்தம் புதிய அனுபவம்.



கல்லூரித் தோழிகளுடன்

அவளுக்குள் ஏதேதோ மாற்றங்கள். ஏதேதோ உணர்ச்சிகள். கால்களை உதைத்தாள். கால்களால் அவனை இறுக்கினாள். அவனது தலைமுடியை கோதிவிட்டு, சட்டென்று பற்றி இழுத்தாள். அவனது முதுகில் குத்தினாள் பிராண்டினாள்.

பிளேய்லர் அவள் அறியாத புதிய பாடங்களை அந்த மோட்டெல்லில், அந்த மாலைப் பொழுதில் கற்றுக் கொடுத்தான்.

மோனிக்கா பயந்து போயிருந்தாள். பயத்தின் ஊடே மகிழ்ந்தும் போயிருந்தாள்.

முதல் அனுபவம் அவளுக்குள் இனம் புரியாத உணர்ச்சிகளை, காரணம் புரியாத அச்சங்களை, புதிரான எண்ணங்களை மொத்தத்தில் ஒரு உணர்ச்சிக் கலவையை உருவாக்கியிருந்தது.

அவளுக்கு உடம்பு முழுக்க வியர்த்து நனைந்து போயிருந்தது. உஷ்ணம் அடங்கி உடல் குளிர்ந்து போய்க் கிடந்தது.

எழுந்து நடக்க சிரமமாக இருந்தது. பிளேய்லர்தான் அவளைத் தைரியப்படுத்தினான்.

"உன்னைப்போன்ற பெண்கள் பலரை நான் பார்த்திருக்கிறேன். இதுவெல்லாம் வாழ்க்கையில் நாம் அனுபவிக்க வேண்டிய சந்தோசங்கள்தான்! மனதை அலட்டிக் கொள்ளாதே!" என்று முத்தமிட்டான்.



இப்போது முத்தம் கொஞ்சம் கசந்தது. அன்று அவளை டாக்ஸி ஒன்று பிடித்து வீட்டுக்கு அனுப்பி வைத்தான் பிளேய்லர்.

வீட்டுக்குச் செல்லும்வரை மோனிக்காவிடம் குற்ற உணர்ச்சி காணப்பட்டது. குளித்து முடித்து கட்டிலில் போய் விழுந்து கிடந்து சிந்தித்தபோது, குறுகுறுப்பாக இருந்தது.

பிளேய்லர் அவள்மீது படர்ந்தபோது அவளது உடலமைப்பை பிரமாதமாகப் புகழ்ந்திருந்தான். கண்களை விரித்துப் பார்த்து வியந்திருந்தான்.

அதனை நினைத்தபோது அவளுக்கு பூரண திருப்தியாக இருந்தது. மதம் கொண்ட யானையைப் பாகன் அங்குசம் கொண்டு அடக்குவது போல, பிளேய்லர் தன் உடல் உணர்ச்சிகளைத் தணித்து சாந்தி ஏற்படுத்தி விட்டதாகவே அவள் சந்தோசமடைந்தாள்.



பிளேய்லருடன்

### தொடர்ந்தது

பெற்றோரின் கவனிப்பே இல்லாது, விரக்தியடைந்திருந்த அவள் மனது பிளேய்லரின் அத்துமீறலை அர்த்தமுள்ள செயலாக ஏற்றுக் கொண்டது.

இதன்பின்னர் பல முறை மோனிக்கா பிளேய்லருடன் மோட்டலில் தங்கினாள்.

முதலில் இருந்த குற்ற உணர்ச்சி பின்னர் இருக்கவில்லை. அவளைக் கட்டுப்படுத்த வீட்டில் யாரும் இருக்கவில்லை.

பிளேய்லர்மீதான தன் மோகம் குறித்து பின்னாளில் மோனிக்கா மறைக்காது கூறினாள்.

"பிளேய்லருடன் எவ்வளவு நேரம் செலவிடுகிறாளோ, அந்த அளவுக்கு அவர்மீதான ஆசையும் அதிகரித்துக்கொண்டே போனது."

என்றாலும் பிளேய்லரை முழுமையாக தன்னுடைய உடமையாக்க முடியவில்லையே என்ற ஆதங்கமும் மோனிக்காவின் மனதில் ஒரு மூலையில் இருந்தது.

பிளேய்லருடன் உடல் உறவு கொண்டதையும் மோனிக்கா பின்னாளில் வெளிப்படையாக ஒப்புக்கொண்டாள்.

"அது ஒரு இனிய அனுபவம். எதிர்பாராது ஏற்பட்ட அனுபவமாக இருந்தாலும், பின்னர் நானே அதனை மீண்டும் எதிர்பார்க்கத் தூண்டிய அனுபவமாகவும் இருந்தது!" என்று மோனிக்கா தன் நண்பி ஒருத்தியிடம் கூறியிருக்கிறாள்.

மோனிக்காவும் பிளேய்லரும் உறவு கொண்டபோதுதான், பிளேய்லரின் மனைவி கேற் நேசன் கர்ப்பமடைந்தார்.

"பிளேய்லர் கில்லாடி. ஒரே நேரத்தில் இருவரையும் கவனித்திருக்கிறார். என்னையும் திருப்தி செய்தபடி, தன் மனைவிக்கும் கணவனாக நடந்துள்ளார்!" என்று மோனிக்கா இலேசான கேலியுடன் இதனைப் பற்றிக் கூறியுள்ளாள்.

பிளேய்லருடன் மோனிக்கா சந்தோசமாக இருந்த காலத்தில், அவளது பெற்றோரின் நடவடிக்கைகளால் மனச் சஞ்சலமும் அடைந்தாள்.

தனது தந்தையையும் அவரது காதலியையும் மோனிக்கா ஒருநாள் சந்திக்க நேர்ந்தது. அது விரும்பத்தக்க சந்திப்பாக இருக்கவில்லை.

(வருவாள்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

**வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | ஜெ. சாந்திமா கெபிரியல், எம்.எஸ்.எ.ஃப். காரியாலயம், மன்னார் வீதி, வவுனியா. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!


இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



படிப்பகம்

www.padippakam.com





சக்தி தனக்கே கருவி யாக்கு-அது
சக்திசக்தி சக்தியென்று பேசும்-மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு-அதில்
சார்ந்திருக்கும் நல்லுறவும் தேசும்.

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை



# புத்திசாலி வேலைக்காரன்

ஓர் அரண்மனையில் பெரிய விருந்து ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. வேலைக்காரன் ஒருவன் உணவு பரிமாறும்போது ஒரு துளி சாம்பார் சிதறி மன்னரின் உடையில் பட்டுவிட்டது.

மன்னனோ கோபக்காரன். எதையும் ஆராய்ந்து பார்க்காமல் செயலில் இறங்கும் அவசரப்புத்தி கொண்டவன்.

சாம்பார் தனது உடையில் பட்டதால் கடும் கோபம் கொண்ட அவ்வரசன், சாம்பாரைச் சிந்திய வேலைக்காரன் தலையை வெட்ட உத்தரவிட்டான்.

வேலைக்காரன் எவ்வளவோ கெஞ்சியும் மன்னன் மனம் இரங்கவில்லை.

திடீரென்று வேலைக்காரன், பாத்திரத்தில் இருந்த சாம்பார் முழுவதையும் அரசனின் தலையில் கொட்டினான். மன்னனின் கோபம் உச்சத்துக்குச் சென்றது.

"அடேய் மூடனே என்ன செய்கிறாய்? உனக்கு சாவு நிச்சயம்!" என்று கத்தினான் மன்னன்.

காவலாளிகள் வேலைக்காரனைச் சூழ்ந்து கொண்டனர். அப்போது வேலைக்காரன் பவ்யமாகப் பேசினான்:

"மன்னா! உங்கள் புகழையும் பெருமையையும் காப்பாற்றவே சாம்பாரை உங்கள் தலையில் கொட்டினேன்!" என்றான்.

இதைக் கேட்ட மன்னன் புரியாமல், "என்ன உளறுகிறாய்?" என்று கேட்டான்.

"மன்னா! ஒரு துளி சாம்பார் கொட்டியதற்காக எனக்கு மரண தண்டனை விதித்தீர்கள். 'இவ்வளவு சிறிய குற்றத்திற்கு, மன்னன் மரணதண்டனை விதித்து விட்டாரே!' என்று உங்களுக்கு அவப்பெயர் வந்திருக்கும்.

இப்போது பாத்திரத்தில் உள்ள சாம்பார் முழுவதையும் உங்கள் தலையில் கொட்டி விட்டதால் பெரிய குற்றம் செய்தவனாகி விட்டேன். இதனால் எனக்கு மரண தண்டனை விதிப்பது தவறு இல்லை," என்று வேலைக்காரன் கூறினான்.

மன்னனின் மூளைக்கு அப்போதுதான் தனது செயல் தவறு என்று புரிந்தது.

ஆத்திரப்பட்டு சற்றும் யோசிக்காமல் வேலைக்காரனுக்கு விதித்த தண்டனையை உடனே இரத்துச் செய்தான்.

அத்தோடு வேலைக்காரனின் புத்திசாலித் தனத்தையும், சமயோசிதத் தன்மையையும் பாராட்டி அவனுக்குப் பரிசுகளையும் வழங்கினான்.

புத்திசாலித்தனமும், சமயோசிதமாகச் செயற்படும் திறனும் இருந்தால்போதும். எவ்வளவு பெரிய ஆபத்தில் இருந்தும் தப்பி விடலாம். அதற்கு இந்தக் கதை நல்லதொரு உதாரணம் அல்லவா?


# அதிசயம் - ஆனால் உண்மை!



இல்லிஸ்ச் ஃபோர்ட் என்ற அமெரிக்கர் ஒரு சைப்ரஸ் மரத்தைத் தறித்து விழ்த்தினார். பின் மரவேரைக் கிளறும்போது, அதன் வேர் குதிரையின் தலைபோல் அமைந்திருந்தது.




மொராக்கோவில் உள்ள ட்ரா பள்ளத்தாக்கில் 'பர்பரா' இனப் பழங்குடி மக்கள் தமது ஆடைகளுக்கு நீலச்சாயம் ஏற்றி, தமது உடலை மெல்ல மெல்ல அழியாத நீலநிறமாக மாற்றுகின்றனர்.



குக்கூரே என்ற கடல் உயிரிக்கு மட்டுமே கண்ணிமைகள் கண்களுக்குள் அமைந்துள்ளன.

# பிரமிட் மாட மாளிகை

மெக்ஸிகோ வளைகுடாப் பகுதியில் எல்-டாஜின் என்றொரு பழமையான நகரம் உண்டு. இங்கு பிரமிட் போன்ற அமைப்பில் மாளிகை ஒன்று உள்ளது. இதை பிரமிட் மாடமாளிகை என்று அழைக்கிறார்கள்.



இந்தக் கோபுரத்தில் மொத்தம் ஏழு அடுக்குகள் உள்ளன. இந்த ஏழு அடுக்குகளிலும் மொத்தம் 365 மாடங்கள் உள்ளன. வருடத்திற்கு ஒருநாள் ஒவ்வொரு மாடத்திலும் கடவுள் சிலைகள் வைத்து அப்பகுதியில் உள்ள பழங்குடியினர் வழிபடுகின்றனர்.

கி.மு.600ல் தான் எல் டாஜின் நகரம் உருவாக்கப்பட்டு செழிப்பான பகுதியாக இருந்துள்ளது.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இந்த நகரத்தை ஆராய்ந்தபோது பூமிக்கடியில் வட்டவடிவ தர்பார் அரங்குகளும், கல்வெட்டுக்களும், மதச் சடங்குகளுக்குப் பயன்படும் சில பொருட்களும் புதையுண்டு இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

## ஏன் தெரியுமா?

மது அருந்தியவர்கள் தள்ளாடுவது ஏன் என்று தெரியுமா?

நமது உடலில் எப்போதும் கொஞ்சம் அல்கஹோல் (மதுசாரம்) இருக்கும். சீனி, மாச்சத்துப் போன்றவற்றில் உள்ள அல்கஹோல் எப்போதும் நம் உடலில் ஒரு கிராமுக்கு இருக்கும். இதனால் போதை ஏற்படுவதில்லை.

ஆனால் மது அருந்தும்போது அல்கஹோலின் அளவு நூற்றுக்கணக்கில் அதிகரிக்கும். இதனால் வாய், மூக்கு ஆகியவை சிலிர்த்துக் கொள்கின்றன. இது அளவுக்கு அதிகமாகும்போது உடலின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு, பகுத்தறியும் திறனும் பாதிக்கப்படுவதாலேயே இவர்கள் தள்ளாடுகிறார்கள்.



# கடல் அலை மின்சாரம்



மின்சாரம் பல்வேறு வகைகளில் உற்பத்திசெய்யப்படுவதை அறிந்திருப்பீர்கள். எதிர்காலத்தில் கடல் அலைகளைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கப்படவுள்ளது.

கடல் அலைகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கக்கூடிய சிறிய மின்சார நிலையம் ஒன்று ஃபிரான்ஸ் நாட்டில் நிறுவப்பட்டுள்ளது.

இது ஃபிரான்ஸ் நாட்டின் பிரிட்டானி என்ற இடத்தில் 1966ம் ஆண்டு நிறுவப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# ட்ரைவேர்ஸ்

ஆபிரிக்க காடுகளில் ட்ரைவேர்ஸ் என்ற பெயரில் ஓர் எறும்பினம் உண்டு. இந்த எறும்பினம் யானையைக் கூடக் கொன்றுவிடும். யானையின் காதுகள், மற்றும் துதிக்கைக்குள் புகுந்து கொண்டு, இவை கொல்வதில்லை.

ஆயிரக்கணக்கில் படையாகக் கிளம்பும் இந்த எறும்புகள், நேராகப் போய் யானையின் உடம்பெங்கும் மொய்த்து விடும். பின் அரித்துக் கொன்று தின்று விடும்.



இந்த வகை எறும்புகள் உடலில் ஏறத் தொடங்கிவிட்டால் யானைகள் விழுந்தடித்துக்கொண்டு ஓடிப்போய் சதுப்பு நிலச் சகதிக் குழிகளில் விழுந்து விடும். இது ஒன்று தான் ட்ரைவேர்ஸ் எறும்புகளிடமிருந்து யானைகள் தப்பிக்கும் ஒரே வழி.




# இளமையான மலைத்தொடர்

மலைத் தொடர்களில் மிகவும் இளமையானது இமய மலைதான். இதன் வயது ஒன்றரைக்கோடி வருடங்கள்.

மத்திய ஆசியாவில் திடீரென கடற்படுகை உயர்ந்ததன் காரணமாக இமய மலை தோன்றியிருக்க வேண்டும் என்று புவியியல் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

நிலப்பரப்புகள் மேல் நோக்கி உயர்வதற்கு, அதாவது மலைகளாவதற்கு நில நடுக்கமும் ஒரு காரணம் என்கிறார்கள் புவியியலாளர்கள்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **11.09.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **312**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 310

பரிசுக்குரியவர்:
எஸ். சந்திரகலா,
நல்லாயன் மகளிர் கல்லூரி, கண்டி.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| பாத்திமா நிஷ்மா நஜீம், ஒக்ஸ்போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. | ஸ்ரீஸ்கந்தராஜா வினோதன், இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை. |
| பே.ஜெ.க.நாதன், கோணாவில் விநாயகர் மகாவித்தியாலயம், அக்கரைப்பற்று. | மோகன் பிரியதர்ஷினி, த.மத்திய கல்லூரி, பண்டாரவளை. |
| மாணிக்கராசா சாயிதரன், இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை. | ஸ்ரீஸ்கந்தராஜா டிலிப்குமார், பரி-தோமாவின் கல்லூரி, கல்கிசை. |
| எம். சிபாயா, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, திருகோணமலை. | யோகினி திருக்கணேசன், சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. |
| சேக்முகமட் பஸ்லி, கணிஜவேலி சிங்கள வித்தியாலயம், புல்மோட்டை. | க. ரமேஸ், ராகலை தமிழ் மகா வித்தியாலயம், ராகலை. |

## விடுகதைகளும் விடையும்

கீழே ஐந்து விடுகதைகள் தரப்பட்டுள்ளன. அந்த ஐந்திற்கும் விடை ஒன்றுதான். அது என்ன என்று கண்டுபிடியுங்கள் பார்ப்போம்.

1. பச்சை நிற அழகிக்கு உதட்டுச் சாயம் பூசாமலே சிவந்த வாய்.
   அவள் யார்?
2. பச்சை ஆடைக்காரி சாப்பிடுவதும் பசுந்தளிர் தான்.
   அவள் யார்?
3. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல்.
   அது என்ன?
4. வெற்றிலை போடாமலேயே வாய் சிவந்திருக்கும்.
   அது என்ன?
5. பச்சை நிறத்தவளுக்கு பவளம் போல் மூக்கு.
   அவள் யார்?

விடை
கிளி

## ஒரு வரிச் செய்திகள்

* உலகில் அதிக முட்டையிடும் உயிரினம் கறையான்.
* உலகில் அதிகளவு சிலை வடிக்கப்பட்ட மனிதர் லெனின்.
* உலகில் உயரமான நாடு திபெத்.
* காலில் கண் உள்ள பூச்சி வெட்டுக்கிளி.
* குயில் குளிர் காலத்தில் கூவுவது இல்லை.
* உலகின் மிகப் பெரிய அருங்காட்சியகம் பிரிட்டிஷ் அருங்காட்சியகம் ஆகும்.
* உலகின் மிகப் பெரிய வைரச் சுரங்கம் தென்னாபிரிக்காவின் கிம்பர்ளியில் உள்ளது.

## அதிசயச் செய்திகள்

✤ குவாரியன் என்பது அவுஸ்திரேலியாவில் காணப்படும் பறவை. இது மாலையில் கூடு திரும்பும்போது குளிக்காமல் கூட்டிற்குள் நுழையாது.

✤ தவளைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். ஆனால் அவுஸ்திரேலியாவில் 'ரோட்போட்ரோ சைலச்' என்ற இனத்தைச் சேர்ந்த தவளைகள் முட்டையிடாமல் வாய் வழியாகக் குட்டி போடுகின்றன. ஒரே தடவையில் 30 குட்டிகள் வரை போடும்.

✤ அமெரிக்க ஜனாதிபதியாக இருந்து சுட்டுக் கொல்லப்பட்டவர் ஜோன் எஃப் கென்னடி. இவர் சரியாக 1000 நாட்கள் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி வகித்தார்.


படிப்பகம்


www.padippakam.com

**இதுவரை**

பாக்கியத்தின் மகள் வர்ணாவின் நாய் பிங்கிக்கு 'டிஸ்டெம்பர்' எனப்படும் கொடிய நோய் வருகிறது. அதனைக் காப்பாற்றவே முடியாது என்று டாக்டர்கள் கைவிரிக்கின்றனர். ஆனால் அந்த நாய் அதிசயமாக உயிர் பிழைக்கிறது. வர்ணாவிடம் உள்ள அதிசய சக்திதான் அதற்கு காரணம் என்று டாக்டர்கள் நினைக்கின்றனர். சொர்ணம், நீலமேகம் தம்பதியின் மகள் பூவிழி கொலை தொடர்பான விசாரணையும் மறுபுறம் சூடுபிடிக்கிறது..

**இனி...**

"நீங்க மறைச்சு வெச்சிருக்கிற உண்மையை வெளியே கொண்டு வரட்டுமா?"



# கையில் சிக்கிய மின்னல் 19



இன்ஸ்பெக்டர் பலராமன் ஒரு கேலியான புன்னகையோடு இப்படிக் கேட்டதும் நீலமேகம் கலவர விழிகளோடு தன் புருவங்களை உயர்த்தினார்.

"நான் உண்மையை மறைச்சு வெச்சிருக்கேனா...?"

"எஸ்..."

"என்ன உண்மை...?"

"உங்க பொண்ணு பூவிழிக்கு நிறைய பாய் ஃப்ரண்ட்ஸ் இருந்திருக்காங்க. பட், நீங்க இல்லேன்னு சொல்றீங்க. இப்ப நான் சொல்லப்போகிற இன்னொரு விஷயத்தைக் கூட நீங்க இல்லேன்னு சொல்லலாம். ஆனா அது உண்மைன்னு நிரூபிக்கக் கூடிய ஆதாரம் என்கிட்ட இருக்கு...."

"நீங்க என்ன சொல்லப் போறீங்க?"

"ஆறு மாசத்துக்கு முன்னாடி உங்க பொண்ணு பூவிழி ஒரு லேடி டாக்டர்கிட்ட உடம்பைக் காட்டப் போயிருக்கா. அவ உடம்புக்கு என்னன்னு நீங்க கேட்கலாம். கல்யாணமான பெண்களுக்கு மட்டுமே வரவேண்டிய உடம்பு உபாதை அது..."

"நீங்க சொன்னது எனக்குப் புரியலை..."

"நிஜமாவே புரியலையா...?"

"புரியலை..."

"விஷயத்தை உடைச்சே சொல்லிடறேன். உங்க பொண்ணு பூவிழி தன் வயித்துல வளர்ந்துட்டிருந்த ரெண்டு மாசக் கருவைக் கலைக்கிறதுக்காக அந்த டாக்டரம்மாகிட்டே போயிருந்தா..."

நீலமேகம் சில விநாடிகள் உறைந்து போய், பின் ஒரு விநாடியில் மீண்டார். முகம் இறுக்கத்துக்கு உட்பட்டிருக்க தலையை ஆட்டியபடி தீர்க்கமான குரலில் சொன்னார்.

"இது பொய்...!"

"பொய்யாய் இருக்க முடியாது மிஸ்டர் நீலமேகம். ஏன்னா அந்த டாக்டரம்மா ஒரு பொண்ணைப் பத்தி அதுவும் இது மாதிரியான விஷயத்தில் பொய் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை."

"யார் அந்த டாக்டரம்மா...?"

"சந்திராதேவி.... அமைந்தகரையில் நோபிள் க்ளீனிக் என்ற பேர்ல ஒரு நர்ஸிங் ஹோமை நடத்திட்டு வர்றார். இன்னிக்கு சிட்டியில் பிரசித்த பெற்ற டாக்டர்களில் சந்திராதேவியும் ஒருத்தர். ஒரு அரைமணி நேரத்துக்கு முந்தி டாக்டர் சந்திராதேவி எனக்கு ஃபோன் பண்ணி, 'இன்னிக்கு பேப்பர் பார்த்தேன். பேப்பர் நியூஸ்ல பூவிழிங்கிற ஒரு பெண் கொலையான செய்தியை அவ ஃபோட்டோவோடு படிச்சேன். கொலையாளி யார்ன்னு தெரியாமே பொலீஸ் திணறிக்கிட்டிருந்தா, இப்ப நான் சொல்லப் போகிற தகவல் உங்களுக்கு உபயோகமாயிருக்கும்' என்று சொல்லிவிட்டு ஆறு மாசத்துக்கு முன்னாடி கருக்கலைப்புக்காக பூவிழி தன் கிட்ட வந்ததாகச் சொன்னாங்க..."

நீலமேகம் விருட்டென்று எழுந்து கொண்டார். "இன்ஸ்பெக்டர்! அந்த டாக்டரம்மாவை நான் உடனடியாப் பார்க்கணும். எம் பொண்ணு சாயல்ல இருந்த யாரோ ஒரு பொண்ணுக்கு கருக்கலைப்பு பண்ணிட்டு இப்ப பேப்பர்ல வந்திருக்கிற ஃபோட்டோவைப் பார்த்துட்டு உங்களுக்குப் ஃபோன் பண்ணியிருக்கலாம்."

"மே...பி! மே...பி! எனக்கும் அந்த சந்தேகம் இருக்கு. ரெண்டு பேரும் இப்போ டாக்டரம்மாகிட்ட போவோம். விசாரிப்போம். கருக்கலைப்புக்காக வந்தது பூவிழி தானான்னு கன்ஃபார்ம் பண்ணிக்குவோம்."

இன்ஸ்பெக்டர் பலராமன் தலைக்கு தொப்பியைக் கொடுத்துக்கொண்டே எழுந்தார்.

பொலிஸ் ஜீப்பில் அரைமணி நேரப் பயணம்.

மத்தியான வெய்யிலில் அமைந்தகரை உஷ்ணமாய் இருக்க, நெல்சன் மாணிக்கம் சாலையின் வால்பகுதியில் ஆறுமாடிகளோடு முளைத்திருந்த நோபிள் க்ளீனிக்கிற்குள்போய் ஜீப் நுழைந்து போர்டிகோவில் நின்றது.

இருவரும் இறங்கி உள்ளே போனார்கள்.

அவுட் பேஷண்ட் வார்டில் நோயாளி

**கிரைம் சக்கரவர்த்தி**
**ராஜேஸ்குமார்**

களைப் பார்த்துக்கொண்டிருந்த டாக்டர் சந்திராதேவியை பத்து நிமிஷம் காத்திருந்து அவருடைய அறையில் சந்தித்தார்கள்.

பலராமன் சொன்னார்:

"டாக்டர்...நீங்க எனக்கு ஃபோன் பண்ணிச் சொன்ன தகவல் சரியானது தானான்னு கன்ஃபர்ம் பண்ணிக்க வந்திருக்கோம். அந்தப் பெண் பூவிழியோட ஃபாதர் தான் இவர்..."

சந்திராதேவி நீலமேகத்தை ஏறிட்டாள். "ஸாரி... இது ஒரு தர்மசங்கடமான நிலைமை தான். பெண்ணைப் பெத்த எந்த ஒரு அப்பாவுக்கும் வரக்கூடாத நிலைமைதான். உங்கபெண் உயிரோடு இருந்தா நிச்சயமா அந்த உண்மை என்னிக்கும் வெளியே வந்திருக்காது. அவ கொலையான செய்தியை பேப்பர்ல படிச்சேன். உண்மையான கொலையாளியை கண்டுபிடிக்கிற முயற்சியில் பொலிஸுக்கு இந்தத் தகவல் உபயோகப்படலாம்னு நினைச்சுத்தான் இன்ஸ்பெக்டருக்கு ஃபோன் பண்ணிச் சொன்னேன்...."

நீலமேகம் குரல் கம்மக் கேட்டார். "டாக்டர், என்னோட டாட்டர் கருக்கலைப்புக்காக உங்ககிட்ட வந்ததா சொல்றீங்க...? அது எத்தனை மாசத்துக்கு முன்னாடி...?"

"ஆறு மாசம் இருக்கும்."

"ஆறுமாசத்துக்கு முன்னாடி வந்த ஒரு பொண்ணோட முகத்தை நீங்க எப்படி இன்னமும் ஞாபகத்துல வெச்சுக்கிட்டிருக்கீங்க?"

"ஏன்..... ஞாபகம் வெச்சுக்க முடியாதா?"

"டாக்டர்! நீங்க ஒரு நாளைக்கு நூத்துக் கணக்கான பேஷண்ட்களை பார்த்துக்கிட்டிருக்கீங்க. எல்லாருடைய முகங்களையும் ஞாபகத்துல வெச்சுக்க முடியுமா என்ன? அதுவும் ஆறு மாசத்துக்கு முன்னாடி எம் பொண்ணைப் பார்த்ததாக சொல்றீங்க. இது சாத்தியம் தானா...?"

சந்திராதேவி புன்னகைத்தாள்.

"யூ...மே...பி கரெக்ட். பட் சில முகங்கள் இந்த விஷயத்தில் எக்ஷப்சனல். உங்க பொண்ணோட வித்தியாசமான பூவிழிங்கிற பேர்... அந்தப் பேருக்கேத்த மாதிரி அழகான கண்கள். பார்த்ததுமே நெஞ்சுக்குள் ஜெராக்ஸ் எடுத்த மாதிரி பதிந்து விட்ட முகம். ஸோ... பூவிழியை என்னால மறக்க முடியலை. பேப்பர் நியூஸ்ல ஃபோட்டோவையும் பேரையும் பார்த்ததுமே, எனக்கு ஆறு மாசத்துக்கு முந்தி பார்த்த பூவிழியோட ஞாபகம் பளிச்சுன்னு வந்தது..."

"டாக்டர்...! உங்ககிட்ட ஒரு கேள்வி கேட்டா தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே...!"

"நோ...நோ... கேளுங்க..."

"எம்பொண்ணு இங்கே வந்து கருக்கலைப்பு பண்ணிகிட்டதுக்கு ஏதாவது ரிக்கார்ட் உங்ககிட்டே இருக்கா?"

"பொதுவா கல்யாணமாகாத பெண்கள் கருக்கலைப்புக்காக இங்கே வந்தா அவங்க எதிர்காலத்தை முன்னிட்டு நான் எந்த ரிக்கார்ட்லையும் மெய்ன்டெய்ன் பண்றதில்லை. பட், பூவிழி விஷயத்தில் நான் அப்படி இருக்கலை. அவ இங்கே வந்து கருக்கலைப்பு பண்ணிக்கிட்டதுக்கான ரிக்கார்ட் ஒண்ணு கைவசம் இருக்கு..."

நீலமேகம் முகம்மாறினார்.

"என்ன ரிக்கார்ட்?"

"கொண்டு வரச் சொல்றேன்!" சொன்ன டாக்டர் சந்திராதேவி மேஜைமேல் இருந்த அழைப்பு மணியைத் தட்டினாள்.

★★★

**வ**ர்ணா "ஸாரி" சொல்லிவிட்டு எழுந்து கொள்ள வெடினரி டாக்டர் ரத்னவேல் திகைப்பாய் அவளைப் பார்த்தார்.

"ஏம்மா... வரலைன்னு சொல்றே ஒரு உயிரைக் காப்பாற்ற உனக்கு இஷ்டமில்லையா?"

"இஷ்டம் இருக்கு டாக்டர்... ஆனா...?"

"ஆனா... என்னம்மா...?"

"பயமாயிருக்கு..."

"எதுக்கு பயம்...?"

"ஒரு வேளை நான் அந்த அம்மாவைத் தொட்டு உங்களுக்கு குணமாயிடும்னு சொன்ன பின்னாடியும் குணமாகலைன்னு வெச்சுக்குங்க... அந்தம்மாவோட கணவருக்கு ஏமாற்றமாயிருக்கும் இல்லையா? அந்த ஏமாற்றத்தை அவராலேயும் தாங்கிக்க முடியாது. என்னாலேயும் தாங்கிக்க முடியாது."

ரத்னவேல் பதற்றமாய் குறுக்கிட்டுப் பேசினார். "உனக்கு ஏம்மா இப்படியொரு அவநம்பிக்கை...? உன்னோட கைகளுக்கு மரணத்தைத் தள்ளி வைக்கிற வலிமை இருக்கு... அந்த வலிமையை சில நல்ல உயிர்களுக்கு உபயோகப்படுத்தலாமே...?

"நான் தொட்டுப் பேசின பிறகும் அந்த அம்மா உயிர் பிழைக்கலைன்னா...?"

"அதைப் பத்தி யாரும் கவலைப்பட மாட்டாங்க. அந்த அம்மாவோட விதி அவ்வளவுதான்னு நினைச்சு எல்லாரும் மனசைத் தேத்திக்குவாங்க..."

வர்ணா மௌனமாய் ஒரே திசையை வெறித்தப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்னம்மா...பேச்சையே காணோம்?"

"டாக்டர்...எனக்கு இந்த விஷயத்துல எப்படிச் செயல்படறதுன்னு தெரியலை. எதுக்கும் நான் என்னோட வீட்டுக்குப் போய் அம்மாகிட்ட ஒரு வார்த்தை கேட்டுட்டு வந்துடறேன்...

"சரியாப் போச்சு... போ! உன்னோட அம்மாகிட்ட இந்த விஷயத்தைக் கொண்டு போனா அவங்க வேண்டாம்னுதான் சொல்லுவாங்க.... எதுக்கும் நீ பயப்படாம என்கூட வாம்மா... ஒருமணி நேரத்துக்குள்ளே ராஜநாராயணன் வீட்டுக்குப் போய்ட்டு வந்துடலாம். அவரோட மனைவி திலகத்தை ஒரு நிமிஷம்...ஒரே ஒரு நிமிஷம் தொட்டு 'உங்க உயிர்க்கு எந்த ஆபத்தும் இல்லை. நீங்க குணமாயிடுவீங்க'ன்னு சொல்லிட்டு நீ உடனே உன் வீட்டுக்குத் திரும்பிடலாம்."

வர்ணா யோசித்தாள்.

"ப்ளீஸ் எனக்காக..." ரத்னவேல் கெஞ்சும் குரலில் கேட்க சரியென்று தலையசைத்தாள் வர்ணா.

(தொடர்ந்து வரும்)

---

**'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி. சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.**

**நா**ட்கள் கடந்தன. இடையே ஒன்றிரண்டு மலையாளப் படங்களில் நடிக்க அந்த நடிகைக்கு சந்தர்ப்பம் வந்தது. கொஞ்சம், கொஞ்சமாகப் பணம் அந்த வீட்டிற்குப் பரிச்சயமானது. வசதி அவர்களை கொஞ்சம் எட்டிப் பார்த்தது. தேனாம்பேட்டையிலிருந்து மேற்கு சி.ஐ.டி. நகருக்கு அவர்கள் குடிமாறினார்கள்.

ஒருநாள் நான் எடிட்டிங் ரூமில் இருந்த போது, ஒரு நண்பர் அந்த நடிகையின் பெயரைச் சொல்லி, "அந்தப் பொண்ணு தற்கொலை பண்ணிக்கிச்சாமே!" என்றார்.

நான் பதறிப் போய், "யார் சொன்னா?" என்று கேட்டேன்; "பேசிக்கிறாங்க" என்றார் அவர்.

என்னால் அங்கு இருக்க முடியவில்லை. வேலையில் கவனம் செல்லவில்லை. தன் வாழ்க்கையைப் பற்றி அவள் சொல்லி அழுத அந்தச் சோக சம்பவங்கள், நினைவுக்கு வந்தன. கம்பெனி காரில் மேற்கு சி.ஐ.டி. நகரில் இருந்த அந்த நடிகையின் வீட்டிற்கு சென்றேன். நான் கேள்விப்பட்ட செய்தி உண்மையாக இருக்கக்கூடாது என்று என் மனதிற்குள் ஒரு பிரார்த்தனை.

குறிப்பிட்ட தெருவில் கார் திரும்பிய போது அந்த வீட்டை நோக்கி ஏதேனும் அசம்பாவிதம் நடந்திருப்பதற்கான அறிகுறிகள் இருக்கிறதா என்று பார்த்தேன். இல்லை. தெருவும், அந்த வீட்டின் முன்புறமும் அமைதியாக இருந்தன. நான் கேள்விப்பட்ட செய்திக்கு எந்த ஆதாரமும் இல்லாத ஒரு சூழ்நிலை அங்கு வெளிப்பட்டது.

மெதுவாக காலிங் பெல்லை அமுக்கினேன். அந்தப் பெண்ணே வந்தார். அவர் முகத்தில் அதே பழைய களங்கமில்லாத சிரிப்பு.

"ஐயையோ! அண்ணாவா? என்ன திடீர்ன்னு? எப்படி இருக்கீங்க?" என்ற கேள்விகளுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அவரையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

"கொஞ்சம் இருங்க, காபி கொண்டு வர்றேன்" என்று உள்ளே சென்றார். வீட்டுப் பெரியவர்களிடம் நான் வந்திருப்பதைக் கூறினார். அவர்களும் வந்து எட்டிப்பார்த்து, "நல்லா இருக்கீங்களா?" என்று கேட்டனர். அவர்கள் முகத்திலும நான் தேடிய சஞ்சலமோ, சலனமோ இல்லை. எனக்குக் கிடைத்தது ஒரு தவறான தகவல் என்று எனக்குள் ஒரு ஆறுதல் பிறந்தது.

காபி வந்தது. முழுங்கினேன். காபியை மாத்திரமல்ல; என் வருகைக்கான காரணத்தையும் சேர்த்தே முழுங்கினேன்.

"சரிம்மா! சும்மா உன்னைப் பார்த்து விட்டுப் போகலாம்னு வந்தேன்," என்று புறப்பட்டேன்.

என்னை வழியனுப்ப வாசல்வரை வந்த அந்த நடிகை, "ஆமா, என்ன விஷயமா வந்தீங்கன்னு சொல்லவே இல்லையே!" என்றார். "இல்லை சும்மா உன்னைப் பார்க்கணும்னு தோணிச்சு. அதான் வந்தேன்!" என்றேன்.

"இல்ல, நீங்க வந்ததுக்கு வேற ஏதோ காரணம் இருக்கு. அத சொல்லாமலே போறீங்க. நீங்க சொல்லாம போயிட்டீங்கன்னா, என் மனசு கெடந்து தவிக்கும். அதனால தயவு செய்து சொல்லுங்க. என்ன விஷயம்?" என்று கேட்டவுடன், தயங்கியபடியே நான் கேள்விப்பட்ட செய்தியைச் சொன்னேன்.

## பழைய சிரிப்பு

உடனே அவர் சிரித்தார். அது பழைய சிரிப்புத்தான். அந்தச் சிரிப்பில் அதே அழகு இன்னும் இருந்தது. ஆனால் எனக்குள், இந்தச் சிரிப்பில் இருந்த ஏதோ ஒன்று தொலைந்து போயிருப்பதாக ஒரு சந்தேகம். என்ன அது? அது அவள் மனசாக இருக்குமோ? என் கேள்விக்கு உடனே பதில் கிடைத்தது. என் சந்தேகமும் தீர்த்து வைக்கப்பட்டது. அவள் கூறினாள்:

"காலத்தோட போராடி நான் களைச்சுப் போயிட்டேன். இந்த உலகம் எதிர்பார்க்கிற ஒரு சமரச ஒப்பந்தத்தில் கையெழுத்திட என்னை நானே தயார்ப்படுத்திக்கிட்டேன். இப்பல்லாம் கொஞ்சம், கொஞ்சமா என் மனசை மாத்திக்கிட்டேன். கெடச்சிருக்கிற வாழ்க்கையை வாழ்ந்து பார்த்துடலாம்னு முயற்சி பண்ணிக்கிட்டிருக்கேன்.

வாழ்க்கையின் சந்தோஷங்களை அனுபவிக்கணும்ங்கற ஒரு ஆசை வந்திருக்கு. இப்ப எனக்கு கெடைச்சிருக்கிறது தேடின வாழ்க்கை இல்லை; என்னைத் தேடி வந்த வாழ்க்கை. இதுதான் என் விதின்னா அதை யாரால மாத்த முடியும்? நான் சந்தோஷமா இருக்கேண்ணா. சமீபகாலமா தற்கொலை எண்ணம் மனசில வரல. இன்னும் சொல்லப் போனா, நான் இப்ப சாக பயப்படறேன். வாழ்க்கையை முழுசா அனுபவிக்கிறதுக்குள்ள செத்துடக் கூடாதே என்கிற ஏக்கம் கூட என் மனசில இருக்கு."

அந்த நடிகையிடம் ஏற்பட்டிருந்த மாறுதல்கள் எனக்கு ஒரு வகையில் மகிழ்ச்சி. இன்னொரு வகையில்? வேண்டாம், அந்த இன்னொரு வகை வேண்டாம்.

## தேடல்

வாழ்க்கையில் திருப்தி என்றால் என்ன என்று வேறு ஒரு கோணத்தில் தேட ஆரம்பித்துவிட்டார். என்றாலும் அவருடைய ஆரம்ப ஏக்கங்கள் என்ன என்று எனக்குத் தெரிந்திருந்த காரணத்தினால் அவரிடம் நான் ஒரு சத்தியம் கேட்டேன்.

'எந்தச் சூழ்நிலையிலும் உன் மனதில் தற்கொலை எண்ணம் தலைதூக்கக் கூடாது என்று எனக்கு சத்தியம் கொடு!' என்றேன். அவரும் என் கையில் அடித்து சத்தியம் செய்தார். 'நான் தற்கொலை செய்துகொள்ள மாட்டேன்!' என்று

எனக்குள் ஒரு சந்தோஷம். அவர் சாவதை நான் தடுத்து நிறுத்திவிட்டதாக. இன்று நினைக்கும்போது அது எவ்வளவு அறியாமை என்று தோன்றுகிறது. நான் சத்தியம் செய்து கொடுக்க கேட்டதும் அறியாமை. அவர் சத்தியம் செய்து கொடுத்ததும் அதைவிட அறியாமை.

ஒன்றிரண்டு வருடங்கள், நான் அவ்வப்போது அவரைப் பற்றிக் கேள்விப்படுவதுண்டு. மலையாளத் திரையுலகில் பிஸியான நடிகையாக இருக்கிறார் என்று. இடையில் நாங்கள் சந்திக்கவில்லை.


பனகல் பார்க் ஓரமாக நண்பர் லோக நாதன் வைத்திருந்த பழக்கடைக்கு நான் செல்வதுண்டு. வேலை இல்லாத நேரங்களில் அங்கு வியாபாரம் பார்ப்பேன்; கணக்கு எழுதுவேன். ஒருநாள் நான் அந்தப் பழக்கடைக்குச் சென்றபோது, அந்த நடிகை உள்ளே ஆப்பிள் விலையை விசாரித்துக் கொண்டிருந்தார். நான் வந்ததைப் பார்க்கவில்லை. "அதோ, மேல் தட்டுல இருக்கே... அந்த ஆப்பிள், டஜன் என்ன விலை?" என்று கேட்டுக் கொண்டிருந்தார். நான் மெதுவாக அவர் அருகில் சென்று, "எந்த ஆப்பிள் மேடம்?" என்றேன்.

"அதோ அங்கே..." என்று திரும்பிப் பார்த்தார். நான் நிற்பதைப் பார்த்ததும், "ஐயோ, அண்ணா நீங்களா?" என்றார். "எப்படி இருக்கீங்க? நல்லா இருக்கீங்களா? வீட்டுக்கு வரக் கூடாதா?" என்று விசாரித்தார். "நான் பார்க்கவில்லையே தவிர, உன்னைப் பற்றி விசாரித்துக் கொண்டுதான் இருக்கிறேன். மலையாளத்தில் நீ ரொம்ப பிஸியாக இருப்பதாகச் சொன்னாங்க. எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா." என்றேன்.

பழக்கடையில் வாசலில் நின்ற புதிய ஃபியட் காரைக் காட்டி, "இப்பதான் வாங்கியிருக்கிறேன்!" என்றார். டிரைவரைக் காணோம். "செல்ஃப் டிரைவிங்கா?" என்றேன். "ஆமா" என்றார். ஒரு காலத்தில் தனியாக இருக்கவே பயந்த அந்தப் பெண், இன்று தனியாக கார் ஓட்டக் கற்றுக்கொண்டிருக்கிறார். வாழ்வை, வாழ்க்கைப் பயணத்தை தனியாகவே மேற்கொள்ள முடியும் என்று தைரியம் அவர் மனதில் பிறந்திருந்தது.

(அனுபவங்கள் வரும்)

# தர்ம யுத்தம் 04



ஆர்.சி.சக்தி

**இதுவும் ஒரு நடிகையின் கதைதான்**



படிப்பகம்

www.padippakam.com

**ஐரிஷ் விடுதலைப் போராட்டம் 750 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட நெடிய வரலாறு கொண்டது! 1900ம் ஆண்டு ஆரம்பம் வரை ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள் பிரித்தாலும் பிரித்தானியரால் ஏமாற்றப்பட்டனர். இந்நிலையில் 1913ம் ஆண்டு ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை உருவானது. இதுவே பிற்காலத்தில் 1919 இல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது. ஐரிஷ் தொண்டர் படையின் வீரன் தான் பிரீனின் மனதை உலுக்கும் எழுச்சிமிகு உண்மை வரலாறு இது.**

# வீரன் தான் பிரீன்

01

தமிழில் ப.ராமஸ்வாமி

அயர்லாந்து தலைநகரின் பெயர் டப்ளின். அந்நகரின் மத்தியிலிருந்து நாலு மைல்களுக்கு அப்பால் ஆஷ்டவுன் என்ற ரயில் நிலையம் இருக்கிறது.

அது டப்ளினிலிருந்து செல்லும் பெரிய தெருவிலிருந்து சுமார் 200 யார் தூரத்தில் உள்ளது.

இரண்டுக்கும் இடையில், ஒரு கிளை வீதி செல்லும். ஆஷ்டவுன் பெரிய ஊர் அன்று. அங்கு வீடுகளும் சில; வசிப்பவர்களும் மிகச் சிலர். டப்ளின் நகரவாசிகளில் அநேகர் அதைப் பார்த்திருக்க மாட்டார்கள். இவ்வளவு சிறிய ஊரிலே ரயில்



நிலையம் அமைக்கப்பட்டிருந்ததின் காரணம் பந்தய ஒட்டங்களுக்கும் வேட்டையாடுவதற்கும் குதிரைகளை இறக்குமதி செய்யவும் ஏற்றுமதி செய்யவுமேயாகும்.

அப் பக்கத்தில் குதிரைப் பந்தயத்திற்காக அமைக்கப்பட்டிருந்த மைதானங்கள் பல உண்டு. வேட்டையாடுவதற்கு ஏற்ற வனங்களும் அதிகம்.

பந்தயத் தோட்டங்களின் சொந்தக்காரர் சிலருடைய வீடுகளும் அநாதை விடுதிகளும் கன்னிகா மடங்களும் தவிர வேறு பெரிய மாடமாளிகைகளை அங்கே பார்க்க முடியாது.

ரயில் நிலையத்திற்குச் செல்லும் தெருவும் பெரிய தெருவும் கூடுகிற இடத்தில் அந்த விடுதி அமைந்திருந்தது.

ரயீலுக்குப் போகவேண்டியவர்கள் பெரிய தெருவிலிருந்து வலது பக்கம் திரும்ப வேண்டும். அதே இடத்தில் இடது பக்கமாக வேறொரு தெரு செல்லுகிறது.

அந்தத் தெருவில் சிறிது தூரம் சென்றால் புகழ் பெற்ற பீனிக்ஸ் தோட்டத்தைக் காணலாம். அந்தத் தோட்டத்தின் வாயிலில் முற்காலத்தில் எப்பொழுதும் ஒரு போர்ப் படை இருப்பது வழக்கம். பின்னால் அது நின்று போய் விட்டது.

அத்தோட்டத்தினுள்ளே வாசலிலிருந்து 100 யார் தூரத்தில் ஒரு பெரிய மாளிகை இருக்கிறது;

ஆங்கில மன்னனின் பிரதிநிதியாக அயர்லாந்திலுள்ள பதில் ஆளுநர் (Viceroy) சில சமயங்களில் தங்குவதற்காக அது அமைக்கப்பட்டிருந்ததால் அதற்கு 'வைஸ் ரோய் விடுதி' என்று பெயர்.

ஆண்டவனையும் அதனையும் தெருக்களையும ரயில் நிலையத்தையும் பற்றி மேலே விரிவாகச் சொல்லப்பட்டிருப்பதன் காரணம் என்னவெனில் வெகு சீக்கிரத்தில் அங்கு ஒரு போராட்டம் நடப்பதைக் காணப் போகிறோம். ஆதலால் முன்னதாகவே திசைகளைத் தெரிந்துகொள்வது நல்லதல்லவா?

1919 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11 மணியிருக்கும். டப்ளின் நகரிலிருந்து வாலிபர்கள் சிலர் துப்பாக்கி முதலிய ஆயுதங்களைத் தங்கள் உடைகளில் மறைத்து வைத்துக்கொண்டு சைக்கிள் வண்டிகளில் விரைவாக ஆஷ்டவுனை நோக்கி வந்தார்கள்.

எல்லோரும் வந்தால் பிறர் சந்தேகித்து விடுவார்கள் என்ற காரணத்தால் அவர்கள் தெருவில் இருவர் இருவராகப் பிரிந்து வந்தார்கள்.

ஆஷ்டவுனுக்கு வந்தவுடன் அவர்கள் யாவரும் கெல்லியத்திற்குள் சென்று அமர்ந்தார்கள். அவர்கள் மொத்தம் பதினேருபேர்.

மிகுந்த கம்பீரத்துடனும் வானமே இடிந்து விழுந்தாலும் கலங்காத உள்ளத்துடனும் விளங்கிய **தான் பிரீன்** அவர்களுக்குத் தலைவன். அவன் முப்பது வயதுக்குள்ளிட்ட பிராயத்தினன்.

தலைவனுக்குரிய அருங் குணங்களையெல்லாம் அணிகலன்களாய் பெற்றவன்.

ஸினடிரிஸ், ரொபின்ஸன், வேராகன், டாலி, மக்டொன்ன, கியோக், வியனார்டு, கில்காமின், வைரன், ஸாவேஜ் என்பவர்கள் மற்ற பதிர்மார்கள். இவர்களில் ஸாவேஜ்தான் வயதில் மிக இளையவன். அவன் பால்மணம் மாறாத பச்சிளங் குழந்தை. வீர உள்ளமும் தாய்நாட்டின் மீது தணியாத காதலும் பெற்று விளங்குவது போன்ற முகத்தோற்றமுடையவன். அவனுடைய முழுப்பெயர் மார்டின் ஸாவேஜ்.

இந்தக் கூட்டத்ினரைச் சூழ்ந்து வேறு பல தொழிலாளர்களும் குடியானவர்களும் குடித்துக் கொண்டிருந்தார்கள். யாரும் அவர்களைக் கண்டு சந்தேகப்படவில்லை.

அவர்கள் எந்த நோக்கத்துடன் கூடியிருக்கிறார்கள் என்றோ, அவர்கள் அனைவரும் ஒரே கூட்டத்தார் என்றோ எவருக்கும் தெரியாது.

இனிய பானவகைகளை வாங்கிக் குடிப்பதில் நேரத்தைப் போக்கிக்கொண்டிருந்தார்கள். ஒருவரை ஒருவர் அப்பொழுது தான் சந்தித்தவர்களைப் போல் அவர்களது சம்பாஷணை இயற்கையாயிருக்கவில்லை. முழுதும் செயற்கையாகப்பட்டது.

ஆடு, மாடுகள், உழவு, நாற்று நடுகை, நிலங்கள் முதலிய பல விஷயங்களைப் பற்றி அவர்கள் பேசினார்கள். ஆனால் மறந்தும் அரசியலைப் பற்றி ஒரு வார்த்தையும் பேசவில்லை.

எல்லோரும் வெகு ஜாக்கிரதையுடன் இருந்தார்கள். ஏனெனில் பேசியவர்களுக்கு விவசாயத்தில் ஒன்றுமே தெரியாது. ஆனால் சூழ வீற்றிருந்தவர்களோ வாழ்நாள் முழுதும் விவசாயத்தில் திளைத்தவர்கள். வாலிபர்கள். தவறுதலான வார்த்தைகள் வெளிவராது மிகுந்த நிதானத்துடன் பேசினார்கள்.

பேச்சு ஒருபுறமிருக்க, யாவருடைய உள்ளமும் ஒரு விஷயத்தில் ஈடுபட்டிருந்ததாகக் காணப்படவில்லை.

இவர்களிற் சிலர் அடிக்கடி தங்கள் கைக்கடிகாரங்களில் நேரத்தைப் பார்த்தனர். வெளியில் வீதிகள் கூடுமிடத்தில் கண்ணோட்டஞ் செலுத்தி போகிறவர்களையும் வருகிறவர்களையும் நுட்பமாய்க் கவனித்தனர்.

முதலாவதாக டப்ளின் நகரப் பொலிஸ்காரன் ஒருவன் தனது பருத்த உடலைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு பீனிக்ஸ் தோட்ட வாயிலிலிருந்து வெளியே வந்தான்.

அவன் உருவம் பார்க்கத்தக்கதுதான்! திண்ணமான சரீரம், ஈட்டிபோல் ஆகாயத்தில் துருத்திக்கொண்டிருந்த முனையுள்ள தொப்பி, பளபள வென்று ஒளிவிடும் பொத்தான்கள், மாசு மறுவற்ற பூட்ஸ், இடுப்பிலே றிவோல்வர். இத்தனையையும் சேர்த்து ஒன்றாய்க் கருதிப் பார்த்தால் தெரியக்கூடிய உருவந்தான் அந்தப் பொலிஸ் வீரன்.

அவன் வீதியில் நின்றுகொண்டு யாரையும் நடமாடவிடாமல் தடுத்துக்கொண்டிருந்ததால், யாரோ ஒரு பெரிய அதிகாரி அங்கு வருவதற்கு ஏற்பாடு நடப்பதாகத் தோன்றியது.

ஆம்! அன்று ஒரு பெரிய அதிகாரி அங்கு விஜயம் செய்வதாக இருந்தார். அவர்தான் அயர்லாந்தின் பதில் ஆளுநர்.

அவர் அயர்லாந்திலிருந்து தமது தலைநகருக்கு அப்பொழுது விஜயஞ் செய்ய ஏற்பாடாகியிருந்தது.

இந்த ஏற்பாடு பொதுஜனங்களுக்கும் இதர அதிகாரிகளுக்கும் பல இரகசியப் பொலிஸாருக்குமே தெரியாது; பதில் ஆளுநரின் மெய்காப்பாளர் எவர் எவருக்குத் தெரிய வேண்டியது அவசியமோ அவர்களுக்கு மட்டும் அவரது வருகை கடைசி நேரத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது.

பதில் ஆளுநரின் விஜயம் இத்தனை இரகசியமாக்கப்பட்டது ஏன்?

ஏனெனில் காலநிலை அப்படி இருந்தது.

அயர்லாந்து முழுவதும் ஆங்கிலேயர் மீதான துவேஷம் உச்சநிலையை அடைந்திருந்தது. புரட்சிக்காரர்கள் பொலிஸ் அதிகாரிகளை எங்கு கண்டாலும் சுட்டுந் தள்ளி வந்தனர்.

சாதாரண வெள்ளையர்களில் இவ்வளவு வன்மம் செலுத்தி வந்த அவர்கள் அயர்லாந்தின் அரசாங்கத் தலைவரான பதில் ஆளுநர் மீது அது தப்ப முடியுமா?

அப்பொழுதிருந்த பதில் ஆளுநர் அயர்லாந்தில் பிறந்தவராயினும் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்காகவே உழைத்தவர். தாம் புறப்படும் நேரத்தையும் செல்லும் பாதையையும் முன்கூட்டித் தெரிவிப்பார்.

கடைசி வேளையில் எல்லாவற்றையும் மாற்றிவிடுவார். ரயிலில் போவதாகச் சொல்லி மோட்டாரில் போய்விடுவார். பல வேஷங்கள் தரித்துப் பிறர் அறியமுடியாமல் செல்வார்.

ரஷ்யச் சக்கரவர்த்தியான ஜார் அரசன் இதுபோல்தான் செய்வது வழக்கமாம். ஜாருக்கு நாடெங்கும் பகை, பிரஜைகள் எல்லோரும் விரோதிகள். அவன் உயிரை யார் எந்த நேரத்தில் பழிவாங்குவர் என்பது நிச்சயமில்லாமல் இருந்தது.

அதுபோலவே அயர்லாந்து ஜனங்கள் தங்கள் தேசத்தில் ஏற்பட்டிருந்த ஆங்கில அரசாங்கத்தைப் பகைத்து வெளிப்படையாகக் கலகஞ் செய்யக் கிளம்பி விட்டதால் லோர்ட் பிரெஞ்ச் மிகுந்த கவனத்துடன் நடமாட வேண்டிய அவசியம் நேர்ந்தது.

அவர் வருகை மிகவும் அந்தரங்கமாக வைக்கப்பட்டிருந்தபோதிலும், அது சம்பந்தமான இடம், காலம் முதலியவை, எவர்களுக்குத் தெரியக் கூடாதோ, அவர்களுக்கு மட்டும் எப்படியோ தெரிந்திருந்தது.

கெல்லியின் விடுதியில் தங்கிக் கொண்டிருந்த பதினொரு பேர்களுக்கும் பகல் 11-40 மணிக்கு ஆஷ்டவுண் ரயில் நிலையத்தில் பதில் ஆளுநர் தங்குகிறார் என்பது தெரியும். அதற்காகத்தான் அரை மணி நேரத்திற்கு முன்னதாகவே அவர்கள் புறப்பட்டு வந்து விடுதியில் காத்திருந்தனர்.

பதில் ஆளுநரின் ரயில் வருவதற்குச் சில நிமிஷங்களுக்கு முன்னால் துப்பாக்கிகள் ஏந்திய பட்டாளத்தார் நான்கு இராணுவ மோட்டார் லொறிகளில் பீனிக்ஸ் தோட்ட வாயிலிருந்து வெளியேறி கெல்லியின் விடுதிப் பக்கமாக ரயில் நிலையத்திற்குச் சென்று அணிவகுத்து நின்றனர்.

இவர்களைத் தவிர வேறு பல ஆயுதந்தாங்கிய டப்ளின் நகரப் பொலிஸார் பீனிக்ஸ் தோட்ட வாயிலிருந்து வைஸ் ரோய் விடுதி வரையிலும் வீதியைப் பாதுகாத்து வந்தனர்.

குறித்த நேரத்தில் ரயில் வண்டி ஆஷ்டவுன் ஸ்டேஷனில் வந்து நின்றது. இரண்டு மூன்று நிமிஷங்கள் கழிந்தன. ஸ்டேஷன் வீதியில் மோட்டார் கார் கிர்...கிர் என்று வேகமாய் ஓடிவரும் சத்தம் கேட்டது.

விடுதியிலிருந்து பதினொரு பேர்களும் மெதுவாக வெளியே வந்து முன்னதாகவே ஏற்பாடு செய்திருந்தபடி, தமக்கு உரிய இடத்தில் போய் நின்றனர்.

அவ்விடுதிக்குப் பின்னால் நிறுத்தப்பட்டிருந்த ஓர் உரவண்டியின் பக்கம் தான் பீரினும், கியோக்கும், ஸவேஜும் சென்று அதை இழுத்தனர். அது மிகக் கனமான வண்டியாதலால் மிகவும் சிரமப்பட்டு இழுக்கவேண்டியிருந்தது.

அவர்கள் அதைப் பலமாக இழுத்து ஸ்டேஷன் வீதிக்குக் கொண்டு சென்றனர். அப்பொழுது முதன் முதலில் அங்கு வந்து நின்றுகொண்டிருந்த பொலிஸ்காரன் கூக்குரல் போட ஆரம்பித்தான். "யார் அங்கே? கவர்னர்- ஜெனரல் வரப்போகிறார். விலகு! விலகு!" என்று அவன் கூறினான்.

ஆளுநரை எதிர்பார்த்து அவர்களும் அவர்களது துப்பாக்கிகளும் தயாராகின

(பயணம் ...தொடரும்)

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.** 26

# அரங்கம் அந்தரங்கம்

கவியரசு கண்ணதாசன்

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

~கண்ணதாசன்~

அந்த நேரத்தில்தான் கதவு தட்ட . . . தும் வனஜாட்சி உ..ளே நுழைந்ததும்!

ஒரு பெரிய தொழில் அதிபரின் பங்களா.

இரண்டு அறைகளில் இரண்டு பேர்.

அதைப் பார்வையிட வந்தவள் போல் வனஜாட்சி, கற்பகத்தின் கண்களுக்குத் தோன்றினாள்.

அவளை உள்ளே அழைத்து உட்கார வைத்தாள்.

அந்த மர்ம மாளிகையின் முழுக் கதையும் தெரியாமல் வனஜாட்சி அழுதபடி தன் நிலையைச் சொல்ல ஆரம்பித்தாள்.

அவளை என்ன செய்வது என்று புரியாத நிலையில் கற்பகம் நின்றபோது, தான் இருந்த அறையில் இருந்தபடியே சந்திரசூரியன் அவளுக்கு ஜாடை காட்டினார்.

தன் அறைக் கதவைத் திறந்தபடியே கமலநாதன் 'கற்பகம்' என்று அழைத்தார்.

★★★

வளர்க்கும் முறையில் வளர்த்தால், பெண்ணைத் தெய்வமாக வளர்த்து விடலாம். அதனதன் போக்கில் விட்டுவிட்டால் சமுதாயச் சூழ்நிலை அதை உருப்படவிடாது.

இன்றைய சமுதாயம்-

போலி நாகரிகத்தின் சுரங்கம். அந்த நாகரிகமோ எளிதில் தீப்பிடிக்கக்கூடிய வெடி மருந்து-

லலிதா வளர்க்கப்பட்ட முறையே, அவள் கெடுக்கப்படுவதற்குக் காரணமாக இருந்தது.

எப்போது வீட்டைவிட்டு ஒருவனோடு ஓடுவதற்கு ஒரு பெண்ணுக்குத் தைரியம் வந்து விடுகிறதோ, அப்படியே அடுத்தடுத்த காரியங்களுக்கும் தைரியம் வந்துவிடுகிறது.

ஓடிப்போன லலிதா, பம்பாய்க்கு வரும்வரையில் கணவனுக்கு மனைவியாகவே தன்னை எண்ணி இருந்தாள்.

ஆனால் அவள் வந்த முறை அவளைக் குடிப்பதற்கும் உற்சாகப் படுத்திற்று. குடித்துவிட்ட கோலம் அடுத்த கட்டத்திற்கும் அழைத்துச்



சென்றது.

சாதாரண நேரத்தில் இன்னொருவன் தொட்டிருந்தால் சண்டை போட்டிருப்பாள். தன்னை அறியாத நிலையில் மதன்லாலுக்கு அவள் உடன்பட்டு விட்டாள், அதுவும் விஜயா வேதாசலம் பக்கத்துக் கட்டிலில் படுத்திருக்கும் போதே, மதன்லாலோடு உறவு கொண்டாள்.

எதை அவள் உணர முடிந்தது?

காட்டு மிருகங்களின் வெறித்தனத்துக்கு அந்த முறை பாதுகாப்பாக இருந்தது.

இது சரிதானா? முறைதானா? நாளை குமாரசாமிக்கும் தனக்கும் உள்ள உறவு என்னவாகும்? என்றெல்லாம் சிந்திக்கக்கூடிய நிலையில் அவள் இல்லை.

குமாரசாமியின் பரிபூரண ஆசிர்வாதம் கிடைத்து விட்டது போலத்தான் அவள் குடிக்கத் தொடங்கி இருந்தாள். அதனால் முன் கூட்டியே பயம் அகன்று விட்ட நிலை.

சொல்லப்போனால் மதன்லாலோடு ஆடிக் கொண்டிருக்கும்போதே, 'இந்த வாழ்க்கையும் ஒரு சுகமான வாழ்க்கை' என்று அவளுக்குத் தோன்றிற்று.

அப்படியே தான் வேறொரு பெண்ணுடன் ஆடிக்கொண்டிருந்த குமாரசாமிக்கும் தோன்றிற்று.

பல சுவைகளுக்கு மனம் இடங்கொடுத்து விட்டால் பின் அதற்கு முடிவே இருக்காது.

மனைவியைத் தவிர வேறொருத்தியைத் தொட்டறியாதவன் சில நேரங்களில் அந்த ஆசைப்பட்டாலும், அச்சம் அதிகமிருக்கும். அதனால் தவறு செய்யாமலேயே அவனுடைய காலம் போய்விடும்.

கணவனைத் தவிர வேறொருவனைத் தொட்டறியாதவள் சில நேரங்களில் நெஞ்சத்தால் அந்தச் சபலங்களுக்கு ஆளாவாள். ஆனால் பயமும் நடுக்கமும் அப்படியொரு சந்தர்ப்பம் அவளுக்குக் கிடைகாமலேயே செய்து அவளைக் காப்பாற்றிவிடும்.

காமத்தில் தைரியமில்லாதவர்களே உத்தமர்களாக வாழ்கிறார்கள். அவர்களது பலவீனமே அவர்களை நல்லவர்களாக வைத்திருக்கிறது.

மிகவும் தைரியமானவர்கள் கொஞ்ச நேரம் யோசித்து பளிச் சென்று விழுந்துவிடுகிறார்கள்.

'ஒரு மாடு மேயட்டும்' என்று தோட்டத்துச் சுவரை உடைத்து விட்டால், எந்த மாடும் உள்ளே நுழைவதற்கு வழி ஏற்பட்டு விடுகிறது.

கட்டுப்பாடு காக்கப்படும் வரைதான். ஒரு முறை தளர்த்திவிட்டு மீண்டும் அதை இறுக்கிக்கொள்ள முடியாது.

கற்பு என்பது நிரந்தரமானது. 'வாரத்தில் மூன்று நாள்' என்று அதை விரதமாக்க முடியாது.

ஒழுக்கக் கேட்டை ஒப்புக்கொண்டு விட்ட ஒரு உள்ளம் பழைய ஞாபகத்தில் அதற்காக அழுதாலும் மீண்டும் சந்தர்ப்பம் கிடைக்கும் போது வழுக்கி விழத்தான் செய்யும்.

மலபார் ஹில் பங்களாவில் ஒரு பழக்கம் உண்டு. இரவில் யார் யாரோடு எந்த அறையில் இருக்கிறார்கள் என்பதைக் கண்டு பிடிக்க முடியாது. அதிகாலை ஐந்து மணிக்கு அவர் எழுப்பி விடப்படும்போது தான் ஒவ்வொருவரும் தன் மனைவி யாரோடு இருந்தாள் என்பதை தெரிந்து கொள்வார்கள். அதற்காக அவர்கள் வருத்தப் படுவதும் இல்லை; வெட்கப்படுவதும் இல்லை. அந்தச் சம்பிரதாயத்துக்கு முழுக்க ஆட்பட்டுவிட்டார்கள் அவர்கள்.

ஒருபடி மேலே போய்த் தன் மனைவியோடு இருந்த ஆடவனைப் பார்த்து, 'நன்றாக இருந்தீர்களா?' என்றும் குசலம் விசாரிப்பார்கள்.

குமாரசாமியோடு இருந்த பெண்ணும் ஒரு பெரும் பணக்காரனின் மனைவி. மனைவி என்றால் இந்த மாதிரி இடங்களில் அவர் பழகுவதற்கு வைத்திருந்த மனைவி! அவள் பிறந்ததும் பெரிய குடும்பத்திலேதான். வாழ்க்கையை இப்படி அனுபவிப்பதற்காகவே அவள் இந்தப் பணக்காரரிடம் வந்து சேர்ந்தாள்.

குமாரசாமியை அவளுக்குப் பிடித்து விட்டது. தான் ஒரு தனி பங்களாவில் இருப்பதாகவும், மதியம் அங்கே சாப்பிட வரவேண்டும் என்றும் தன்னுடைய விசிட்டிங் கார்டை அவனுக்குக் கொடுத்தாள் அவள்.

மதன்லாலோ தன் கழுத்தில் அணிந்திருந்த பத்து பவுன் சங்கிலியைத் தூங்கிக் கொண்டிருந்த லலிதாவின் கழுத்தில் அணிவித்தார்.

பிரக்ஞை இல்லாமல் தூங்கிக் கொண்டிருந்த லலிதா கதவு தட்டப்பட்டபோதுதான் கண் விழித்தாள்.

(அந்தரங்கம் வரும்)

www.padippakam.com

# அவள் ஒருத்தி

அக்கிராமத்தின் ஏதோ ஒரு பகுதியில் விமானம் குண்டுத்தாக்குதலை வெற்றிகரமாக முடித்துவிட்டு சென்ற மறுகணமே, புத்தில் இருந்து கறையான்கள் வெளியேறுவது போன்று மக்கள் தங்கள் வீடுகளில் இருந்த பங்கர்களிலிருந்து வெளியேறி-விமானம் தாக்கிவிட்டுப்போன அழிவுகளை காண்பதற்காகச் சென்று கொண்டிருந்தனர்.

அம் மக்களோடு அவனும் சைக்கிளில் போய்க்கொண்டு அருகில் போனவரிடம் கேட்டான் "அண்ணே, விமானம் எங்கு குண்டு போட்டது?"



**நெடுஞ்செழியன், வன்னி**

என்று. "அது தம்பி அந்த சந்தியில் இருக்கின்ற தையல் நிலையத்திற்காம்!"

"சேதம் எப்படியண்ணே?"

"சுட்டடம் முழுவதும் அப்படியே சிதறிவிட்டாதாம். அதால அங்கு வேலை செய்த ஆட்கள் எல்லாம் முடிந்திருக்க வேணும் என்று நான் நினைக்கின்றேன். எதற்கும் அங்கு போய் பார்த்தால்தான் சரியான சேதம் புரியும்!" எனக் கூறிய அப்பெரியவர் சென்றதையும் அறியாமல் இனம் புரியாத சோகம் அவனை ஆட்கொண்டது.

அந்தத் தையல் நிலையத்தில் 50 பெண்களும் 32 ஆண்களும் வேலை செய்கின்றார்கள் என முன்னரே அவன் அறிந்திருந்தான். 'ஐயோ என் கவிதா' என மனதிற்குள்ளேயே கத்தியவன். சம்பவம் நடைபெற்ற இடத்தினைச் சென்றடைந்தவன்- கட்டடம் என்று சொல்வதற்கு ஒரு தடயத்தினைக்கூட காணவில்லை. எல்லாம் இடிந்து உடைந்தும் நிலத்தினைப் போர்த்திருந்தன- மனித தலை, துண்டிக்கப்பட்ட கை, கால்கள், சதைத் துண்டுகள் என எல்லா இடமும் சிதறிக் கிடந்தன. சாவின் தறுவாயில் அடிபாடுகளுக்கு இடையில் முனகல் சத்தங்களும் கேட்டபடி இருந்தன. மீண்டும் விமானம் வந்து தாக்கலாம் என எண்ணி இறந்தவர்களின் உறவினர்களைவிட மற்றவர்கள் கெமராக் காட்சியினை உள்வாங்கியவர்கள்போல் சென்றனர்.

"அந்தப் பங்கருக்குள்ள இருந்த இரண்டு பொடியளும் ஒரு பொம்பிளைப்பிள்ளையும் மட்டும்தான் உயிரோடு தப்பியவர்கள்!" என முக்கால்வாசி இடிந்து கிடந்த அந்த பங்கரைக் காட்டி ஒருவர் சொல்வதைக் கேட்ட அவன் உடனே அவரிடம் சென்று, "அண்ணே தப்பியவர்களின் பெயர்கள் ஏதாவது தெரியுமா?" என சோகமான குரலில் கேட்டான். "இல்லை தம்பி பெயர் தெரியவில்லை. அவர்களை உடனே ஏற்றிக்கொண்டு பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் விட்டார்கள்."

'உயிர் தப்பிய அப்பெண் என் கவிதாவாக இருக்கக்கூடாதா' என அவன் மனம் ஒரு அற்ப ஆசையினால் ஏங்க வைத்தது. சைக்கிளில் விமானம் போன்று பறந்தவன் அரை மணித்தியாலத்திற்குள் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையை வந்தடைந்து. அங்கு நின்றவர்களை விசாரித்து, உள் அறைக்குச் சென்றவன். அப்படியே சிலையாக விக்கித்து நின்றான். புழுதி படிந்த முகத்துடனும் சோர்வான பயத்துடனும்- உயிர்த்தப்பிய அவன் காதலியான கவிதா கட்டிலில் படுத்திருந்தாள். ●

# அநாதரவு

பன்னிரெண்டு மணி வெய்யில் உடலைச் சுட்டெரித்துக் கொண்டிருந்தது. அதனையும் பார்க்காமல் தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார் ராமசாமி. உணவுக்காக தினமும் பாதையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வன்னி மக்களில் அவரும் ஒருவர். வயிறு பசியைத் தணிக்க முடியாமல் எரிந்து கொண்டிருக்கும் நிலையில் உடலை எரித்து உழைப்பது அவருக்கு ஒன்றும் பெரிதாகப் படவில்லை.

அலையும் மனங்களோடு நிம்மதியைத் தேடிச் சோர்ந்து போயுள்ள முகங்களே இங்குள்ள மக்களின் நிலை. ஏதோ வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்காக வாழவில்லை. இளம் சந்ததிக்காகவாவது வாழ நினைக்கிறார்கள். அந்த வகையில் ராமசாமியும் வாழ்வது தன் பேரனுக்காகவே.

"தாத்தா.. ஸ்கூல் முடிஞ்சி... வீட்டுக்குப் போவமா?.." அவரது ஆறு வயதுப் பேரப்பிள்ளை புத்தகமும் கையுமாக நின்று கூப்பிட்டான். இடுப்பில் கட்டியிருந்த துவாய்த் துண்டை அவிழ்த்து வியர்வையை ஒற்றிவிட்டு உதறித் தோளில் போட்டார். குழந்தையை கையில் பிடித்துக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தார்.

"ராமசாமியண்ணே... உணவு லொறி வந்திட்டுது.... உதோட சனங்களும் வந்திட்டாங்கள்..." வழியால் போன ஒருத்தன் வாய் நிறையச் சிரிப்புடன் சொல்லி விட்டுப் போனான்.

"ஏன் தாத்தா... எங்கிருந்து உணவு வருது...? சனங்களோட அம்மாவும் வருவாங்களா?..." அந்த மழலையின் ஏக்கமான கேள்விக்கு அவரால் பதில் சொல்ல முடியவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து வீடு வாசல்களையெல்லாம் இழந்து அகதிகளாய் வன்னி மண்ணுக்கு வரும் வழியில் துப்பாக்கிச் சூட்டுக்கு மகளைப் பலி கொடுத்தவர் ராமசாமி. அப்போது கைக்குழந்தையாகவிருந்த அந்தப் பேரப்பிள்ளையை தாயாகவும், தந்தையாகவுமிருந்து வளர்த்தெடுத்ததை யிட்டு அவர் பெருமைப்பட்டாலும், அவனிடம் 'உன் அம்மா செத்துப் போயிட்டாள்' என்று சொல்வதற்கு மனசு வரவில்லை. 'அம்மா சாமிட்ட போயிருக்கையா... கொஞ்ச நாள்ல வந்திடுவா?' என்றுதான் இன்று வரை சமாதானப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

"துவாய் மண்ணுல விழுந்திட்டுது... தொலஞ்சா கடையில வாங்க முடியாதே



**அ.கோகுலதீபன்**

தாத்தா..." விழுந்த துவாயை எடுத்துக் கொடுத்தான். அவனது மழலைத் தமிழிலும் உதிர்த்த வார்த்தையில் உள்ள உண்மை அவருக்கு யதார்த்தமாகப் பட்டது.

'துவாயை மட்டுமா?... தொலைக்கக் கூடாத எதையெல்லாமோ நான் தொலைச்சிப் போட்டன்' மனதுக்குள் எண்ணிக் கொண்டாரே தவிர அவரால் பேச நா எழவில்லை.

மா, சீனி, அரிசி என்று அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வந்து சேர்ந்ததால் ஊர்ச் சனங்களெல்லாம் தேவையானவற்றை வாக்குவதற்காக ஓடித்திரிந்து கொண்டிருந்தார்கள். ராமசாமியும் பன்பை ஒன்றை எடுத்துக் கொண்டு அரிசி வாங்கப் போனார்.

ராமசாமி வீடு திரும்பிக் கொண்டிருக்கும்போது திடீரென்று எங்கிருந்தோ ஏவப்பட்ட ஷெல்கள் ஊருக்குள் விழுந்து வெடித்தன. எல்லோரும் தாம் வாங்கிய சாமான்களைத் தூக்கியெறிந்துவிட்டு உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடினார்கள். ராமசாமி தன் பேரப்பிள்ளையை எண்ணிக் கொண்டு கதறியோடினார்.

வீட்டுப் படலையை அண்டியதும் அவருக்காகக் காத்திருந்தது போல குண்டொன்று அவரைப் பதம் பார்த்தது. இரத்த வெள்ளத்தில் அவ்விடத்திலே செத்துப் போனார் ராமசாமி. நித்திரையிலிருந்த அவரது பேரன் சத்தம் கேட்டு அழுதபடி வெளியே வந்தான்.

"தாத்தா... என்ன தாத்தா...? எழும்புங்கோ எனக்குப் பயமாயிருக்கு தாத்தா..." கையைப் பற்றிக் கொண்டு அழுது கொண்டிருந்தது அந்தப் பிஞ்சு. அதைத் தேற்றக்கூட அருகில் யாரும் இருக்கவில்லை. அவனை அந்த மண் மட்டுமே தாங்கியிருக்கிறது. ●

# கடன்

வீடே அமர்க்களமாக காட்சியளித்தது. விடிந்தால் கல்யாணம். 'மாப்பிள்ளை கருப்பா, சிவப்பா? தொழிலா, உத்தியோகமா? அரசாங்க வேலையா, சாதாரண வேலையா? கலகலப்பானவரா, சிடுமுஞ்சியா? சிக்கனக்காரரா, செலவாளியா? கட்டுமஸ்தானவரா, ஒழுக் குச்சியா? அழகானவரா, சுமாரானவரா? வளர்த்தியானவரா, குள்ளமானவரா, மொத்தத்தில் எனக்குப் பிடிக்குமா?' என மூளையைக் குழப்பியவாறு தூக்கம் வராமல் தவித்தாள் ரேவதி.

தனியார் நிறுவனமொன்றில் கிளார்க்



**முபீதா சக்காய் மீராவோடை**

காக வேலை பார்க்கும் ரேவதி, கூடப் பிறந்த நால்வரில் கடைசியானவள். தாய், தந்தை சொல்லுக்கு எப்பொழுதும் மதிப்பளிப்பவள். தன் பெற்றோரை தெய்வமாகவே மதித்தாள். அதனால் தான் திருமணப் பேச்சில் தலையிடாமல் "நீங்கள் யாருக்கு கழுத்தை நீட்டச் சொல்கிறீர்களோ, அவருக்கு நீட்டுவேன். மாப்பிள்ளையைக்கூட திருமணத்தன்றே பார்த்துக் கொள்வேன்" என்று, மாப்பிள்ளையின் ஃபோட்டோவைப் பாராமலேயே திருப்பிக் கொடுத்த மகளை ஆச்சரியத்துடன் பார்த்து கண்ணீர் சிந்தினர் ரேவதியின் பெற்றோர்.

மணமேடையில் மாப்பிள்ளையைக் கண்டதும் தான் கற்பனை பண்ணியதைவிட அழகாகவே இருந்தான். திருமணமும் முடிந்து பத்துநாட்கள் கடந்திருந்தன. மறுநாள் ஆபீஸ் போக தயாராகிக் கொண்டிருந்தாள். ஸ்டிக்கர் பொட்டை இரண்டு புருவங்களும் சந்திக்கும் இடத்திற்கு சற்று மேல் வைத்து அழுத்தினாள்.

"ரேவதி!" மோகன் குரல் கொடுத்தான். திரும்பியபோது சோபாவில் உட்கார்ந்து ஷூவை துடைத்தபடியே கண்களை மட்டும் தூக்கிப் பார்த்தான். மோகன் இ.மி.சபையில் வாகன ஓட்டுனராக வேலை பார்க்கிறான்.

"என்ன?" என்றாள் ரேவதி முறைப்பதைப் போல். அவன் என்ன சொல்லப் போகிறான் என்பது அவளுக்குத் தெரியும். ஒருவாரமாக இதைத் தானே சொல்லிக் கொண்டிருக்கிறான். "லோன் பணம் இன்னிக்கு கைக்குக் கிடைத்தவுடனே வீட்டுக்கு சீக்கிரமா வந்திடு. அந்தப் பணத்துலதான் நம்ம கல்யாணத்துக் கடனை அடைக்கணும். பணம் கொடுத்தவன் படுத்துறபாடு தாங்க முடியல. முதல் வேலையா கடனை அடைத்திட்டுத்தான் மறுவேலை பார்க்கணும்!" என்று சொன்ன கணவனை எரிச்சலாய்ப் பார்த்தாள். டிரெஸ்ஸிங் முடித்துக் கொண்டு வந்தபோது மாமியும் அதே பாட்டைப் பாடினாள்.

"ரேவதி! பணம், பத்திரம். வேண்டுமானா ஆட்டோ பிடித்து வந்திடு. பஸ்ல எவனாவது எடுத்திடப் போறான்." பணத்தின் மேல் மட்டும் அக்கறைப்படும் மாமியாரை ஒரு புழுவைப் போல் பார்த்துவிட்டு கிளம்பினாள் ரேவதி.

மாலை வந்தது. ரேவதி வரவில்லை. ஹோலில் ஷூவைக் கழட்டும் போதே மோகன் குரல் கொடுத்தான்.

"அம்மா, ரேவதி வந்துட்டாளா?"

"இன்னும் இல்லியே"

அம்மா முகம் சோகத்தில் சிக்கும் நிலையில் இருந்தது. டிரஸ்ஸை மாற்றிவிட்டு அம்மா தந்த தேநீரை உறிஞ்சியபடி சோபாவில் அமர்ந்தான். 'தினமுரசு' பேப்பரை பார்த்தபடியே, வானொலியை திருகிவிட்டான்.

செய்தி வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. "ஏன், இன்னும் வரல, ஒருவேளை பணத்தை பஸ்ல எவனாவது எடுத்துட்டானா?" என்று அபசகுணமாய்ப் பேசும் அம்மாவை முறைத்தான். "உன் வாயிலே நல்லதே வராதா?" என லேசாய்த் திட்டினான்.

வானொலியில் செய்தியும் வாசித்து முடிய ரேவதி வந்து சேர்ந்தாள். அவளுடன் இணைந்து சோர்வு களைப்பு எல்லாம் வந்தன. அம்மாவுக்கும், மகனுக்கும் உயிரே வந்தது. மாமியார் அக்கறையோடு விசாரித்தாள். "ஏம்மா! லேட்? துடித்துப் போயிட்டேன்." உள்ளுக்குள் வெடித்தாள் ரேவதி. சோபாவில் அமர்ந்து கண்ணை மூடிக் கொண்டாள்.

"பணம் எங்கே? எடு!" என்றான் மோகன்.

"எதுக்குப் பணம்?" விழி திறந்து கேட்டாள்.

"நம்ம கல்யாணக் கடனை அடைக்க!"

"நான் அடைத்திட்டேன்!" புரியாமல் மோகன் விழிக்க, ரேவதி தொடர்ந்தாள்,

"வெறும் தாலி மட்டும் வாங்கி, கம்பீரமா வந்து கல்யாணம் பண்ணிகிட்ட உங்களுக்கே கடன் இருக்குதுன்னா, கல்யாணம் பண்ணி, வரதட்சணை தந்து, முப்பது பவுன் நகை போட்டு, சீர் செய்து வீடியோ, ஃபோட்டோ என அமர்க்களப்படுத்தி.... ஓ! எவ்வளவு செலவு எங்கப்பாவுக்கு. அவர் தலையில் எவ்வளவு 'கடன்' ரிட்டையர் வாத்தியார் அவர். எப்படி சமாளிப்பார்? என்னை வளர்த்து, பாடுபட்டு படிக்க வச்சி, வேலை வாங்கி தந்திருக்காரே.... அந்தக் கடனை அடைக்காம, இந்தப் பணத்தை உங்களுக்குத் தர்றது நியாயமில்லேன்னு தோணிச்சி. அதான் எங்கப்பாவுக்கு தெரியாமலேயே அவர் கடன் வாங்கின இடத்திலெல்லாம் போய் பணத்தை கொடுத்துட்டு வாரேன். என் கடனை என் பணத்துல அடைத்திட்டேன். உங்க கடனை நீங்கதான் அடைக்கணும்."

சொல்லி விட்டு உள்ளே சென்ற ரேவதியை அதிசயமாய்ப் பார்த்தனர் தாயும், மகனும். ▭

# காதல் கோட்டை

கமலிக்கு இந்த கொழும்பு நகரம் புதியதாக இருந்தாலும், இங்கு வந்த இந்த ஒரு கிழமைக்குள் அந்த விடுதியும், அதனைச்சுற்றியுள்ள வீதிகளும் அவளுக்கு நன்றாகப் பழக்கமாகி விட்டிருந்தன. கமலி கொழும்புக்கு வந்தது ஏதோ ஆசிரியர் நியமனத்திற்கான நேர்முகப்பரீட்சைக்குத் தான். ஆனால் அவளின் எண்ணமெல்லாம் சிவாவுடன் எப்படியாவது கதைத்துவிட வேண்டும் என்பதுதான்.

சிவா சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னால் கமலியை உயிருக்குயிராய்க் காதலித்தவன். காலத்தின் கட்டாயத்தால், நாட்டின் போர்க்கால சூழ்நிலையால் அவளிடமிருந்து கண்ணீரோடு விடைபெற்று கனதூரம் பறந்து லண்டனுக்குப் போய் விட்டவன்.

நாட்கள் நகர்ந்தன. நாட்டின் சீரற்ற போக்குவரத்து, தபால் சேவைகளுக்கிடையிலும் சிவாவின் கடிதங்கள் கமலியின் கைகளில் தவழ்ந்தன. கமலியின் மனதிலும் ஆசைகள் வளர்ந்தன. அவளை லண்டன் கூப்பிட ஒழுங்குகள் செய்கிறேன் என்று எழுதியவனிடமிருந்து நாட்கள் செல்லச் செல்ல கடிதத்தையே காணவில்லை. ஆனால் கமலிக்கு மட்டும் அவன்மீதுள்ள நம்பிக்கை குறையவில்லை.

'பாவம் சிவா.. என்ன பிரச்சனையோ... கஷ்டப்பட்டு வேலை செய்யிறதாம்... கடிதம் எழுத நேரம் கிடைக்கிதோ.. இல்லை போட்ட கடிதம்தான் போக்குவரத்து இல்லாததால எங்கயாவது தேங்கிக்கிடக்குதோ தெரியாது.. சிவா ஒருநாளும் என்னை ஏமாத்த மாட்டுது...' என்று அடிக்கடி தனக்குள் நினைத்துக்கொள்ளுவாள் கமலி.

"பிள்ளை.. நீ இப்பிடியே அவன நினைச்சுக் கொண்டிருந்தா எங்களுக்கும் வயசாயிடும், உனக்கும் வயசாயிடும்...!" கமலியின் அப்பா வேதனையோடு சொன்னபோது "ஏனப்பா... அப்பிடிச்சொல்லுறீங்க... இப்ப, நான் ரீச்சிங் இன்ரவியுக்கு கொழும்புக்கு போகைக்க எப்பிடியும் சிவாவோட கதைச்சுப் போட்டுத்தான் வருவன்... வந்து உங்களுக்கு நல்ல செய்தி சொல்லுவன்..." என்று அவரை சமாதானப்படுத்திவிட்டாள். "ஏதோ பிள்ள...உனக்கொரு நல்லது நடக்கவேணும், நீ சந்தோசமாக இருக்கவேணும் எண்டது தான் எங்கிட ஆசை..." அவர் கண்கலங்கியபடி சொல்ல "நீங்க பாருங்க அப்பா.. நிச்சயம் நடக்கும்... உங்கிட ஆசைப்படி நான் சந்தோசமா இருப்பன்..." நம்பிக்கையோடு கூறியவள் மறக்காமல் தான் கொழும்பு வருவதாகவும் கடிதமும் எழுதினாள்.

கமலி கொழும்புக்கு வந்து ஒரு கிழமையாகிவிட்டது. ஆசிரியர் நியமனத்திற்கான நேர்முகப்பரீட்சையிலும் தேர்வாகிவிட்டாள். ஆனால் வாழ்க்கையில்...! சிவாவிடமிருந்து



**நெடுந்தீவு குகன்**

இன்றுவரை ஒரு தகவலும் இல்லை.

'எப்ப ஃபோன் பண்ணினாலும் ரூமில சிவா இல்லை என்கிறார்கள்.. நம்பரையும் வாங்கி வந்த உடன் சொல்லுறதாகவும் சொன்னார்கள்.. ஆனால்... சீ... எப்பிடியும் சிவா ஃபோன் எடுக்கும்... வேலை அலைச்சல்ல எங்க திரியுதோ தெரியாது.... பாவம்..." தனக்குள் நினைத்துக்கொண்டவள் கையிலிருந்த மணிக்கூட்டில் நேரத்தை பார்க்கிறாள்." கோயிலுக்கு போகவேணும்.. இப்ப போனா சனம் இருக்காது..." கைப்பையை கையிலெடுத்துக்கொண்டு இறங்குகிறாள்.

ராகினி அக்கா இன்னும் கவலையில்லாமல் தூங்கிக்கொண்டிருந்தாள். ராகினி கமலியோடு நேர் முகப்பரீட்சைக்கு வந்தவள். "கமலி. ஒருவருசமா தொடர்பே இல்லாத சிவாவை இன்னும் நினைச்சுக் கொண்டிருந்து வாழ்க்கைய வீணடிக்காதையும்... வெளிநாட்டுக்கு போன பொடியள் எல்லாம் இப்பிடித்தான்..." ராகினி அக்கா அடிக்கடி சொல்லுவாள். "இல்லை அக்கா என்ர சிவா அப்பிடியில்லை.. நீங்க பாருங்களன்...!" அவன்மீதுள்ள நம்பிக்கையில் ராகினி அக்காவின் வாயை மூடிவிடுவாள் கமலி.

ரூம் கதவைச் சாத்திவிட்டு வெளியே வருகிறாள். ரிசெப்சனில் நின்ற பொடியனிடம் "அண்ணை எனக்கேதாவது கோல் வந்தா ஒரு மணித்தியாலத்தால எடுக்கச் சொல்லுங்கோ..." சொன்னபோது அவனின் ஏளனப்பார்வை "உங்களுக்கு யார் கோல் எடுக்கிறது... ஒரு கிழமையா இதைத்தான் சொல்லுறீங்க...!" என்பது போலிருந்தது. தலையைக் குனிந்தபடி வெளியே வந்து வீதியில் கலந்து கோயிலை அடைகிறாள்.

கோயிலைச்சுற்றி அங்காங்கே இராணுவத்தினரின் நடமாட்டம். வாசலில் நின்ற ஆமிக்காறன் ஒருவன் தனது சகாவிடம் ஏதோ சிங்களத்தில் சொல்லி சிரித்தபோது கமலிக்கு அவமானமாக இருந்தது. 'சீ.. எங்கிட நாட்டில கோயில் கும்பிடக்கூட சுதந்திரம் இல்லை...' நினைத்துக்கொண்டே காலணிகளைக் கழற்றி விட்டு கோயிலுக்குள் செல்கிறாள்.

"அம்மா ஆற்ற பேருக்கு அரிச்சனை...?" ஆலயக்குருக்களின் குரல் கேட்டு "சிவா...!" அவள் உதடுகள் அவளையறியாமல் உச்சரித்தன. "நட்சத்திரம்..." தட்டை வாங்கியபடி குருக்கள் கேட்டபோது சொன்னாள். "கடவுளே.. சிவா நல்லாயிருக்க வேணும்.. எப்பிடியாவது எங்கள ஒண்டுசேர்த்துவை கடவுளே...!" கண்களை மூடி வேண்டிக் கொண்டவள் தட்டைவேண்டிக்கொண்டு வெளியே வருகிறாள்.

அங்கே வாசலில் சிவா. கமலிக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை. 'ஒரு வேளை தனது கடிதம் கிடைத்துத்தான் ஓர் அதிர்ச்சியாக இருக்கட்டும் என்று திடீரென வந்து விட்டானோ..! கடவுளே நான் காண்பது கனவா..?...' அவளை அடையாளம் கண்டுவிட்ட சிவா "ஹலோ... கமலி...!" என்றபடி அவளிடம் வருகிறான்.

கமலிக்கு வார்த்தைகளே வரவில்லை. அப்போது அங்கே திடீரென வந்த ஒரு இளம் பெண் "சிவா.. வட் ஆயு டூயிங் ஹியர்...?" (இங்கே என்ன செய்கிறீர்கள்) உரிமையோடு அவனின் தோளைப்பற்றினாள்.

"ஸோ.. கமலி நீர் எப்பிடியிருக்கிறீர்...?... மீற் மை வைவ் பிரியா...!" என்றவன் பிரியாவைப்பார்த்து "பிரியா மீற் மை கிளாஸ்மேட் கமலி..!" என்று சாதாரணமாகச் சொன்னபோது கமலியின் கையிலிருந்த அரிச்சனைத் தட்டு கைதவறி நழுவிக்கொண்டிருந்தது.


படிப்பகம்

www.padippakam.com



# உதிர்ந்த முடி

இலக்கிய நயம்

திருவள்ளுவர் ரசிகன்

"காட்டித்தா
உனக்கு தேவையானதை
கூட்டியே தருகிறேன்"
என்றான்
வெள்ளைக் கொக்கு!

நாடு பிடிக்க வந்த
ஆங்கிலேயத் தளபதி!

உள்ளூரில் அவனைக்
காக்காய் பிடிக்கவும்
ஆளிருந்தார்கள்!

அவனது மொழியில்
தமக்குள்ள புலமையை
புளுகிப் புளுகியே
கூனி நின்றது
கூட்டம் ஒன்று!

"ஆளப் பிறந்தவர்கள்
நீங்கள்!
ஆளப்பட வேண்டியவர்கள்
நாங்கள்!"
கோழைகள் கூவினார்கள்!

"அந்நியன் புகுவதோ
அடிமையாய் வாழ்வதோ?

தாயிற் சிறந்த பூமியை
நாயிற் கேடாய் மிதிப்பதை
சேய்கள் நாங்கள் பொறுப்பதோ?"
என்று சினந்தனர் மறவர்கள்.

"கௌரவத் தளபதிக்கு
வணக்கம்!
கர்வம் பிடித்தக் கூட்டம்
கர்ஜிக்கிறது!

ஆங்கிலேயப் படையின்
ஆங்காரம் புரியாமல்
நம்நாட்டு சிறியோர்
வம்புக்கு கிளம்புகின்றனர்!

எங்களிடம் அதிகாரத்தை
கொடுங்கள் ஐயா
தங்களுக்கு வேலையின்றி
தலை சீவித் தருகிறோம்!"

அடிமைக் குணத்தார்
சேவகம் செய்ய
அபடிணித்து விண்ணப்பித்தனர்!

வெள்ளைத் தளபதியின்
பூனைக் கண்கள்
கள்ளமாய் சிரித்தன!

மதுக் கோப்பைக்குள்
ஐஸ்கட்டிகள் மிதந்தன!

சூப்பிச் சூப்பி
குடிப்பதைக் காண
கைகூப்பிய அடிமைகளுக்கும்
நாவில் ஈரம் சுரந்தது!

'வெள்ளிக் காசுக்கு
விலை போகாதவர்களே
கிடையாதா?'
மதுபோதையிலும் யோசித்தான்!

"தேவனையே
வெள்ளிக்காசுக்கு
விலைபேசிய உலகத்தில்,
விடுதலை வீரர்களை
விலை கூறவா தயங்குவர்?"
எண்ணி வருந்தினான்!

"அருமைமிகு தேசமே!
உன் புத்திரர் சிலர்
எருமையிலும் கேடாய்
உணர்ச்சியற்று பிறந்துள்ளனர்!
இதனால் எங்களுக்கு இலாபம்
உனக்குத்தான் நஷ்டம்!"
வெள்ளைத் தளபதி
மனதுக்குள் கூறினான்!

இங்கிலாந்திலிருந்து
கப்பலில் வந்தனர்
கட்டழகிகள்!

காட்டிக் கொடுப்போருக்கு
கண்ணுக்கினிய கட்டழகிகள்!
இறக்குமதி செய்யப்பட்டோர்
உலுத்தர்களின் மதியை
இறக்குமாறு செய்தனர்!

வெள்ளைத் தோலை
விரல்களால் வருடி,
தம்மை மறந்தவர்
விளையாடித் தீர்த்தனர்.

கப்பலில் வந்த
புட்டிகளும், குட்டிகளும்
சுதேசிகளின்
மூளையைச் சலவை செய்தன!

இதுவன்றோ ஆட்சி!
இதுவன்றோ மாட்சி!

வெள்ளைக் கொக்குகளை
வாயாரப் புகழ்ந்தனர்!

'தனியொரு படையாக
பணிவாக இயங்குக!
கிளர்ச்சி செய்வோரின்
கொட்டத்தை அடக்குக!'

வெள்ளைத் தளபதி
விடுத்தான் கட்டளை!

காட்டிக் கொடுப்போருக்கு
நாட்டில் வேட்டையாட
நல்லதொரு சந்தர்ப்பம்!

சோதனை என்ற பெயரில்
சுருட்டல் நடந்தது!

தேடுதல் என்ற பெயரில்
பெண்களைத் தேடினர்!

கைதுகள் என்ற பெயரில்
கட்டுமீறி நடந்தனர்!

இரவானதும்
கட்டழகிகளின் இடையில்
கைகோர்த்து நடனம்!
கட்டிலில் சரணம்!
காமத்துக்குள் கரணம்!

'வட்டப் பந்துகள்
முட்ட வந்ததோ?
முட்டிப் போனதும்
மூச்சு நின்றதோ?'

மோகத்தில் புலம்பி
மோகத்தில் புரண்டு
மோகத்தில் தூங்கினர்!

வெள்ளையன் கொடுத்த
கூலியை
வெள்ளைக்காரிகளிடம்
கொடுத்தனர்!

இடது கையால் கொடுத்து
வலது கையால் எடுப்பது
அரசியல் முதல்
சரசவியல் வரை
வெள்ளையனுக்கு சகஜம்!

பிரித்தாள்வதும்
உடன் பிறந்தாரையே
உன்ளேயே மோதவிடுவதும்,
வலை வீசி 'ஆள்பிடிப்பதும்
எலும்புத்துண்டுகளால்
அடிமைகளை வளர்ப்பதும்
வெள்ளையனுக்கு கை வந்த கலை!

எதிரியின் ஜாலம்
புரியாமல்
உதிரிகள் ஆடினார்கள்!

சொந்த மக்களின்
சுதந்திர எழுச்சியை
மந்தமாக்கி நசுக்கினார்கள்!

தன்மான உணர்ச்சியை
தணிக்க முன்னின்றார்கள்!

இறுதியில் மறவர்கள்
தோல்வியைத் தழுவினர்!

எஞ்சியோர் மறுபடி
போராடப் பதுங்கினர்!

தற்காலிக வெற்றி
அந்நியப் படைக்கு!

செய்தியை அறிந்த
ஆங்கிலேயத் தளபதிக்கு
விழிகள் கலங்கின!

அவனது கைகளில்
புரண்ட காதலி கேட்டாள்:
"இது என்ன அன்பே,
ஆனந்தக் கண்ணீரா?"

வெள்ளைத் தளபதி
தலையசைத்து மறுத்தான்:
"ஆதங்கக் கண்ணீர்"
என்று உரைத்தான்.

"வீரர்கள் பிறந்த
மண்ணில் வீணர்கள்!

சாவுக்கு அஞ்சாது
சமராடும் காளைகள்
உதிர்ந்த மண்ணில்
சருகுகளாய் சில கயவர்கள்!"

வெள்ளைக் காதலி
வியந்து பார்த்தாள்!

"உங்களுக்குத்தானே
உதவுகிறார்கள்!
புகழாமல் இகழ்வது
எனக்கு விளங்கவில்லை!"

"மரத்தை வெட்ட
கோடாலி தேவை!
கோடாலிக்கு
காம்புகள் தேவை!

இவர்கள்
கோடாலிக் காம்புகள்!

உபயோகப்படுத்தலாம்
கௌரவப்படுத்த முடியுமா?

சொந்த மரத்தையே
சாய்க்கும் காம்புகளுக்கு
வந்தனம் கூறமுடியுமா?"
என்று வினாவினான் தளபதி.

"அப்படியானால்
கௌரவத்துக்குரியவர்கள்
யார் என்று கூறும்?"
காதலி வினாவினாள்.

"களத்தில் நம்மோடு
கைகலந்தவர்கள்!

தாய் நாட்டை காக்க
தன்னுயிர் தந்தவர்கள்!

தன்மானம் இழக்காது
வெஞ்சமர் புரிந்தவர்கள்!

அவர்கள் வீழ்ந்தாலும்
வாழ்பவர்கள்!
இவர்களோ வாழ்ந்தாலும்
வீழ்ந்தவர்கள்!

அவர்கள்
முடி இழந்தால்
உயிர் வாழா
கவரிமான்கள்!

இவர்களோ
உதிர்ந்த
முடிகளாகவே வாழ்பவர்கள்!"

தளபதியின் விளக்கம்
அவளுக்கு சிலிர்ப்பாகவிருந்தது!

"உதிர்ந்த முடி
உதிர்ந்த முடி"
என்று அவள்
உதடுகள் கூறிப் பார்த்தன!

திருவள்ளுவரும்
இழிந்த மனிதருக்கு
உதிர்ந்த மயிரைத்தான்
உவமையாகக் கூறுகிறார்:

"தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை"

அதிகாரம் 97, பாடல்: 964

---

ஸ்போர்ட்ஸ்

## நிதி திரட்டுகிறார் அவுஸ்திரேலிய கப்டன்



இந்தியாவின் கல்கத்தாவில் உள்ள உதயான் குழந்தைகள் அமைப்புக்கு நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளார் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி கப்டன் ஸ்ரீவ் வோவ்.

இந்த அமைப்பில் தொழு நோயாளர்களின் குழந்தைகள் தங்கியுள்ளனர். அவர்களுக்கு பல வழிகளில் உதவி செய்துவருகிறார் வோவ்.

தற்போது இந்த அமைப்பில் உள்ள குழந்தைகளின் மறுவாழ்வுக்காக நிதி திரட்டத் தொடங்கியுள்ளார்.

உதயான் அமைப்பின் பணிகளை வீடியோ படமாக்கி, அதை வெளிநாடுகளில் உள்ள நன்கொடையாளர்களுக்குக் காண்பித்து நிதி திரட்டி வருகிறார் ஸ்ரீவ் வோவ்.

## டொரன்டோ கிரிக்கெட் திருவிழா

கனடாவின் டொரண்டோ நகரில் கடந்த 3 வருடங்களாக நடந்து வந்த சஹாரா கோப்பைக் கிரிக்கெட் போட்டிகள் இம்முறை நிறுத்தப்பட்டுள்ளது. இந்திய-பாகிஸ்தான் அணிகள் பங்குபெற்றும் இப்போட்டிகள், கார்கில் போர் காரணமாக நிறுத்தப்பட்டுவிட்டது.

இதற்குப் பதிலாக 'டொரண்டோ கிரிக்கெட் திருவிழா' என்ற பெயரில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இப்போட்டிகளில் இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவுகள் ஆகிய மூன்று அணிகள் பங்குபற்றுகின்றன.

எனினும் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் ஒன்றையொன்று எதிர்த்தாடாது. இந்தியா, மேற்கிந்தியத்தீவுகளுடன் 3 போட்டிகளில் விளையாடவுள்ளது. அதேபோல் பாகிஸ்தானும் மேற்கிந்தியத்தீவுகளுடன் 3 போட்டிகளில் விளையாடவுள்ளது.

இந்தியா, மேற்கிந்தியத்தீவுகளுக்கிடையிலான போட்டிகள் செப்டெம்பர் 11,12,14ம் திகதிகளிலும், பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவுகளுக்கிடையிலான போட்டிகள் செப்டெம்பர் 16,18,19ம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

இந்தியா-பாகிஸ்தான் அணிகள் கலந்து கொண்டு விளையாடும் சஹாரா கோப்பைக் கிரிக்கெட் போட்டிகளை தொடர்ந்து 5 வருடங்களுக்கு நடந்த ஐஎம்ஜி நிறுவனம் ஒப்பந்தம் செய்திருந்தது.

3 வருடங்களாக போட்டிகளை நடத்தியும் வந்தது. ஆனால் இம்முறை இந்தியா, பாகிஸ்தானுடன் விளையாட மாட்டேன் என்று உறுதியாகத் தெரிவித்தது. எனவே இதனால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்டவே ஐஎம்ஜி நிறுவனம் இப்போட்டிக்கான ஏற்பாடுகளைச் செய்தது.

சிங்கப்பூரில் 3 நாடுகள் பங்குபற்றும் முத்தரப்புப் போட்டிகள் செப்டெம்பர் 2ம் திகதி முதல் 7ம் திகதி வரை நடைபெறுகின்றன. இதில் இந்தியா, மேற்கிந்தியத்தீவுகள், ஸிம்பாப்வே ஆகிய நாடுகள் பங்குபற்றுகின்றன. இதனை முடித்துக்கொண்டே இந்தியா, டொரண்டோ செல்கிறது.

## பங்களாதேஷ் வீரர் ஓய்வு

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் மின்ஹாசுல் அபேடின் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

33 வயதான அபேடின் சிறந்த துடுப்பாட்ட வீரர். மிதவேகப் பந்து வீச்சாளர். 1990முதல் 1994 வரை பங்களாதேஷ் அணியின் கப்டனாகப் பணியாற்றியுள்ளார். 27 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியுள்ளார். குடும்பச் சூழல் காரணமாக ஓய்வு பெறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் முடிவடைந்த உலகக் கோப்பைப் போட்டியில் பலம் வாய்ந்த பாகிஸ்தான் அணியை பங்களாதேஷ் தோல்வியுறச் செய்தது. அந்த வெற்றியின் முக்கிய பங்கு அபேடினையே சாரும்.

இதைவிட ஸ்கொட்லாந்து, அவுஸ்திரேலியா அணிகளுக்கெதிரான அரைச் சதங்களை எடுத்து தான் ஒரு சிறந்த வீரர் என்பதை நிரூபித்தார்.

## இவர்தான் அவர்



வின்ஸ்டன் சேர்ச்சில்

---

சிந்தியா பதில்கள்

✣ டெண்டுல்கரின் சதம் எப்படிச் சிந்தியா?

பி.விக்கி, கொழும்பு.

அபாரம்! அதைவிட அபாரம் கங்குலியின் வாண வேடிக்கை! ஆனாலும் துடுப்பாட்டத்தில் தூள் கிளப்பிவிட்டு, களத்தடுப்பிலும், பந்துவீச்சிலும் கோட்டை விட்டு விட்டனரே! அநியாயமப்பா!

✣ கிழக்கைத் துண்டாடுவதை ஐ.தே.கட்சி எதிர்ப்பதாக ரணில் கூறியுள்ளாரே?

எம்.கிருபாகரன், மட்டக்களப்பு.

ஆனால் வடக்கு-கிழக்கு துண்டாடுவதை ஏற்பதாகக் கூறியுள்ளாரே! கிழக்கை சிங்களமயமாக்க முடியும் என்ற நம்பிக்கையில் கிழக்கைத் துண்டாக்காது வைத்திருக்க விரும்புகிறார் ரணில்!

✣ கூட்டாட்சிக்குத் தயார் என்று சோனியா அறிவித்துள்ளார். இதனைத் தேர்தல் வரமுன்பே செய்திருக்கலாம் அல்லவா?

அ.ரவிக்குமார், கொழும்பு-12.

தானே பிரதமராகத் துடித்ததால் கூட்டணி ஆட்சிக்கு குறுக்கே நின்றார் சோனியா! இப்போது வெற்றி வாய்ப்பு சந்தேகமாக இருப்பதால் கூட்டணி ஆட்சி பற்றிப் பேசி தூண்டில் போடுகிறார்.

✣ இலங்கை அணியில் முன்னேற்றம் தெரிகிறதே? வட்மோர்தான் காரணமா?

எஸ்.பர்சான், மருதானை.

இன்னமும் பெரிய முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டுவிட்டதாக நான் நினைக்கவில்லை. வெளிநாடுகளில் விளையாடும்போது தான் பலம் தெரியும்!

✣ சோனியா, ஜெயலலிதா என்ன வேற்றுமை?

ம.கமலா, பதுளை.

முன்னவர் காத்திருப்பவர். பின்னவர் காத்திருக்க வைப்பவர்!

✣ தொண்டாவுக்கு 87வது பிறந்தநாள் செய்தி கூறுங்களேன்?

க.ரங்கநாத், நுவரெலியா.

இன்றுபோல் என்றும் வாழ்க!

✣ நீலன் திருச்செல்வத்தின் மரணத்தை ஐ.நா. மனித உரிமைகள் குழு கண்டித்துள்ளதே?

கு.உமாகாந்தன், யாழ்ப்பாணம்.

அமெரிக்கா தன் சார்பாளர்களை, தனக்காக பணியாற்றுபவர்களை நேரடியாக உரிமை பாராட்ட முடியாத சந்தர்ப்பங்களில், இப்படியான குழுக்களைத் தூண்டிவிட்டு தனது விருப்பப்படி ஆட்டுவிப்பதுண்டு! அதுதான் நடந்துள்ளது! இந்த மனித உரிமைகள் குழுவுக்கு செம்மணி விவகாரம் தெரியாதா? இங்கு நடக்கும் மனித உரிமை மீறல்களை அறியாதா?

✣ கொழும்பில் நடந்துள்ள சமாதானப் பேரணிகள் பற்றி உமது கருத்தென்ன?

ஆர்.வேந்தன், தெகிவளை.

'இருக்கும் இடத்தைவிட்டு இல்லாத இடம் தேடி அலைவார் ஞானத்தங்கமே' என்ற பாடல்தான் நினைவுக்கு வருகிறது. 'இனப்பிரச்சனைக்குத் தீர்வை முன்வை' என்று அரசை நிர்ப்பந்திக்காது, அரசுடன் நல்லுறவில் இருக்கும் இயக்கம் ஒன்றே வெள்ளையுடை தரித்து வீதியில் இறங்கி, யாரிடம் கேட்கிறது, எங்கே தேடுகிறது சமாதானத்தை?! இதுதான் என் கேள்வி.

✣ எதையும் நம்பாத சந்தேகப் பேர்வழிகளை திருத்த முடியாதா?

எஸ்.சந்தானலட்சுமி, பண்டாரவளை.

ஏன் முடியாது?!

வானியல் நிபுணர் ஜேம்ஸ் ஜீன்ஸ் ஒரு தடவை பெயின்ட் வாங்குவதற்காக கடைக்குப் போயிருந்தார்.

கடைக்காரர் பெயின்ட் டப்பாவை எடுத்துக் கொடுத்தார்.

ஜேம்ஸ் ஜீன்சுக்கு திருப்தி ஏற்படவில்லை. "அதிகநாள் தாக்குப் பிடிக்குமா? வெளுத்துப் போய்விடாதா? விலை அதிகமா? எடை சரியாக இருக்குமா?" என்று கேள்வி மேல் கேள்வி கேட்டு குடைந்து கொண்டிருந்தார்.

கடைக்காரன் வெறுத்துப் போய், "ஐயா! வானத்தில் 10037456 இலட்சம் நட்சத்திரங்கள் இருக்கின்றன என்று நீங்கள் சொன்னால் நாங்கள் மறுப்பு எதுவும் சொல்லாது நம்புகிறோம் அல்லவா? நீங்கள் ஏன் இந்தப் பெயின்ட் டப்பாவையும் என்னையும் நம்ப மறுக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

ஜேம்ஸ் ஜீன்ஸ் பதில் சொல்லாது சிலையாகிவிட்டார்.

✣ நடிகர்கள், நடிகைகளுக்கு இம்முறை தி.மு.க. வாய்ப்புத் தரவில்லையாமே! இது நல்லதா?

வி.ஆதம்பாவா, கல்முனை.

அரசியல்வாதிகளும் நடிகர்கள்தானே!

ஒரு குட்டிக் கதை:

இங்கிலாந்தில் காரிக் என்னும் பிரபல நடிகர் ஒருவர் இருந்தார். அவரை ஒரு கட்சித் தலைவர் அணுகினார்.

"எங்கள் கட்சி சார்பாக போட்டியிடுங்கள். கண்டிப்பாக உங்களுக்கு மந்திரியாகும் வாய்ப்பு இருக்கிறது!" என்று ஆசை காட்டினார்.

அதற்கு காரிக் கூறினார்:" உங்கள் பாராளுமன்றத்தில் ஒரு முட்டாள் மந்திரியாக இருப்பதைவிட, நாடகத்தில் பிச்சைக்காரன் வேஷம் போடுவதை பெருமையாக நினைக்கிறேன்!" கட்சித் தலைவர் கப்சிப்!

✣ 'நீ வருவாய் என' பார்த்தீரோ? கௌரவ வேடத்தில் வந்த அஜித் கலக்கிவிட்டார் பார்த்தீரோ?

கே.சோதிராணி, கல்கிசை.

பார்த்திபனுக்கு அடக்கி வாசிக்கும் பாத்திரம். அதனால் மனிதருக்கு லொள்ளுப் பண்ண முடியவில்லை என்பது நிஜம்! அதனால் ரமேஷ் கண்ணாவும் புகுந்து விளையாடியுள்ளாரே பார்த்தீரா?

✣ குட்டிக் கவிதை ஒன்று கிடைக்குமா?

க.சிவராசன், வவுனியா.

எங்கோ படித்ததை எடுத்து விடுகிறேன் பிடியும்.

**சவப்பெட்டி**

மனிதா!
இறந்தது நீதானே?
என்னையும் ஏன்
புதைக்கிறார்கள்?

✣ குசும்பான விஷயம் ஏதாவது கூறுமேன்?

பி.ராம், கண்டி.

ஏதென்ஸ் நகரில் வீட்டுக் கதவுகளில், 'நல்லவை தவிர மற்ற எதுவும் உள்ளே நுழையக்கூடாது' என்று எழுதி வைத்திருந்தனர்.

அதனைப் பார்த்த தத்துவஞானி டையோஜெனிஸ் சொன்னார்:

"நல்லவை தவிர மற்ற எதுவும் உள்ளே நுழையக்கூடாது என்றால், வீட்டின் சொந்தக்காரர் எப்படி உள்ளே செல்ல முடியும்?"

✣ அமைதியாக பூனைபோல இருப்பவர்களை நம்பலாமா?

ஆ.சித்திரா, மாத்தளை.

அமைதியிலே இரண்டு வகை உண்டு. ஒன்று, விபரம் தெரியாமல் இருக்கிற அமைதி. இன்னொன்று எல்லா விபரங்களையும் தெரிந்து வைத்திருக்கும் அமைதி!

✣ 'செய்யும் தொழிலே தெய்வம்' என்று நினைத்து ஈடுபாடு காட்டுபவர்கள் அரிதாகி வருகிறார்களே?

எம்.சதானந்தன், காரைதீவு.

உண்மைதான்! அவர்களுக்காக இந்தச் சம்பவம்:

கால் பந்தாட்டத்தில் பிரேசிலுக்கு மூன்றுமுறை உலகக் கோப்பையைப் பெற்றுக் கொடுத்தவர் பீலே. அவர் ஆறுமுறை ஒரு பேட்டியில் ஐந்து கோல்களும், முப்பது முறை ஒரு போட்டியில் நான்கு கோல்களும், தொன்னூறு முறை ஒரு போட்டியில் மூன்று கோல்களும் அடித்து சாதனை செய்தவர்.

பீலேயிடம் ஒரு நிருபர், "ஒரு வேளை நீங்கள் மனிதராகப் பிறந்திருக்காது விட்டால் வேறு என்னவாகப் பிறந்திருப்பீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு பீலே கூறினார்:

"கால் பந்தாகப் பிறந்திருப்பேன்!"

✣ தமிழ் நாட்டில் குழப்பம் விளைவிக்க இலங்கை அரசு மாணிக்க தாசனை தமிழ்நாட்டுக்கு அனுப்பியதாக ஜூனியர் விகடன் எழுதியுள்ளதே உண்மையா?

வி.எஸ்.மணி, கனடா.

அந்தக் கட்டுரை வெளியாகும் போது மாணிக்கதாசன் இலங்கை திரும்பி வவுனியாவில் நின்று கொண்டிருந்தார்.

✣ மும்தாஜ் தொடர்ந்து தாக்குப் பிடிப்பாரா?

எஸ்.ராஜ்குமார், கொழும்பு-09.

கவர்ச்சியால் தாக்குப் பிடிக்கத் தான் பார்க்கிறார். ஆனால் தாக்குப் பிடிப்பது சந்தேகம்தான்!



'உனக்காக எல்லாம் உனக்காக' படத்தில் மும்தாஜ்



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 16

ஆண்டவரின் அருட் கட்டளைகளை அவனியெங்கும் பரப்பும் பொருட்டு அவனியில் அவதரித்த இயேசுபிரான் கூறிய சில கருத்துக்கள் அவருடைய சீடர்களைத் துன்பக் கடலாட வைத்தன. தேவமகன் சாதாரண மானிடனைப்போல் மரிக்க முடியுமா? என்று அவர்களில் சிலர் ஐயுற்றனர். இருப்பினும் அவர் மண்ணுலக வாழ்க்கையை நீக்கப் போகிறார்; பரிசேயர்களும் மறைநூல் அறிஞர்களும் அவரை வதைக்கப் போகிறார்கள்; அவருடைய உயிரைப் பறிக்கப் போகிறார்கள் என்று இயேசுபிரானே சீடர்களிடம் தெரிவித்தார்.

அவருடைய சீடர்களுள் ஒருவரான பேதுரு, அவ்வாறெல்லாம் சாவைப் பற்றிச் சிந்திக்கலாகாது என்று இயேசுவிடம் கேட்டுக் கொண்டார். சற்றுக் கோபமடைந்த இயேசுபிரான், "நீ கடவுளுக்கு ஏற்றவற்றைப் பற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறாய்!" என்று கடிந்துக் கொண்டார்.

சில நாட்கள் சென்ற பின்னர் இயேசுபிரான் பேதுருவையும் யாக்கோபு மற்றும் அவருடைய சகோதரர் யோவான் ஆகியோரையும் அழைத்துக்கொண்டு அருகே இருந்த உயர்ந்த மலையின் உச்சிக்குச் சென்றார். தன்னுடன் வந்திருந்த ஏனைய மூவரையும் ஓரிடத்தில் விட்டுவிட்டு இயேசுபிரான் மட்டும் மலை உச்சியை நோக்கிச் சென்றார்.

சிறிது நேரத்தில் பல சூரியன்கள் ஒன்றாக இணைந்து ஒளி உமிழ்ந்தால் எப்படியிருக்குமோ, அதேபோன்ற ஒரு பேரொளியை

## ஒளியில் தோன்றிய மூவர்

அவர்கள் மூவரும் கண்டார்கள். ஒளி அதிகமாக இருந்தபோதிலும் அதில் வெப்பம் இருக்கவில்லை. மிகவும் சுகமான குளிர்ச்சி அங்கு நிலவியது. அந்தப் பேரொலியினூடே மூன்று உருவங்களை அவர்கள் கண்டார்கள்.

தெய்வீகக் களை சொட்ட நடுவில் இயேசுபிரான் காணப்பட்டார். அவருடைய வலதுபுறம் மோசேயும் இடதுபுறம் எலியாவும் காணப்பட்டனர். சீடர்கள் மூவருக்கும் இக்காட்சி விசித்திரமான அனுபவத்தைத் தந்தது. அச்சம் ஒருபுறமிருந்த போதும், இக்காணற்கரிய காட்சி ஆனந்த சாகரத்தில் அவர்களை அமிழ்த்தியது.





பேதுரு, "ஆண்டவரே! நாம் அனைவரும் இங்கேயே இருந்துவிடலாம். நம் அனைவருக்கும் தங்குவதற்கு இங்கேயே கூடாரங்களை அமைத்துக் கொள்வோம்!" என்றார். மூவரும் முகம் குப்புறவிழுந்து பல தடவைகள் வணங்கினார்கள்.

அப்போது அசரீரியாக ஒரு குரல் எழுந்தது. "என் அன்பார்ந்த மைந்தர் இவரே; இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன். இவருடைய வார்த்தைகளுக்குச் செவி சாயுங்கள்!" என்று அவ்வார்த்தைகள் எழுந்து மறைந்தன.

ஒளியில் தெரிந்த மோசே மற்றும் எலியா ஆகிய இருவரினது உருவங்களும் ஒளியுடன் மங்கி மறைந்ததும் இயேசுபிரான் மட்டும் தனது சீடர்களிடம் வந்து, "அஞ்சாதீர்கள்! எழுந்திருங்கள்!" என்றார். தொடர்ந்து "மானிட மகன் மரித்து பின்பு உயிருடன் எழுந்திருக்கும் நாள் வரை இன்று நீங்கள் கண்ட காட்சி பற்றி வேறு எவரிடமும் கூறவேண்டாம்!" என்று கட்டளையிட்டார்.

இயேசுபிரானும் பேதுரு முதலானோரும் மலையிலிருந்து கீழிறங்கி வந்து மலையடிவாரத்தில் நின்ற ஏனைய சீடர்களுடனும் மக்கள் கூட்டத்தினருடனும் சேர்ந்து கொண்டனர். அப்போது இயேசுவின் தாள்களைப் பிடித்துக்கொண்டு ஒருவர் கதறினார். தனது மகன் வலிப்பு நோயால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும், அவன் அடிக்கடி தீயிலும் நீரிலும் விழுந்து விடுவதாகவும் கூறி, அவனைக் குணமாக்கித் தரும்படியும் கோரினார். சீடர்கள் சிலரிடம் அப்பையனைக் காட்டியபொழுது, அவனுடைய நோயைத் தீர்த்து சுகமளிக்க அவர்களால் முடியவில்லை என்றும் கூறினார்.

அப்பையனைத் தன்னருகில் வர வழைத்த இயேசுபிரான், அவனைப் பீடித்திருந்த பேயை ஒரே நொடியில் விரட்டிவிட்டார். இயேசுபிரானிடம் சீடர்கள், "எங்களால் இப் பேயை விரட்டியடிக்க முடியாமற் போய்விட்டதே!" என்று விசனப்பட்டனர். இதற்குப் பதிலளித்த இயேசுபிரான்; "உங்கள் நம்பிக்கைக் குறைவுதான் காரணம். உங்களுக்கு கடுகளவு நம்பிக்கை இருந்தால், நீங்கள் இம்மலையைப் பார்த்து, 'இங்கிருந்து பெயர்ந்து அங்கு போ!' என்றால் அது நகர்ந்து போய்விடும். உங்களால் முடியாதது ஒன்றுமே இராது என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்! இத்தகைய பேய்கள் இறை வேண்டலினாலும் நோன்பினாலுமேயன்றி வேறு எதனாலும் வெளியேறாது!" என்று கூறினார்.

கலிலேயாவில் தமது சீடர்களிடம் இயேசுபிரான், தமது சாவைப் பற்றி இரண்டாவது தடவையாகக் கூறினார். "மானிட மகன் மக்களிடம் ஒப்புவிக்கப்படவிருக்கிறார். அவர்கள் அவரைக் கொலை செய்வார்கள்; ஆனால் அவர் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படுவார்!" என்று தெரிவித்தார். இதனால் சீடர்களனைவரும் பெரும் துயரடைந்தனர்.

சீடர்களில் ஒருவர் இயேசுபிரானிடம், "விண்ணரசில் மிகப் பெரியவர் யார்?" என்று கேட்டார். இதற்குப் பதிலாக பல எளிய உவமைகளைக் கூறி விளக்கமளித்தார்.

"நீங்கள் மனந்திரும்பிச் சிறு பிள்ளைகளைப்போல் ஆகிவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இந்தச் சிறு பிள்ளையைப் போலத் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப் பெரியவர். இத்தகைய சிறு பிள்ளை ஒன்றை என் பெயரால் ஏற்றுக் கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார்.

### பாவத்தில் விழச் செய்தல்

"என்மீது நம்பிக்கை கொண்டுள்ள இச்சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச் செய்வோருடைய கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டித் தொங்கவிட்டு ஆழ்கடலில் அமிழ்த்துவது அவர்களுக்கு நல்லது. ஐயோ! பாவத்தில் விழச் செய்யும் உலகுக்குக் கேடு! பாவத்தில் விழுவதைத் தவிர்க்க முடியாது. ஆனால் ஐயோ! அதற்குக் காரணமாய் இருப்போருக்குக் கேடு! உங்கள் கையோ காலோ உங்களைப் பாவத்தில் விழச் செய்தால் அதை வெட்டி எறிந்துவிடுங்கள். நீங்கள் இரு கையுடனோ இரு காலுடனோ என்றும் அணையாத நெருப்பில் தள்ளப்படுவதைவிடக் கை ஊனமுற்றோராய் அல்லது கால் ஊனமுற்றோராய் நிலை வாழ்வில் புகுவது உங்களுக்கு நல்லது. உங்கள் கண் உங்களைப் பாவத்தில் விழச் செய்தால் அதைப் பிடுங்கி எறிந்துவிடுங்கள். இரு கண்ணுடையவராய் எரிநரகில் தள்ளப்படுவதைவிட ஒற்றைக் கண்ணராய் நிலை வாழ்வில் புகுவது உங்களுக்கு நல்லது.

### காணாமற் போன ஆடு

இச்சிறியோருள் ஒருவரையும் நீங்கள் இழிவாகக் கருதவேண்டாம். கவனமாயிருங்கள்! இவர்களுடைய வானதூதர்கள் என் விண்ணகத் தந்தையின் திருமுன் எப்பொழுதும் இருக்கின்றார்கள் என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் மானிட மகன் நெறிதவறியோரை மீட்கவே வந்தார்.

இந்த நிகழ்ச்சியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஒருவரிடம் இருக்கும் நூறு ஆடுகளுள் ஒன்று வழி தவறி அலைந்தால், அவர் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைப்பகுதியில் விட்டுவிட்டு வழிதவறி அலையும் ஆட்டைத் தேடிச் செல்வார் அல்லவா? அவர் அதைக் கண்டுபிடித்தால் வழிதவறி அலையாத தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் பற்றி மகிழ்ச்சியடைவதைவிட வழி தவறிய அந்த ஓர் ஆட்டைப் பற்றியே மிகவும் மகிழ்ச்சியடைவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். அவ்வாறே இச்சிறியோருள் ஒருவர்கூட நெறி தவறிப் போகக்கூடாது என்பதே உங்கள் விண்ணகத் தந்தையின் திருவுளம்.

### பாவம் செய்யும் சகோதரர்

உங்கள் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் உங்களுக்கு எதிராகப் பாவம் செய்தால் நீங்களும் அவரும் தனித்திருக்கும்போது அவரது குற்றத்தை எடுத்துக்காட்டுங்கள். அவர் உங்களுக்குச் செவிசாய்த்தால் நல்லது; உங்கள் உறவு தொடரும். இல்லையென்றால் இரண்டு அல்லது மூன்று சாட்சிகளுடைய வாக்குமூலத்தால் அனைத்தும் உறுதி செய்யப்படும்' என்னும் மறைநூல் மொழிக்கு ஏற்ப உங்களோடு ஒன்றிரண்டு பேரைக் கூட்டிக் கொண்டு போங்கள். அவர்களுக்கும் செவிசாய்க்காவிடில் திருச்சபையிடம் கூறுங்கள். திருச்சபைக்கும் செவிசாய்க்காவிடில் அவர் உங்களுக்கு வேற்று இனத்தவர் போலவும் வரிதண்டுபவர் போலவும் இருக்கட்டும். மண்ணுலகில் நீங்கள் தடைசெய்பவை அனைத்தும் விண்ணுலகிலும் தடைசெய்யப்படும்;

மண்ணுலகில் நீங்கள் அனுமதிப்பவை அனைத்தும் விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்! என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். உங்களுள் இருவர் மண்ணுலகில் தாங்கள் வேண்டும் எதைக் குறித்தும் மனமொத்திருந்தால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தை அதை அவர்களுக்கு அருள்வார். ஏனெனில் இரண்டு அல்லது மூன்றுபேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்."

### இராஜகுமாரன்

இயேசுபிரானிடம் பேதுரு தனது சந்தேகத்துக்கு விளக்கம் கோரினார். "சகோதரர் ஒருவர் செய்த பாவச் செயலை எத்தனை தடவைகள் மன்னிக்கவேண்டும்?" என்று கேட்டார். இவ்வினாவுக்கும் உவமைக் கதைகளையே கூறி இயேசுபிரான் விளக்கமளித்தார்.

### மன்னிக்க மறுத்த பணியாள்

"ஏழுமுறை மட்டுமல்ல; எழுபது தடவை; ஏழுமுறை என நான் உனக்குச் சொல்கிறேன். விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம்: ஓர் அரசர் தம் பணியாளர்களிடம் கணக்குக் கேட்க விரும்பினார். அவர் கணக்குப் பார்க்கத் தொடங்கியபொழுது, அவரிடம் பத்தாயிரம் தாலந்து கடன்பட்ட ஒருவனைக் கொண்டு வந்தனர். அவன் பணத்தைத் திருப்பிக்கொடுக்க இயலாத நிலையில் இருந்தான். தலைவரோ, அவனையும் அவன் மனைவி மக்களோடு அவனுக்குரிய உடைமைகள் யாவற்றையும் விற்றுப் பணத்தைத் திருப்பி அடைக்க ஆணையிட்டார். உடனே அப்பணியாள் அவர் காலில் விழுந்து பணிந்து, 'என்னைப் பொறுத்தருள்க; எல்லாவற்றையும் உமக்குத் திருப்பித் தந்துவிடுகிறேன்' என்றான். அப்பணியாளின் தலைவர் பரிவு கொண்டு அவனை விடுவித்து அவனது கடன் முழுவதையும் தள்ளுபடி செய்தார்.

(தொடர்ந்து வரும்)

---

**திருமறை [பு.ஆ] 13 விடை:** பெயல் செபூல்

**பரிசு பெறுவோர்:**

1. **கே.சௌந்தரராஜா,** ஒலம்பாவ வீதி, கெகிராவ.
2. **உ.பிரசாந்,** 418, ஹொறவபொத்தான வீதி, இறம்பைக்குளம், வவுனியா.
3. **கே.அரசேஸ்வரன்,** கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
4. **எம். ஆர்.எ.ஃப்.ஜினாசா,** புளுகொஹத்தனை, அக்குரனை.
5. **செல்வன் ஈ.எம்.நிரோஷன்,** 37, கரவகெட்டிய வத்த, பலாங்கொடை.

**திருமறை [பு.ஆ] 16 வினா :-** ஒளியில் இயேசுபிரானுடன் தோன்றியவர்கள் யார்?

செப்டெம்பர் 11 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

**திருமறை பு.ஆ.16— தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

---

## அடுத்து வருவது

### விளையாட்டுச் செய்திகள்



யாழ் 'உதயன்' பத்திரிகைக் காரியாலயம்மீது தமிழ்க் கட்சி ஒன்று பின்புறமாக குண்டெறிந்து நான்கு புள்ளிகள் பெற்று ஜனநாயக தடகளத்தில் முன்னணியில் நிற்கிறது.

வவுனியாவில் ரெலோ முகாமுக்குள் புகுந்த அதிரடிப் படையினரின் துடுப்பாட்டத்தில் ஐந்து ரெலோவினர் காயமடைந்னர்.

தமது அணி தாக்கப்பட்டது குறித்து ரெலோ தலைவர் அம்மையாரிடம் முறையிட்டு நீதி கோரியுள்ளார்.

எதிர்வரும் ஐந்து வருடங்கள் நாட்டிற்கு பொற்காலம். இந்தக் காலத்திற்குள் இனப் பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கும் என்று அமைச்சர் ஜெயக்கொடி கூறியுள்ளார். அடுத்த ஆண்டுக்குள் தீர்வு வரும் என்று அம்மையார் கூறியுள்ளார்.

இந்தியாவுடனான கிரிக்கெட் போட்டி ஒன்றில் இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளது.

---

## கந்தசாமியும் முத்துத்தம்பியும்

**க: வணக்கம். முத்துத்தம்பியர். கண்டு சுனகாலம். ஊரில் இல்லையோ?**

மு: ஊரில் எதுதான் இருக்குது? சமாதானம் இருக்குதோ? நிம்மதி இருக்குதோ? கௌரவம் இருக்குதோ? மனிதர் என்ற உரிமைதான் இருக்குதோ? இதிலே நான் இருந்தென்ன, இல்லாமல் போய் என்ன?

**க: கேட்டது குற்றமாக்கும். அதுதான் அடுத்த ஆண்டுக்குள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரலாம். புலிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று மிஸ்டர் கதிர்காமர் கூறியிருக்கிறார்தானே!**

மு: அதாவது தோல்வி காண்பதற்கு சம்மதிக்க வேண்டும் என்கிறார். எப்படிச் சம்மதிப்பினம்?



**க: என்ன சொல்லுகிறீர்?**

மு: பின்னே என்ன? சண்டையை முடிவுக்கு கொண்டு வருவதாக இருந்தால் உடன் கொண்டு வர விரும்பாமல், அது என்ன பிறகு அடுத்த ஆண்டுக்கணக்கு? அப்படியென்றால் இன்னும் ஒரு வருசம் சண்டை பிடித்துப்போட்டு, அப்பவும் வெற்றி கிட்டாவிட்டால் புலிகள் தாங்களாக தோற்று ஒத்துழைக்க வேண்டும் என்றல்லோ அர்த்தமாகுது.

**க: அதுதானே! ஈழக் கோரிக்கை சாத்தியப் படாது என்றும் கூறியிருக்கிறார்!**

மு: நல்லது! சாத்தியப்படக்கூடிய தீர்வை முன்வைக்கட்டுமேன். மிஸ்டர் கதிர்காமரும் தமிழர்தானே. தக்க தீர்வாக முன்வைத்தால் சனத்துக்கும் துக்கமில்லைத் தானே.

**க: ஆகஸ்ட் மாதம் பொதி வருகுது என்று புளுகியதும் புஸ்வாணமாச்சாக்கும்.**

மு: பொதியே புஸ்வாணம்தானே! சொல்லுறைவை சொன்னா, அதைக் கேட்டு நம்புகிறவைக்கு எங்கே போனது மதி?

**க: சமாதானம் மலர வேண்டும் என்று மறுபடி பல அமைப்புக்கள் விளம்பரங்கள் செய்கினம் பார்த்தீரோ?**

மு: தினமும் 30, 40 ஆயிரம் ரூபாய் செலவிட்டு பத்திரிகைகளில் விளம்பரம். சுவரொட்டி என்று தூள் கிளப்புகினம். வெளிநாட்டில் இருந்து பணம் வருகுது. வரவு செலவுக்கணக்கு காட்டினால் தானே தொடர்ந்து பணம் வரும். அதுக்காக காசை கண்டபடி செலவு செய்கினம்.

**க: என்ன வெறுப்பாய் பேசுகிறியள்?**

மு: பின்னே என்ன இவை புறாப்படம் போட்டு விளம்பரம் செய்தால்தான் சமாதானம் தேவை என்று சனத்துக்கு தெரியுமாக்கும். சனம் ஏதோ சண்டைப் பிரியர்கள் மாதிரியும், இவை சிலர்தான் சமாதானப் பிரியர்கள் மாதிரியுமல்லோ கிடக்குது.

**க: அப்ப, என்ன செய்ய வேண்டும் என்கிறீர்?**

மு: சமாதானம் தேவை என்று எல்லோருக்கும் தெரியும்! ஏன் சமாதானம் வரவில்லை என்பதும் தெரியும்! இனப் பிரச்சனைக்கு தீர்வைக் கண்டால் சண்டை தானாக நிற்கும்! சமாதானம் பிறக்கும்! அதற்கு இந்த நாட்டுக்குள் நோ சான்ஸ். அதனால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கொண்டுவர முனைப்பாகப் பாடுபடட்டும். மக்கள் கருத்தைப் பெரிதாக மாற்றட்டும். அதனைச் செய்யாமல், கீறல் விழுந்த ரெக்கோர்ட் மாதிரி சமாதானம் வேணும், அரசும் புலிகளும் போரை நிறுத்த வேணும் என்று கத்திக் கத்தியே காலம் கழிக்கினம்.

**க: சமாதானம் பேசுவதும், போஸ்டர்கள், விளம்பரங்கள் அடிப்பதும், ஊர்வலம் நடத்துவதும், அதனையெல்லாம் அழகாகப் படம் பிடித்து தமக்கு நிதி உதவி தரும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுப்பி மேலும் நிதி பெறுவதும் ஒரு தொழில் மாதிரி நடக்கு தாக்கும்.**

மு: அதே ! அதே! போர் தொடர்ந்தால் தானே தொழிலும் தொடரும்! அதனால்தான் போரை நிறுத்தும் உருப்படியான வழிகளில் மக்களை திரட்டவும், வெளியுலக ஆதரவை திரட்டவும் முன்வராமல், 'சமாதானம் சமாதானம்' என்று மட்டுமே முழங்கிக் கொண்டிருக்கினம். போரை நிறுத்த ஒரே ஒரு வழிதான் இருக்கிறது.


**க: என்ன வழி?**

மு: மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் முன்பாக அரசியல் பேச்சுவார்த்தையை நடத்தி தீர்வு காண்பது! அதை விட்டுப் போட்டு வெறும் வாய் மெல்லுவது மாதிரி 'சமாதானம்', 'அரசும் புலிகளும் போரை நிறுத்துங்கோ' என்று கூவிக் கொண்டிருப்பதை நம்பக் கூடாது. நம்பவே கூடாது!

---

"முன்னே பின்னே பார்க்காத என்னை எப்படி அடையாளம் கண்டு பிடிச்சீங்க?"

"ஒரு தடவை உங்களைப் பக்க வாட்டில் பார்த்திருக்கிறேன்!"



காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/40/NEWS/99)




அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.


கிளை:
105. காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு. கொழும்பு

436331


# தங்கமாலை



# அலங்காரம்



← முரசு-அம்மன் ஜுவல்ஸ் தங்கமாலைப் பரிசுப் போட்டியில் தங்கமாலை வென்ற முரசு வாசகி இவர்தான்.

அம்மன் ஜுவல்ஸ் உரிமையாளர் திரு கணேசன் அவர்கள் தங்கமாலை பரிசை வழங்குகிறார். பரிசு பெற்ற அதிஷ்டசாலியின் பெயர் ரி.சந்திரா, நோர்வூட்.

இரண்டாம் பரிசான தங்க மோதிரமும் அம்மன் ஜுவல்ஸ் உரிமையாளரால் முரசு வாசகி எம். பியாமாவுக்கு (ஹெம்மாதகம) 9.07.99 அன்று வழங்கப்பட்டது.

↑ இப்புகைப்படம் வன்னியில் புதுக்குடியிருப்பில் எடுக்கப்பட்டது. நாயாருக்கு காற் சட்டை, சட்டை அணிவித்து படு ஜோராகப் படம் பிடித்து, முரசு வாசகர் அனுப்பி வைத்துள்ளார்.

போரின் மத்தியிலும் வாழ்க்கை நகர்கிறது. பொருளாதார முற்றுகைகள் மத்தியில் வன்னி மக்கள் வளையாது இருக்கிறார்கள்.

சந்தோசங்களுக்கு குறைவில்லை. போருக்குள் வாழப் பழகிவிட்டனர். இந்தப் படம் தாமும் மகிழ்ந்து, பிறரையும் மகிழ்விக்க வன்னி வாசகரால் அனுப்பப்பட்டது.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657


# பெரியது




→ மனித உடம்பில் பல முக்கியமான இயக்கப் பணிகளை புரியும் தசை நார்களைக் காட்டும் படம் இது. மனிதன் இரு கால்களையும் மடக்கி சம்மணமிட்டிருக்கும்போது, அதற்கேற்றாற்போல் இடையின் மேல் பகுதியைக் கீழ் பகுதியின் நிலைக்கு இழுத்து வைக்க உதவும் 'சார்ட்டோரியஸ்' எனப்படும் நீளமான- ஒடுக்கமான தசை நாரை அம்புக்குறிகள் காட்டுகின்றன.

இத்தசைநார் இடுப்பு எலும்புக் கட்டிலிருந்து கணுக்காலுக்கிடையில் பின்புறமாக உள்ள பெரிய எலும்புடன் தொட்டு நிற்கிறது. மனித உடலிலுள்ள தசை நார்களில் அதிக நீளமானதும் இதுவே.

அதனால் இந்த தசைநாரே மனித உடலில் பெரிய தசை நாராக கின்னஸிலும் இடம்பெற்றுள்ளது. மனித உடலேகூட ஒரு உலக அதிசயம்தானே!



# செல்லிடப் பேசி

↗ஜப்பான் மக்களுக்குப் போதுமென்ற மனமே கிடையாது. ஏதாவது ஒரு பொருளைக் கண்டு பிடித்து சந்தைக்கு அனுப்பிவிட்டு, 'ஹாயா'க இருக்க மாட்டார்கள். அந்தப் பொருளையே மாற்றி மாற்றி வடிவமைத்து மென்மேலும் மெருகூட்டுவார்கள்.

இந்த ஜப்பானிய மங்கையின் கையில் காணப்படுவது, உலகிலேயே மிகவும் எடை குறைந்த கைக்கடக்கமான செல்லிடப்பேசி (செல்லுலார்).

இதன் எடை ஆக 59 கிராம் மட்டும்தான். அண்மையில் டோக்கியோ நகரில் நடைபெற்ற '99 வர்த்தகக் கண்காட்சியில் கியோசெரா எலத்திரனியல் நிறுவனம் இந்தத் தொலைபேசியைக் காட்சிக்கு வைத்திருந்தது.

இதன் சந்தை விலை ஜப்பான் நாணயத்தில் 32,800 யென். அதன் அமெரிக்க நாணயப்பெறுமதி 270 டொலர். நம்மூர் மதிப்பில் 19 ஆயிரம் ரூபாய். இதில் தொடர்ந்து ஒரே தடவையில் 120 நிமிடங்கள் பேசலாம்.

# இது நம்முறை



→ உலகின் மிகச் சிறந்த சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் இம்முறை உலகக் கோப்பைப் போட்டியில் 20 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதன் மூலம் உலகக் கோப்பைப் போட்டியில் அதிக விக்கெட்டுக்களைச் சாய்த்த வீரர் என்ற பெருமையும் இவருக்கே.

13.09.69 இல் பிறந்த ஷேன் வோர்ன் தனது 30வது பிறந்தநாளை விரைவில் கொண்டாடப்போகிறார்.

இலங்கை அணி முன்னாள் கப்டன் அர்ஜுன ரணதுங்காவை ஷேன்வோர்ன் கடுமையாக விமர்சித்திருந்தார்.

இதனையிட்டு விளக்கம் கோரப்பட்டபோதும், ஷேன் வோர்ன் மறுக்கவில்லை. அபராதம் கட்டினார்.

ஆனால் கொழும்புக்கு இம்முறை வந்தபோது, "ரணதுங்காவை நான் விமர்சிக்கவில்லை. பத்திரிகைகள் தவறாக எழுதிவிட்டன!" என்று கூறியிருக்கிறார்.

உண்மையில் ஷேன் வோர்ன் அவ்வாறு கூறியிருக்காது விட்டால் அப்போதே மறுத்து விளக்கமளித்து, அபராதம் கட்டாது இருந்திருக்கலாம். ரணதுங்காவை விமர்சித்தது உண்மைதான் என்று கொழும்பில் வைத்தே கூறுவது முறையல்ல என்பதால் மழுப்பிவிட்டார்.

தற்போது கிரிக்கெட் உலகில் அவுஸ்திரேலியாவின் கொடி தான் பறக்கிறது. ஷேன்வோர்ன் அதற்கு ஒரு முக்கிய காரணம்.

# உங்கள் பிறந்தநாள் வாழ்த்து



பிரவீனா புஸ்பராஜா
(யோபிஹா) 11.09.1999

திருகோணமலையைச் சேர்ந்த புஸ்பராஜா-இந்திராணி தம்பதியின் செல்வப்புதல்வி பிரவீனா (யோபிஹா) இரண்டாவது பிறந்தநாளை கொழும்பில் தனதில்லத்தில் தங்கை கிருத்திகாவுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அம்மா, அப்பா, தங்கை கிருத்திகா, அம்மம்மா, மாமாமாரான- நடராஜா, தங்கேஸ்வரன், டினேஷ்குமார், பெரியம்மா சித்ரா, மாமிமாரான- செல்வமலர், ஷைலஜா, சித்தி பரமேஸ், சித்தா ஸ்டாலின், அண்ணாமாரான- பிரதாப், தனஞ்ஜன், சுசாந்தன், துஷ்யந்தன், அருண்பிரசாந்த், ரவின்ஷான், அக்கா வினோதர்ஷினி, மச்சான்மார் ஜொனாத்தன், கிருஷ்டி, மச்சாள் தர்ஷிகா தம்பி நிதுர்ஷான், ஆன்டிமார் சர்மிளா, சுகிர்தா, யசோ, கனகா, லதா, நிலாக்கா. அங்கிள்மார் குகன், கிருபா ஆகியோரும். மூர்த்தி குடும்பத்தார், பவான் குடும்பத்தார், சாந்தன் குடும்பத்தார், பத்மன் குடும்பத்தார், அரிச்சந்திரா குடும்பத்தார், அசோக் குடும்பத்தார், வசந்தன் குடும்பத்தார், ஆகியோரும், திருகோணமலையைச் சேர்ந்த அப்பம்மா, அத்தைமார், மாமாமார், சித்தாமார், சித்திமார், யோஹாநந்தம் குடும்பத்தார், சித்து அத்தை, நந்தன் குடும்பத்தார், அன்னப்பிள்ளை குடும்பத்தார், நஜிமுமன் குடும்பத்தார், முருகாநந்தம் குடும்பத்தார், ஆகியோரும் பிரவீனாவை பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் துர்க்கை அம்மன் அருள் பெற்று வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: மூர்த்தி ஜுவலர்ஸ், வெள்ளவத்தை.



படிப்பகம்